தமிழ்நாடு அரசு

# தமிழ்

## ஏழாம் வகுப்பு

தீண்டாமை
மனிதநேயமற்ற செயல் – பெருங்குற்றம்

## பள்ளிக் கல்வித்துறை

தமிழ்நாடு அரசு
இலவசப் பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது.

(விற்பனைக்கு அன்று)

© தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு: தி.பி. 2042 (2011)
(சமச்சீர்க்கல்வி – பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட நூல்)

குழுத்தலைவர்

**எ. முத்துக்கிருஷ்ணன்,**

( மேனாள் கல்விப்பேரவைக் குழு உறுப்பினர், சென்னைப் பல்கலைக்கழகம் )
முதுநிலை விரிவுரையாளர், மாவட்டக் கல்வி பயிற்சி நிறுவனம்,
திருவூர் – 602 025, திருவள்ளூர் மாவட்டம்.

மேலாய்வாளர்கள்

**முனைவர் கே. கண்ணாத்தாள்,**

இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அழகப்பா அரசுக் கலைக் கல்லூரி,
காரைக்குடி – 630 003,
சிவகங்கை மாவட்டம்.

**முனைவர் பழ. சம்பத்து,**

முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்டக் கல்வி பயிற்சி நிறுவனம்,
கீழ்ப்பென்னாத்தூர் – 604 601,
திருவண்ணாமலை மாவட்டம்

நூலாசிரியர்கள்

**புலவர் அருணா. பொன்னுசாமி,**

மேனாள் தலைமையாசிரியர்,
அண்ணா நகர், கரூர்,
கரூர் மாவட்டம்.

**சி. வாலாம்பிகை,**

தமிழாசிரியர்,
சேதுபதி மேனிலைப் பள்ளி,
மதுரை – 625 001.

**ப. ஆறுமுகம்,**

தமிழாசிரியர்,
அரசு உயர்நிலைப் பள்ளி,
பேரணி அஞ்சல், விழுப்புரம் மாவட்டம்.

**ப. குணசேகரன்,**

முதுகலைத் தமிழாசிரியர்,
ப.செ.க.க. அரசு மேனிலைப் பள்ளி,
கோடம்பாக்கம், சென்னை– 600 024.

**பி. செந்தில் வளவன்,**

முதுகலைத் தமிழாசிரியர்,
எம்.கே.வி. அரசு மேனிலைப் பள்ளி,
ஆரணி, திருவள்ளூர்மாவட்டம்.

**எஸ். சுந்தரராமன்,**

தமிழாசிரியர்,
எஸ்.பி.ஓ.ஏ. பதின்ம மேனிலைப் பள்ளி,
அண்ணாநகர் மேற்கு, சென்னை– 600 101.

கணினி அச்சு : கே. ஜெயபிரபாதேவி    ஓவியம் : நல்ல. காசிராஜன்    வடிவமைப்பு : மாரீஸ்

நூல் அச்சாக்கம்

**தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,**
**கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.**

விலை ரூ.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

வெப் ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன்சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

- மனோன்மணியம் பெ. சுந்தரனார்

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், 'சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதிநெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

'இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறப்புகள்.

எனது நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக் காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்துவிளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.'

# செம்மொழி வாழ்த்து

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
பிறந்த பின்னர், யாதும் ஊரே, யாவரும் கேளிர்!

உண்பது நாழி உடுப்பவை இரண்டே
உறைவிடம் என்பது ஒன்றேயென
உரைத்து வாழ்ந்தோம்
உழைத்து வாழ்வோம்.
தீதும் நன்றும் பிறர்தர வாரா எனும்
நன் மொழியேநம் பொன் மொழியாம்!

போரைப் புறம் தள்ளிப்
பொருளைப் பொதுவாக்கவே
அமைதி வழி காட்டும்
அன்பு மொழி
அய்யன் வள்ளுவரின் வாய்மொழியாம்!

ஓரறிவு முதல் ஆறறிவு உயிரினம் வரையிலே
உணர்ந்திடும் உடலமைப்பைப் பகுத்துக் கூறும்
ஒல்காப் புகழ் தொல்காப்பியமும்
ஒப்பற்ற குறள் கூறும் உயர் பண்பாடு
ஒலிக்கின்ற சிலம்பும் மேகலையும்
சிந்தாமணியுடனே வளையாபதி குண்டலகேசியும்
செம்மொழியான நம் தமிழ் மொழியாம்!

அகமென்றும் புறமென்றும் வாழ்வை
அழகாக வகுத்தளித்து
ஆதி அந்தமிலாது இருக்கின்ற இனியமொழி–
ஓதி வளரும் உயிரான உலக மொழி–

கம்ப நாட்டாழ்வாரும்
கவியரசி அவ்வை நல்லாளும்
எம்மதமும் ஏற்றுப் புகழ்கின்ற
எத்தனையோ ஆயிரம் கவிதை நெய்வோர்–தரும்,
புத்தாடை அனைத்துக்கும்
வித்தாக விளங்கும் மொழி!

நம்மொழி–நம்மொழி–அதுவே
செம்மொழி–செம்மொழி–நம் தமிழ் மொழியாம்!
வாழிய வாழியவே! வாழிய வாழியவே! வாழிய வாழியவே!

– கலைஞர் மு. கருணாநிதி

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

- மகாகவி இரவீந்திரநாத தாகூர்

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற
நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும் சிந்துவையும் கூர்ச்சரத்தையும்
மராட்டியத்தையும் திராவிடத்தையும் ஒரிசாவையும்
வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில்
எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின்
இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால்
வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே, உனக்கு
வெற்றி! வெற்றி! வெற்றி!

# பொருளடக்கம்


| இயல் | | பக்கம் |
|---|---|---|
| 1. | வாழ்த்து | 1 |
| | திருக்குறள் | 3 |
| | செம்மொழித் தமிழ் | 6 |
| | ஊரும் பேரும் | 10 |
| | சார்பெழுத்துகளின் வகைகள் | 13 |
| 2. | புறநானூறு | 19 |
| | முதுமொழிக்காஞ்சி | 20 |
| | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் | 23 |
| | கோவூர்கிழார் | 27 |
| | உயிர்மெய், ஆய்தம் | 31 |
| 3. | திரிகடுகம் | 36 |
| | கணிதமேதை இராமானுஜம் | 39 |
| | நன்றிப்பரிசு | 44 |
| | நால்வகைச் சொற்கள் | 47 |
| 4. | தனிப்பாடல் | 53 |
| | காந்தியடிகள் கடிதம் | 55 |
| | உரியது | 58 |
| | இடுகுறிப்பெயரும் காரணப்பெயரும் | 61 |
| 5. | திருவாரூர் நான்மணிமாலை | 66 |
| | மெய்ப்பொருள் கல்வி | 67 |
| | தூங்கா நகர் | 70 |
| | அறிவு நுட்பம் | 76 |
| | அறுவகைப் பெயர்ச்சொற்கள் | 79 |

| இயல் | | பக்கம் |
| --- | --- | --- |
| 6. | ஏர்முனை | 86 |
| | பொங்கல் வழிபாடு | 88 |
| | நெசவு | 90 |
| | தமிழ் நாடக முன்னோடிகள் | 94 |
| | வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் | 99 |
| 7. | திருக்குறள் | 105 |
| | முக்கூடற்பள்ளு | 108 |
| | இயற்கை வேளாண்மை | 110 |
| | நிலைத்த செல்வம் கல்விச் செல்வம் | 117 |
| | வேற்றுமை, அடைமொழி | 120 |
| 8. | தனிப்பாடல் | 128 |
| | தாலாட்டுப் பாடல் | 129 |
| | தமிழகத்தின் அன்னிபெசண்ட் | 131 |
| | தூரத்து ஒளி | 134 |
| | மூவகைப்போலிகள் | 136 |
| 9. | அம்மானை | 141 |
| | சீவகசிந்தாமணி | 142 |
| | தமிழக விளையாட்டுகள் | 144 |
| | நண்பன் | 148 |
| | சொல் – பகாப்பதம், பகுபதம் | 150 |
| 10. | எங்கள் தமிழ் | 155 |
| | உழவின் சிறப்பு | 157 |
| | ஓவியக்கலை | 159 |
| | கொடைக்குணம் | 165 |
| | அணியிலக்கணம் | 168 |

## மனப்பாடப் பகுதி

| இயல் | செய்யுள் | அடிகள் |
| --- | --- | --- |
| 1. | வாழ்த்து | 4 |
| | திருக்குறள் ( 1, 2, 3, 8, 9 ) | 10 |
| 2. | புறநானூறு | 4 |
| 3. | திரிகடுகம் ( 2 ) | 4 |
| 4. | தனிப்பாடல் | 4 |
| 5. | மெய்ப்பொருள் கல்வி (13 – 16 அடிகள்) | 4 |
| 6. | ஏர்முனை (7 – 14 அடிகள்) | 8 |
| | பொங்கல் வழிபாடு (14 – 21 அடிகள்) | 8 |
| 7. | திருக்குறள் (2, 4, 6, 8, 10) | 10 |
| 8. | தனிப்பாடல் | 4 |
| 10. | எங்கள் தமிழ் | 8 |
| | உழவின் சிறப்பு | 4 |
| | மனப்பாட அடிகள் மொத்தம் | 72 |

(பாடநூலுள் ★ இவ்வுடுக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி)


## வாழ்த்து

பண்ணினை இயற்கை வைத்த
பண்பனே போற்றி போற்றி
பெண்மையில் தாய்மை வைத்த
பெரியனே போற்றி போற்றி
வண்மையை உயிரில் வைத்த
வள்ளலே போற்றி போற்றி
உண்மையில் இருக்கை வைத்த
உறவனே போற்றி போற்றி. *

– திரு. வி. கலியாணசுந்தரனார்

**பொருள் :** இசையை இயற்கையோடு இணைத்த பண்பாளனே! பெண்களுக்குத் தாய்மையால் பெருமை சேர்த்த பெருமைக்குரியவனே! கொடைத்தன்மையை உயிரினங்களுக்குத் தந்த வள்ளல் தன்மை உடையவனே! உள்ளத்தில் உண்மையை வைத்த உறவுடையோனே! உன்னை வாழ்த்துகின்றேன்.

**சொற்பொருள் :** பண் – இசை ; வண்மை – கொடைத்தன்மை ; போற்றி – வாழ்த்துகிறேன்.



**ஆசிரியர் குறிப்பு :**

**பெயர்** : திரு. வி. கலியாணசுந்தரனார் (திருவாரூர் விருத்தாசலனார் மகனார் கலியாணசுந்தரனார் என்பதன் சுருக்கமே திரு. வி. க. என்பது.)

**பெற்றோர்** : விருத்தாசலனார் – சின்னம்மையார்.

**பிறந்த ஊர்** : காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள துள்ளம். இவ்வூர், தற்பொழுது தண்டலம் என அழைக்கப்படுகிறது. இவ்வூர் சென்னையை அடுத்துள்ள போரூருக்கு மேற்கே உள்ளது.

**சிறப்பு** : இவர் தொழிலாளர் நலனுக்கும் பெண்கள் முன்னேற்றத்திற்கும் அயராது பாடுபட்டார்; மேடைத்தமிழுக்கு இலக்கணம் வகுத்தார். இவரின் தமிழ்நடையைப் போற்றித் தமிழ்த்தென்றல் எனச் சிறப்பிக்கப்படுகிறார்.

* மனப்பாடப்பகுதி

படைப்புகள் : மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, தமிழ்த்தென்றல், உரிமை வேட்கை, முருகன் அல்லது அழகு முதலியன.

காலம் : 26.08.1883 – 17.09.1953

நூல் குறிப்பு : வாழ்த்துப் பகுதியில் இடம்பெற்றுள்ள இப்பாடல், திரு. வி. க. இயற்றிய பொதுமை வேட்டல் என்னும் நூலில் போற்றி என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது. நாடு, மதம், இனம், மொழி, நிறம் அனைத்தையும் கடந்து உலகத்தை ஒரு குடும்பமாகக் கருதுவதே பொதுமை வேட்டல். தெய்வநிச்சயம் முதலாகப் போற்றி ஈறாக உள்ள நாற்பத்து நான்கு தலைப்புகளில், நானூற்று முப்பது பாக்களால் ஆனது இந்நூல்.

திரு.வி.க. சென்னை இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

நூல் பயன் : இந்நூலைக் கற்பார்க்கு நாடு, மதம், மொழி, இன வேற்றுமைகள் விலகும். சமுதாய ஒற்றுமை வளரும்; மனித நேயம் மலரும்; உலகம் தழுவிய ஒருமைப்பாட்டுணர்வு உண்டாகும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) திரு. வி. கலியாணசுந்தரனார் பிறந்த ஊர் ____________ .

ஆ) திரு.வி.க. இயற்றிய 'பொதுமை வேட்டல்' என்னும் தலைப்பில் உள்ள பாக்களின் எண்ணிக்கை ____________ .

2. உரிய விடையைத் தேர்வு செய்க.

'வண்மையை உயிரில் வைத்த' இந்த அடியில் 'வண்மை' என்னும் சொல் தரும் பொருள் ____________ .

1. வலிமை 2. கொடைத்தன்மை 3. வளமை

### ஆ) குறுவினாக்கள்

1. திரு. வி. க. வின் பெற்றோர் யாவர்?
2. திரு. வி. க. இயற்றிய நூல்கள் நான்கனை எழுதுக.
3. இறைவன் உயிரில் வைத்தது எதனை?

### இ) சிறுவினாக்கள்

1. திரு. வி. க. பற்றிக் குறிப்பு எழுதுக.
2. இறைவனின் பெருமையைத் திரு. வி. க. எவ்வாறெல்லாம் குறிப்பிடுகின்றார்?

# திருக்குறள்

## வாய்மை

1. வாய்மை எனப்படுவ(து) யாதெனின் யாதொன்றும்
   தீமை இலாத சொலல். *

பொருள் : வாய்மை எனப் போற்றப்படும் பண்பு எதுவெனில், அது மற்றவருக்கு எவ்வகையிலும் தீங்கு தராத சொற்களைப் பேசுதல்.

2. பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
   நன்மை பயக்கு மெனின். *

பொருள் : பிறர்க்குக் குற்றமற்ற நன்மையைத் தருமாயின், பொய்யும் உண்மையாகக் கருதப்படும்.

சொற்பொருள் : புரை – குற்றம்; பயக்கும் – தரும்.

3. தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
   தன்நெஞ்சே தன்னைச் சுடும். *

பொருள் : தன் நெஞ்சம் அறிந்து பொய் கூறக்கூடாது. கூறின், தன் நெஞ்சமே தன்னை வருத்தும்.

சொற்பொருள் : சுடும் – வருத்தும்.

4. உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
   உள்ளத்துள் எல்லாம் உளன்.

பொருள் : ஒருவன் தன் உள்ளம் அறிய பொய்யில்லாமல் நடப்பானானால், அத்தகையவன் உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் ஆவான்.

5. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
   தானம்செய் வாரின் தலை.

பொருள் : மனத்தொடு பொருந்திய வாய்மை பேசுபவன், தானம் தவம் செய்கிறவர்களைக் காட்டிலும் உயர்ந்தவனாகக் கருதப்படுவான்.

6. பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை
   எல்லா அறமும் தரும்.

பொருள் : பொய் பேசாமை ஒருவனுக்கு எல்லாப் புகழையும் தரும்; அஃது அவன் வருந்தாமலேயே அவனுக்கு எல்லா நலன்களையும் தரும்.

சொற்பொருள் : அன்ன – அவை போல்வன; எய்யாமை – வருந்தாமல்.

7. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

பொருள் : பொய் சொல்லாமை என்னும் அறத்தை இடைவிடாமல் கடைப்பிடித்தால், வேறு எந்த அறங்களையும் செய்யவேண்டியது இல்லை.

8. புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும். *

பொருள் : உடல் தூய்மை நீரால் உண்டாகும்; உள்ளத்தூய்மை வாய்மையால் வெளிப்படும்.

சொற்பொருள் : அகம் – உள்ளம்; அமையும் – உண்டாகும்.

9. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. *

பொருள் : சான்றோர்க்குப் புறஇருளை நீக்கும் விளக்குகளைவிட, அகத்தின் இருளை நீக்கும் பொய்பேசாமையே உண்மையான விளக்காகும்.

10. யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

பொருள்: யாம் உண்மையாகக் கண்ட பொருள்களுள், எவ்வகையிலும் உண்மையைவிடச் சிறந்தவையாகச் சொல்லத்தக்கவை வேறில்லை.



ஆசிரியர் குறிப்பு : திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவர், சுருங்கச்சொல்லி விளங்க வைப்பதில் வல்லவர். இவரைப்பற்றித் தெளிவான வரலாறு இதுவரையில் கிடைக்க வில்லை. இவருக்கு நாயனார், முதற்பாவலர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் என்னும் பெயர்களும் வழங்குகின்றன. இவரின் காலம் கி.மு.31 என்பர்.

நூல் குறிப்பு : குறள் வெண்பாக்களால் அமைந்த நூல் திருக்குறள். இது, திரு என்னும் அடைமொழியைப் பெற்றுத் திருக்குறள் என வழங்கப்பெறுகிறது. இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. இதில், நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்கள் உள்ளன; ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பத்துக் குறட்பாக்களென ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்கள் உள்ளன. இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

மனிதன் மனிதனாக வாழ,
மனிதன் மனிதனுக்குக் கூறிய
அறவுரைதான் திருக்குறள்.

திருக்குறள், உலகம் ஏற்கும் கருத்துகளைக் கொண்டுள்ளதால் ‘உலகப் பொதுமறை’ என வழங்கப்பெறுகிறது. இது, தமிழ்மொழியிலுள்ள அறநூல்களுள் முதன்மையானது. இந்நூல் நூற்றேழு மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது.

நூல் பயன் : திருக்குறள் கற்பதனால் மனித வாழ்க்கை செம்மையுறும்; பண்புகள் வளரும்; உலகெலாம் ஒன்றெனும் உயர்குணம் தோன்றும்; மனிதர்களிடையே வேறுபாடுகள் மறையும்; எல்லா உயிரிடத்தும் அன்பு தழைக்கும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) குறள் வெண்பாக்களால் ஆன நூல் __________ .

ஆ) திருக்குறளில் __________ அதிகாரங்கள் உள்ளன.

இ) உலகம் ஏற்கும் கருத்துகளைக் கொண்டுள்ளதால் திருக்குறள் __________ என வழங்கப்படுகிறது.

2. உரிய விடையைத் தேர்வு செய்க.

அ) உடலை நீர் தூய்மை செய்யும்; உள்ளத் தூய்மையை வெளிப்படுத்த இக்குறளில் வந்துள்ள சொல் __________ .

1. இன்னாச்சொல் 2. வாய்மை 3. பழிச்சொல்

ஆ) வாய்மை எனப்படுவது யாதெனில்

1. மற்றவர்களுக்குத் தீங்கு தராத சொற்களைப் பேசுதல்

2. புறங்கூறாமை 3. பழிகூறாமை

3. பிரித்து எழுதுக.

அ) யாதெனின் ஆ) பொய்யாதொழுகின் இ) புறந்தூய்மை

4. சேர்த்து எழுதுக.

அ) தன் + நெஞ்சு ஆ) புகழ் + இல்லை

5. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைக்க.

இயற்கை, பெண்மை, வாய்மை, உள்ளம்.

### ஆ) குறுவினாக்கள்

1. பொய்மையும் வாய்மையாவது எப்போது?
2. வள்ளுவர் குறிப்பிடும் தூய்மைபற்றிக் குறிப்பிடுக.
3. அகவிருளைப் போக்கும் விளக்கு எது?

### இ) சிறுவினாக்கள்

1. வாய்மையின் இலக்கணமாக வள்ளுவர் குறிப்பிடுவது யாது?
2. உண்மையைப் பேசுவோரின் சிறப்பியல்புகள் யாவை?
3. அகவிருளைப் போக்கும் விளக்கைக் குறள்வழி விளக்குக.
4. உலகத்தாரின் உள்ளத்துள் இருப்பாரைப்பற்றி வள்ளுவர் கூறுவது என்ன?

# செம்மொழித் தமிழ்

## உலக மொழிகள்

உலகத்தில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. அவற்றுள் பல பேச்சுமொழிகளே. எழுத்துமொழிகளாக உள்ளனவற்றுள் இலக்கிய வளம் நிறைந்தவை மிகச் சிலவே; எளிதில் பேசவும், எளிதில் பாடல் இயற்றவும் இயற்கையாக அமைந்தது தென்மொழியாகிய தமிழ் ஒன்றே என்று வள்ளலார் அருள்கிறார். உலக மொழிகளில் சிறந்தது தமிழ்மொழியே என அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

## செம்மொழிகள்

திருந்திய செவ்வியல்புகள் பொருந்திய மொழிகள் செம்மொழிகள் எனப்படும். கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம், சீனம், எபிரேயம், அரபு, ஈப்ரு ஆகியவற்றைச் செம்மொழிகள் எனப் பட்டியலிடுகிறார் மொழியியல் அறிஞர் ச.அகத்தியலிங்கம்.

இவற்றுள் கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம் ஆகிய மொழிகள் இன்று பேச்சுவழக்கில் இல்லை.

## செம்மொழித் தமிழின் சிறப்பு

உலகில் இன்று வழங்கும் மொழிகள் தோன்றுவதற்கு முன்பாகவே எண்ணற்ற இலக்கண இலக்கிய வளங்களைக் கொண்டதாக விளங்கியது தமிழ்மொழி.

தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், இறையனார் அகப்பொருள் ஆகிய செவ்வியல் இலக்கியங்கள், தமிழைச் செம்மொழி என நிலைநாட்டுவதற்கு உரிய சான்றுகளாகத் திகழ்கின்றன.

பதினெண்கீழ்க்கணக்கில் ஒன்றான திருக்குறளுக்கு இணையான வேறு நூல் உலகில் இல்லை.

அதனால்தான் டாக்டர் கிரௌல், தமிழ்மொழி அழகான சித்திர வேலைப் பாடமைந்த வெள்ளித்தட்டு; திருக்குறள் அதில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆப்பிள்; தமிழ் என்னை ஈர்த்தது; குறளோ என்னை இழுத்தது என்று மொழிந்து இன்புற்றார்.

## தமிழின் தனிப்பெருந்தன்மைகள்

இயல்பாகத் தோன்றிய தமிழ்மொழியின் உயரிய பண்புகள், தன்மைகள்பற்றி ஒவ்வொரு தமிழனும் அறிந்துகொள்ளவேண்டும்.

### அ) தொன்மை

உலகின் மிகப்பழைமையான நிலப்பகுதி குமரிக்கண்டம். அந்நிலப்பகுதி கடல்கோளால் மூழ்கிவிட்டது. அத்தொன்னிலத்தில்தான் தமிழ் தோன்றியதெனத் தண்டியலங்கார மேற்கோள் செய்யுள் கூறுகிறது.

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

### ஆ) மென்மை


தமிழ் மெல்லோசை மொழியாயிருப்பதனாலேயே, அஃது உலக முதன் மொழியாய்த் தோன்றியும் வழக்கொழியாமல் இன்றும் இளமை மாறாமல் கன்னித்தமிழாய் இருந்து வருகின்றது. தாய்மொழியாகக் கொள்ளாதவரும் முயற்சி வருத்தமின்றி எளிதாக அதைக் கற்கவும் பேசவும் இயலுகின்றது. எக்காலத்தும் உள்ளத்தில் எழக்கூடிய கருத்துகளை யெல்லாம் தெரிவிக்கத்தக்க சொற்களைக் கொண்டதாகத் தமிழ்மொழி விளங்குகிறது.

### இ) தாய்மை

பெற்றோரைக் குறிக்கும் அம்மை, அப்பன் என்னும் குமரிநாட்டுத் தமிழ்ச் சொற்கள், வடமொழி உட்பட உலகப் பெருமொழிகள் பலவற்றிலும் வடிவு திரிந்து வழங்கி வருகின்றன. தமிழ்ச்சொல் இல்லாத உலகப் பெருமொழி யாதொன்றும் இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

### ஈ) தூய்மை

தமிழில் வழங்கிய ஆயிரக்கணக்கான பேச்சு வழக்குச் சொற்களும், நூல்வழக்குச் சொற்களும் காலவெள்ளத்தில் மறைந்து போயின. எஞ்சியுள்ள பழஞ்சொற்களைக் கொண்டும் தேவைக்கேற்பப் புதுச் சொற்களைப் புனைந்தும் பிறமொழித் துணையின்றித் தமிழால் தனித்து இயங்க இயலும். இவ்வுண்மையை அறிந்தே, தமிழ் பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்குவது மட்டுமன்றித் தழைத்தோங்கவும் செய்யும் என்று கூறினார் கால்டுவெல்.


கால்டுவெல்

### உ) செம்மை

மக்களுக்கு ஒழுக்க வரம்பு தேவையானது போலவே மொழிக்கு இலக்கண வரம்பும் சொற்களின் திருந்திய வடிவும் இன்றியமையாதன. இவற்றைத் தமிழில் உள்ளதுபோல், வேறு எம்மொழியிலும் காண இயலாது. அதனாலேயே தமிழ், செந்தமிழ் எனப்பட்டது.

### ஊ) மும்மை

முதற்சங்கத்திலிருந்தே இசையும் நாடகமும் இயற்றமிழோடு இணைந்து முத்தமிழென வழங்கி வரலாயிற்று. முதலிரு சங்கத்திலும் வழங்கிய இலக்கண நூல்கள் முத்தமிழ் பற்றியனவாகவே இருந்தன.

### எ) இயற்கை வளர்ச்சி

எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே என்பது தொல்காப்பிய நூற்பா. தமிழில் இடுகுறிப் பெயர்கள் மிகவும் குறைவு. ஒருமை, பன்மை என்னும் இருவகை எண் மட்டுமே தமிழில் உண்டு. ஆனால், வடமொழியில் ஒருமை, இருமை, பன்மையென மூவகை எண் உள்ளன. தமிழில் உயிர்களுக்கு மட்டுமே பால்வேறுபாடு உண்டு; பொருள்களுக்குப் பால்வேறுபாடு இல்லை. ஆனால், பிறமொழிகளில் இத்தகைய பகுப்புமுறை இல்லை.

### ஏ) இலக்கண நிறைவு

எல்லா மொழிகளும் எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் கூறும். ஆனால், தமிழ் அவற்றுடன் சேர்த்து வாழ்வியலுக்கான பொருளிலக்கணத்தையும் கூறுகிறது. அதனையும் அகம், புறம் என இருவகையாகப் பகுத்துள்ளது.

### ஐ) செய்யுள் சிறப்பு

பண்டைத் தமிழ் இலக்கியங்களும் இலக்கணங்களும் செய்யுள் வடிவிலேயே இருந்தன. கலிப்பா முதலான செய்யுள் வகைகள் வேறு எம்மொழியிலும் இல்லை.

### ஒ) அணிச்சிறப்பு

புலவர்கள் செய்யுளுக்குச் சிறப்புச் சேர்க்க உவமை, உருவகம் முதலிய நூற்றுக் கணக்கான அணிகளைப் பயன்படுத்திப் பாடல்களை இயற்றியுள்ளார்கள்.

### ஓ) நூல் சிறப்பு

ஆயிரக்கணக்கான தமிழ் நூல்கள் இயற்கைச் சீற்றங்களால் அழிந்துபோயின. கிடைத்தனவற்றுள் சங்ககால நூல்கள் தமிழர்தம் மொழியையும் பண்பாட்டையும் விளக்குவனவாகத் திகழ்கின்றன.

இத்தகைய விழுமிய வியத்தகு பண்பாடுகளையும் நூல்களையும் கொண்ட உலகில், முதல் உயர்தனிச் செம்மொழியாம் தமிழ்மொழியை உணர்ந்து கற்றுப் போற்றிக் காப்போம்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்வு செய்க.

அ) உலக மொழிகளில் சிறந்து விளங்குவது

1. தமிழ்மொழி 2. வடமொழி 3. மலையாளம்

ஆ) அம்மை, அப்பன் என்னும் சொல் வழங்கும் நாடு

1. கொங்குநாடு 2. குமரிநாடு 3. நாஞ்சில்நாடு

இ) வாழ்வியலுக்கு இலக்கணம் கூறும் மொழி

1. வடமொழி 2. தெலுங்குமொழி 3. தமிழ்மொழி

2. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) உலகில் மிகப்பழைமையான நிலப்பகுதி ________ .

ஆ) தமிழில் ________ பெயர்கள் மிகவும் குறைவு.

இ) எல்லா மொழிகளிலும் எழுத்துக்கும் ________ இலக்கணம் உண்டு.

ஈ) புலவர்கள் செய்யுளுக்குச் சிறப்புச் சேர்க்க உவமைகளையும் ________ பயன்படுத்திப் பாடல்கள் இயற்றினார்கள்.

### ஆ) குறுவினாக்கள்

1. உலக மொழிகளில் சிறந்தமொழி எது ? எங்ஙனம்?
2. செம்மொழியாகக் கருதப்படும் மொழிகள் யாவை ?
3. தமிழின் இளமை மாறாத் தன்மைக்குக் காரணம் என்ன ?
4. தமிழ், உயர்தனிச் செம்மொழி எனப் போற்றப்படுவதேன் ?
5. தமிழர்தம் பண்பாட்டை விளக்கும் நூல்கள் யாவை ?

### இ) சிறுவினாக்கள்

1. செம்மொழித் தமிழின் தனிச்சிறப்புகள் யாவை ?
2. தமிழ், தொன்மைமொழி என்பதற்குச் சான்று தருக.
3. தமிழ், தனித்தியங்கும் மொழி என்பதைக் குறிப்பிடுக.

### ஈ) நெடுவினா

தமிழின் தனிப்பெருந்தன்மைகளை விளக்குக.

# ஊரும் பேரும்

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழ் மக்கள், தம் குடியிருப்புப் பகுதிகளை ஊர் என்னும் பெயரால் குறித்தனர். ஊர் என்னும் இத்தமிழ்ச்சொல் உலகின் பல நாடுகளில் வழங்குவது வியப்பளிக்கிறது. பாபிலோன் அருகே ஊர் என்னும் பெயரில் ஒரு நகரும், ஊர்நம்மு என்னும் ஊரும் உள்ளதாம். நாளடைவில் பல்வேறு ஊர்கள் உருவாக, நிலவகைக்கேற்பப் பெயரிட்டு மலையூர், காட்டூர், மருதூர், கடலூர் என வழங்க, மக்கள் தலைப்பட்டனர். இவ்வாறு தமிழகத்தில் ஊரும் பேரும் தோன்றின.

காண்பூர்,
மைசூர்,
சிங்கப்பூர்,
கோலாலம்பூர்,
மணிப்பூர்.

## குறிஞ்சி நில ஊர்கள்

தமிழகத்தில் வளமார்ந்த மலைகள் பலவுண்டு. மலையின் அருகே உள்ள ஊர்களுக்கு நாகமலை, ஆனைமலை, சிறுமலை, திருவண்ணாமலை, விராலிமலை, வள்ளிமலை எனப் பெயர்கள் வழங்குவதைக் காணலாம்.

ஓங்கியுயர்ந்த நிலப்பகுதி மலை எனவும், மலையின் உயரத்தில் குறைந்ததைக் குன்று எனவும், குன்றிலும் உயரத்தில் குறைந்ததைக் கரடு எனவும், பாறை எனவும் பெயரிட்டு அழைத்தனர். இவற்றையொட்டி வாழ்ந்த மக்கள், தம்வாழ்விடங்களுடன் ஊர் என்னும் பெயரையும் சேர்த்து ஊர்ப்பெயர்களாக்கினர்.

குன்றை அடுத்துள்ள ஊர்கள் குன்றூர், குன்றத்தூர், குன்றக்குடி என வழங்கப் பெற்றன. பூம்பாறை, சிப்பிப்பாறை, மட்டப்பாறை, வால்பாறை, குட்டப்பாறை என்னும் ஊர்ப்பெயர்களுக்கான காரணத்தையும் இதனால் அறியலாம்.

மலையைக் குறிக்கும் வடசொல், கிரி என்பதாகும். சிவகிரி, கிருஷ்ணகிரி, நீலகிரி, கோத்தகிரி என்பன மலையையொட்டி எழுந்த ஊர்ப்பெயர்களே.

குறிஞ்சி நிலமக்கள் மலையிலிருந்து பிற இடங்களுக்குச் சென்று தங்கிய போதும் தங்கள் நிலப்பெயரை மறவாது குறிச்சி, ஆழ்வார்க்குறிச்சி, கல்லிடைக்குறிச்சி, கள்ளக்குறிச்சி, மொடக்குறிச்சி எனப் பெயர் வைத்துக் கொண்டனர்போலும். குறிஞ்சி என்னும் சொல்லே மருவிக் குறிச்சியாயிற்று எனலாம்.

## முல்லை நில ஊர்கள்

தமிழகத்தில் மரஞ்செறிந்த காடுகள் பழங்காலத்தில் மலிந்திருந்தன. மரங்கள் சூழ்ந்த பகுதிக்குக் குடிபெயர்ந்த மக்கள், மரங்களுக்குப் பெயர்சூட்டி, அம்மரப் பெயர்களோடு ஊர்ப்பெயர்களையும் வழங்கினர். அத்தி (ஆர்) மரங்கள் சூழ்ந்த ஊர்

ஆர்க்காடு எனவும், ஆல மரங்கள் நிறைந்த ஊர் ஆலங்காடு எனவும், களாச்செடிகள் நிறைந்த பகுதி களாக்காடு எனவும், மாமரங்கள் செழித்திருந்த இடம் மாங்காடு எனவும், பனைமரங்கள் நிறைந்திருந்த ஊர் பனையபுரம் எனவும் பெயரிட்டுத் தம்மிடத்தைக் குறிப்பிட்டனர். காட்டின் நடுவில் வாழ்ந்த மக்கள், அங்குத் திரியும் விலங்குகளால் தமக்கும், தம் கால்நடைகளுக்கும் ஊறு நேராவண்ணம் வேலி கட்டிப் பாதுகாத்தனர். அவ்வூர்கள் பட்டி, பாடி என்றழைக்கப்பெற்றன. ஆட்டையாம்பட்டி, காளிப்பட்டி, கோவில்பட்டி, சிறுகூடல்பட்டி, சின்னகொல்லப்பட்டி, பெரியகொல்லப்பட்டி முதலிய நூற்றுக்கணக்கான பட்டிகள் தமிழ்நாட்டில் உள்ளன.

ஆடு மாடுகள் அடைக்கப் படுமிடம் பட்டி எனப்படும்.

### மருதநில ஊர்கள்

நிலவளமும் நீர்வளமும் பயிர்வளமும் செறிந்த மருதநிலக் குடியிருப்பும் ஊர் என வழங்கப்பட்டது. பொங்கிப் பெருகி வழிந்தோடி வளங்கூட்டிய ஆறும், அதன் கரையில் இருந்த உயர்ந்த மரங்களும் ஊர்ப்பெயர்களில் கலந்து நிலைத்தன. ஆறுகள் பாயும் இடங்களில் ஆற்றூர் என வழங்கும் ஊர்கள் தவறாமல் இடம்பெற்றிருக்கும். இதுவே காலப்போக்கில் பேச்சுவழக்கில் ஆத்தூர் என மருவி வழங்குகிறது.

கடம்பமரம் சூழ்ந்த பகுதி கடம்பூர், கடம்பத்தூர்; தென்னை சூழ்ந்த பகுதி தெங்கூர்; புளியமரங்கள் அடர்ந்த பகுதி புளியங்குடி, புளியஞ்சோலை, புளியம்பட்டி என வழங்கும் ஊர்கள் மரப்பெயர்த் தொகுப்பு அடிப்படையில் பெயரிடப்பட்ட ஊர்களாகும்.

நம் முன்னோர் குளம், ஏரி, ஊருணி முதலிய நீர்நிலைகளை உருவாக்கி, அவற்றோடு ஊர்ப்பெயர்களையும் இணைத்தனர். புளியங்குளம், மாங்குளம், வேப்பேரி, சீவலப்பேரி, பேராவூரணி என்பன இவ்வாறு தோன்றிய ஊர்ப்பெயர்களே.



வேலூர்க் கோட்டை

### நெய்தல் நில ஊர்கள்

பழங்காலத்தில் கடற்கரையில் உருவான பேரூர்கள் பட்டினம் எனவும், சிற்றூர்கள் பாக்கம் எனவும் பெயர் பெற்றிருந்தன. நெடிய கடற்கரையை உடைய தமிழகத்தில் பரதவர் வாழ்ந்த ஊர்கள் கீழக்கரை, கோடியக்கரை, நீலாங்கரை எனப் பெயர் பெற்றிருக்கின்றன. இக்காலத்தில் மீனவர் வாழுமிடங்களின் பெயர்கள், குப்பம் என்னும் பெயரைச் சேர்த்துப் பல்கிப் பெருகி வருகின்றன.

### அரசும் ஊர்களும்

பெருவேந்தரும் குறுநில மன்னரும் அரண்கள் அமைத்து மக்களைக் காத்தனர். அரண்களுள் கோட்டையும் ஒன்று. கோட்டை சூழவிருந்த ஊர்களே கந்தர்வக்கோட்டை, கோட்டை, தேவக்கோட்டை, நாட்டரசன் கோட்டை, நிலக் கோட்டை, பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை என வழங்கலாயின.

### திசையும் ஊர்களும்

நாற்றிசைப் பெயர்களும் ஊர்களுடன் குறிக்கப்பெற்றன. தம் ஊருக்குக் கிழக்கே எழுந்த ஊர்ப்பகுதியைக் கீழூர் எனவும், மேற்கே அமைந்த ஊர்ப்பகுதியை மேலூர் எனவும் பெயரிட்டு அழைத்தனர். தெற்கே உள்ளது தென்பழஞ்சியாகவும் வடக்கே உள்ளது வடபழஞ்சியாகவும் பெயர் பெற்றன.

நாயக்க மன்னர்கள் தமிழகத்தை எழுபத்திரண்டு பாளையங்களாகப் பிரித்துத் தம் ஆளுகைக்குட்படுத்தினார்கள். அவர்கள் ஊர்ப்பெயர்களுடன் பாளையத்தைச் சேர்த்து வழங்கினார்கள். அவ்வாறு பெயர்பெற்ற ஊர்கள் ஆரப்பாளையம், இராசபாளையம், கணக்கம்பாளையம், குமாரபாளையம், கோபிச்செட்டிப்பாளையம், கோரிப்பாளையம், மேட்டுப்பாளையம் எனப் பலவாகும்.

காலச்சுழற்சி, ஆட்சிமாற்றம், வேற்றினக்கலப்பு முதலான காரணங்களால் முதனிலை ஊர்ப்பெயர்களும் தனித்தன்மைமிக்க ஊர்ப்பெயர்களும் சிதைந்து, திரிந்து, மருவி, மாறி வழங்கலாயின.

கல்வெட்டுகளில் காணப்படும் மதிரை மருதையாகி இன்று மதுரையாக மாறியுள்ளது. கோவன்புத்தூர் என்னும் பெயர் கோயமுத்தூர் ஆகி, இன்று கோவையாக மருவியுள்ளது. இதேபோல, உங்கள் ஊர்ப்பெயரும் மாறிவிட்டதா? இல்லை, கன்னித்தமிழாய் மாறா இளமையோடு வழங்குகிறதா எனச் சிந்தனை செய்யுங்கள்.

## மாதிரி வினாக்கள்

### கட்டுரை வினாக்கள்

1. குறிஞ்சி, முல்லை நில ஊர்ப்பெயர்களை உரிய சான்றுகளுடன் விளக்குக.
2. மருதம், நெய்தல் நில ஊர்ப்பெயர்களுக்கான காரணங்களை எழுதுக.

# சார்பெழுத்துகளின் வகைகள்

மாணவர்கள் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : குழந்தைகளே வணக்கம்! மலர்விழி, உன் வீட்டில் யாரெல்லாம் இருக்கிறீர்கள்?

மலர்விழி : நான், அம்மா, அப்பா, தம்பி ஆகிய நால்வர் உள்ளோம், ஐயா.

ஆசிரியர் : சரி, வீட்டில் முதன்மையானவர்கள் நீயும் உன் தம்பியுமா?

மலர்விழி : இல்லை, ஐயா. அப்பாவும் அம்மாவும்தான்.

ஆசிரியர் : அப்படியா... நீயும் தம்பியும்...

மலர்விழி : அப்பா அம்மாவைச் சார்ந்து வாழ்கிறோம், ஐயா.

ஆசிரியர் : வீட்டில் முதல் பொறுப்பாளர்கள் பெற்றோர்கள். அவர்கள் தாமே தனித்து இயங்குகிறார்கள். எனவே, அவர்கள் முதன்மையானவர்கள். அதைப்போலவே, நம் தமிழ்மொழியிலும் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், மெய்யெழுத்துகள் பதினெட்டும் தனித்து இயங்கி முதன்மைபெற்று விளங்குவதால், அவற்றை முதலெழுத்துகள் என்கிறோம். குழந்தைகளாகிய நீங்கள், உம் பெற்றோரைச் சார்ந்திருப்பதைப் போலவே, முதலெழுத்துகளைச் சார்ந்துவரும் எழுத்துகளைச் சார்பெழுத்துகள் என்கிறோம். உடல் – வண்ணமிட்ட இச்சொல்லில் உ என்பது உயிர் எழுத்து. ட, ல் என்பன என்ன எழுத்துகள்?

வேலன் : ட உயிர்மெய் எழுத்து, ல் என்பது மெய்யெழுத்து, ஐயா.

ஆசிரியர் : ட் + அ = ட. ட் என்னும் மெய்யெழுத்தும், அ என்னும் உயிர் எழுத்தும் சேர்ந்து, ட என்னும் உயிர்மெய் எழுத்தாகப் பிறந்தது. இதைப்போன்றே மற்ற உயிர்மெய் எழுத்துகளும் உயிரையும் மெய்யையும் சார்ந்து வரும்.

உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் எனச் சார்பெழுத்துகள் பத்து வகைப்படும்.

மாணவர்கள் : முதலெழுத்துகள், சார்பெழுத்துகள்பற்றிக் கற்றுக்கொண்டோம். ஐயா.

பயிற்சி : கீழுள்ள சொற்களில் முதலெழுத்துகளை வட்டமிடுக.

அ) அன்பு ஆ) கடல் இ) இன்பம் ஈ) அம்மா உ) தமிழ்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஆய்தம் ______________ எழுத்துவகையைச் சார்ந்தது.

   அ) முதல் எழுத்து   ஆ) மெய்யெழுத்து   இ) சார்பெழுத்து

2. சார்பெழுத்துகள் ______________ வகைப்படும்.

   அ) 10   ஆ) 18   இ) 12

3. முதலெழுத்துகளின் எண்ணிக்கை ______________

   அ) 216   ஆ) 30   இ) 247

### ஆ) குறுவினா

முதலெழுத்து என்றால் என்ன ?

## வகுப்பறைத்திறன்கள்

அடிப்படைத் திறன்களில் பயிற்சி பெறுவதற்காக வகுப்பறைத் திறன்கள் அமைக்கப் பட்டுள்ளன. இப்பகுதியில் பேசுதல், படித்தல், எழுதுதல், படைப்பாற்றல், கலந்துரையாடல், சொற்போர் முதலியனவும், மொழித்திறன் பயிற்சிகளும் உள்ளன. தமிழெண்களை அறிவோம், வாழ்க்கைத்திறன், மதிப்புக்கல்வி, பண்பு, தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம் ஆகிய பகுதிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

### அ) பேசுதல் திறன்

1. மொழியே நமக்கு முகவரி இத்தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.
2. வாய்மையே வெல்லும் என்னும் தலைப்பில் கலந்துரையாடுக.

### ஆ) படித்தல் திறன்

பின்வரும் உரைப்பகுதியை உரிய ஒலிப்புடன் வாய்விட்டுப் படிக்கவும்.

உழவன் காலையில் காளையை ஓட்டிச் சென்றான். அவன், கடும்பனியிலும் தன் பணியைச் சிறப்பாகச் செய்தான்; வாழைத் தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சினான்; ஏழையாக இருந்தாலும் எடுத்த வேலையை வேளை தவறாது செய்து முடித்தான்.

### இ) எழுதுதல் திறன் :

கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. (மாதிரி )

நீதிநெறி வழுவாமல் நிற்க வேண்டும்
    நெஞ்சார உண்மைதனைப் பேச வேண்டும்
ஓதிமறை உயர்ந்தவரை மதிக்க வேண்டும்
    ஒப்பற்ற ஆசான்சொல் கேட்க வேண்டும்
ஆதியிலே வாழ்ந்தமுறை நினைக்க வேண்டும்
    ஆபத்தில் உற்றவர்க்கு உதவ வேண்டும்
சோதிவடி வானவனைச் சொல்ல வேண்டும்
    சுகம்பெறவே வாயார வாழ்த்த வேண்டும்.

வினாக்கள் : 1. எப்படி நிற்கவேண்டும்?
2. எவ்வாறு உண்மை பேசவேண்டும்?
3. யாரை மதிக்கவேண்டும்?
4. யாருடைய சொல்லைக் கேட்கவேண்டும்?
5. பாடலுக்கேற்ற தலைப்புத் தருக.

விடைகள் : 1. நீதிநெறி வழுவாமல் நிற்கவேண்டும்
2. மனமறிய உண்மை பேசவேண்டும்.
3. கல்வி, கேள்விகளில் சிறந்த சான்றோரை மதிக்கவேண்டும்.
4. ஒப்பற்ற ஆசான் சொல் கேட்கவேண்டும்..
5. வாழும் முறை – இப்பாடலுக்கேற்ற தலைப்பு.

பயிற்சி

1. கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்தமதி கல்வி – அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்
உயிர் களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும் – இது
வாழும் முறைமையடி பாப்பா. – பாரதியார்

வினாக்கள் : 1. எது பாவம்?
2. மேலோர் எத்தன்மையர்?
3. யாரிடத்தில் அன்பு செலுத்தவேண்டும்?
4. வாழும் முறை யாது?
5. இப்பாடலுக்கேற்ற தலைப்புத் தருக.

ஈ) செயல்திட்டம் : பட்டி என முடியும் ஊர்ப்பெயர்களைத் தொகுக்க.

## மொழித்திறன் பயிற்சி

### அ) வல்லினம் மிகும் இடங்கள்

இரண்டு சொற்கள் ஒன்றாகச் சேரும்போது இடையில் க், ச், த், ப் ஆகிய நான்கு வல்லின மெய்யெழுத்துகள் எங்கெங்கு மிகும் என்பது குறித்து அறிவோம்.

அ, இ, உ என்பன சுட்டெழுத்துகள் என்பதை ஆறாம் வகுப்பில் கற்றீர்கள்.

இந்த எழுத்துகளின்முன் வல்லின எழுத்துகளை முதலாக உடைய சொல் வந்து சேர்ந்தால், இடையில் அவ்வெழுத்தின் மெய்யெழுத்துத் தோன்றும். இதனை வல்லொற்று மிகுதல் என்பர்.

அ + பையன் = அப்பையன்

( அ முன் பை எனும் எழுத்து வந்ததால், அவ்வெழுத்தின் மெய்யெழுத்தாகிய ப் தோன்றியது.)

அ + சட்டை = அச்சட்டை

இ + தோட்டம் = இத்தோட்டம்

இ + குளம் = இக்குளம்

உ + பக்கம் = உப்பக்கம்

( உ என்னும் சுட்டெழுத்தானது தற்பொழுது வழக்கத்தில் இல்லை )

எ என்னும் வினா எழுத்துக்குமுன் வல்லின எழுத்தை முதலாக உடைய சொற்கள் வந்தாலும் வல்லினம் மிகும்.

எ + குடம் = எக்குடம்

எ + சட்டை = எச்சட்டை

### நானே செய்வேன்

அ + குடம் =

அ + கூட்டம் =

அ + பெட்டி =

எ + பள்ளி =

எ + சட்டம் =

எ + குழந்தை =

இ + சிறுமி =

இ + தோப்பு =

இ + புத்தகம் =

## ஆ) தமிழ் எண்களை அறிவோம்

| அரபு எண் | தமிழ் எண் | அரபு எண் | தமிழ் எண் |
|---|---|---|---|
| 1 | க | 6 | சூ |
| 2 | உ | 7 | எ |
| 3 | ௩ | 8 | அ |
| 4 | ச | 9 | கூ |
| 5 | ரு | 10 | கO |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

## இ) கட்டுரை எழுதுதல் : எங்கள் ஊர்

குறிப்புச் சட்டகம் : முன்னுரை, ஊர்ப்பெயர்க்காரணம், ஊர் எல்லைகள், ஊர் அமைப்பு, சிறப்புகள், முடிவுரை.

## ஈ) அகரவரிசையில் அமைத்தல்

1. பின்வரும் உயிர் எழுத்துகளை அகரவரிசையில் அமைக்க.

   எ, ஔ, ஈ, உ, ஐ, ஊ, ஆ, அ, ஒ, இ, ஏ, ஓ.

2. பின்வரும் சொற்களை முதலெழுத்தைக்கொண்டு அகரவரிசையில் அமைக்க.

   ஏணி, ஈசல், எலி, ஒன்று, ஔவை, ஊட்டி, அண்ணன், இல்லம், ஆடு, ஓடம், ஐந்து, உடை.

3. உயிரெழுத்தில் தொடங்காத சொற்களை வட்டமிட்டுக் காட்டுக.

   அம்மா, கண்ணன், எல்லை, ஏன், ஆசை, சட்டை, இன்பம், குடம்.

## வாழ்க்கைத்திறன்

### தன்னையறிதல்

(தன்னிடம் உள்ள திறமைகளை அறிந்து செயல்படுதலே தன்னையறிதல்)

மும்பையில் தமிழ்க் குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது.

அக்குடும்பத்தில் எட்டு வயது நிரம்பிய சிறுமி இருந்தாள்.

அச்சிறுமிக்கு நாட்டியத்தில் மிகுந்த ஈடுபாடு இருந்தது; எட்டு வயதிலேயே அரங்கேற்றம்; பன்னிரண்டு வயதுக்குள் நாட்டியக் கச்சேரியில் பங்குபெற்று மிக்க புகழை அடைந்தாள்; நாட்டியச் செல்வி என்னும் பட்டமும் பெற்றாள்.

ஆனால், பதினெட்டு வயதில் அப்பெண்ணுக்கு எதிர்பாராதவகையில் ஏற்பட்ட கொடிய விபத்தால் அவளது வலக்காலை எடுக்க வேண்டியதாயிற்று.

இளவயதிலேயே பேரும்புகழும் பெற்ற அப்பெண் தன் எதிர்காலமே இருண்டுவிட்டது என மூலையில் முடங்கிவிடவில்லை. தன் நிலைமையை நன்கு உணர்ந்து கொண்டாள்; மருத்துவரிடம் சென்றாள். செயற்கைக்கால் பொருத்திக் கொண்டால் நடக்கலாம், நீந்தலாம், ஏன் நாட்டியம் கூட ஆடலாம் என்று மருத்துவர் கூறினார்.

மருத்துவரின் கூற்றைக் கேட்ட அப்பெண், நான் மீண்டும் நாட்டியத்தில் ஈடுபடுவேன், வெற்றி பெறுவேன் என்று தனக்குள் சூளுரைத்துக் கொண்டாள். முதலில் செயற்கைக்காலைப் பொருத்திக் கொண்டு ஆடும்போது, அதனால் ஏற்பட்ட பெருந்துன்பத்தையும் பொறுத்துக் கொண்டாள்.

மருத்துவரின் ஊக்கமும் தன்னிடமுள்ள திறமையும் விடாமுயற்சியும் அப்பெண்ணை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் சென்றன.

இரண்டே ஆண்டுகளில் நாட்டியப் பேரொளி என்னும் பட்டமும் அவரைத் தேடி வந்தது. அவரைப் புகழ் பெற்ற நடிகையாகவும் அடையாளம் காட்டியது.

அனைத்திற்கும் காரணம் அப்பெண்ணின் விடாமுயற்சியும் ஊக்கமும் தன்னம்பிக்கையும்தான். நடந்ததையே நினைத்துக்கொண்டிருக்காமல், அதிலிருந்து வெளியேவர ஒவ்வொருவரும் முயற்சி செய்யவேண்டும். இழந்ததையோ கடந்தகாலத்தையோ எண்ணிக் கொண்டிருப்பது வீண்வேலை. அடுத்தது என்னவெனச் சிந்தித்து வாழ்க்கையில் முன்னேறவேண்டும். உங்களிடமுள்ள வளம், திறமை, வாய்ப்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தடைகளைத் தகர்த்தெறிந்து முன்னேறுங்கள். அதுதான் வாழ்க்கை; அதுதான் பயணம்; அதுவே முன்னேற்றம். கேள்விக்குறியாய் வாழாமல் வியப்புக்குறியாய் வாழ்ந்துகாட்டுங்கள். கைத்தட்டுபவராக இல்லாமல், கைத்தட்டல் பெறுபவராக வாழுங்கள்.

1. இந்நிகழ்வைப்போன்று நீங்கள் வேறு ஏதேனும் கேள்விப்பட்டிருக்கிறீர்களா ?
2. அப்பெண்ணின் நிலையிலிருந்து கற்பனை செய்து, உங்கள் செயல்பாடுகளை எழுதுங்கள்.

இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும். – குறள், 1040

## மதிப்புக்கல்வி

### துணிவு

பன்னிரண்டு வயதிலேயே மற்போர், சிலம்பம், வாள்வீச்சு என வீரக்கலைகளை எல்லாம் கற்றுத் தேர்ந்திருந்தான் அச்சிறுவன். மதுரைக்கு அருகில் புலியொன்று ஊருக்குள் நுழைந்து கண்ணில்படுகின்ற மக்களையும் ஆடுமாடுகளையும் அழித்து வந்தது. அதைக்கேள்வியுற்ற மக்கள் அச்சத்தோடு வாழ்ந்தனர். மக்களின் அச்சத்தைப் போக்கக் கருதிய அரசர் விசயரங்க சொக்கநாதர், புலியைக்கொன்று வீழ்த்துபவர்களுக்குப் பரிசு வழங்கப்படும் என்று அறிவித்தார். இந்நிலையில், ஒருநாள் ஊருக்குள் புகுந்த அப்புலியைத் தன்கையிலிருந்த ஆயுதத்தாலேயே கொன்று வீழ்த்தினான் அச்சிறுவன். அரசரும் பரிசுகள் பல வழங்கி அவனைச் சிறப்பித்தார்.

இளமையிலேயே துணிச்சலும், வீரமும்கொண்டு விளங்கிய அச்சிறுவன்தான் பின்னாளில் புலித்தேவன் என்று அனைவராலும் போற்றப்பட்டான். இந்திய விடுதலைக்குத் தென்னகத்திலிருந்து அந்நியரை எதிர்த்த சிறந்த வீரன் புலித்தேவனாவான்.

மாணவர்களே! நீங்களும் இளமையிலேயே துணிவுடன் செயல்படுங்கள். ஏனெனில், என்றும் ஒருவர்க்குத் துணிவே துணையாக நிற்கும்.

நீங்கள் துணிந்து செய்த செயல்களை நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள்.

**என் எதிர்காலத் திட்டங்கள்**

**(வருங்காலத்தில் நான்...)**

## புறநானூறு

நெல்லும் உயிரன்றே; நீரும்உயி ரன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;
அதனால் யான்உயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே. *

– மோசிகீரனார்

பொருள் : இவ்வுலகத்தார்க்கு நெல்லும் நீரும் உயிராகா. முறைசெய்து காத்தலினால் மன்னவனே உயிராவான். வேற்படை உடைய வேந்தனின் கடமை நாட்டைப் பேணிக் காப்பதே ஆகும்.

சொற்பொருள் : அறிகை – அறிதல்வேண்டும்; தானை – படை; கடனே – கடமை.

ஆசிரியர் குறிப்பு : இப்பாடலைப் பாடியவர் மோசிகீரனார். தென்பாண்டி நாட்டிலுள்ள மோசி என்னும் ஊரில் வாழ்ந்தவர். கீரன் என்பது குடிப்பெயராகக் குறிப்பிடப்படுகிறது. உடல் சோர்வினால் அரசுக்குரிய முரசுக் கட்டிலில் உறங்கியபோது, சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை என்ற அரசனால் கவரிவீசப் பெற்ற பெருமைக்குரியவர். இவர் பாடிய பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகியவற்றுள் உள்ளன.

நூல் குறிப்பு : புறம் + நான்கு + நூறு = புறநானூறு. இந்நூல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இது புறம்பற்றிய நானூறு பாடல்களின் தொகுப்பு. புறம் என்பது மறம் செய்தலும் அறம் செய்தலும் ஆகும். இந்நூலில் உள்ள பாடல்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில் வாழ்ந்த புலவர்களாலும் மன்னர்களாலும் பாடப்பெற்றவை. புறநானூற்றுப் பாடல்கள்மூலம் பண்டைய தமிழக மன்னர்களின் அற உணர்வு, வீரம், கொடை, ஆட்சிச் சிறப்பு, கல்விப் பெருமை முதலியவற்றையும் புலவர்களின் பெருமிதம், மக்களுடைய நாகரிகம், பண்பாடு முதலியவற்றையும் அறியலாம்.

நூல் பயன் : புறநானூறு என்னும் இந்நூலைக் கற்பதனால், தமிழர்தம் பழங்காலப் புறவாழ்க்கையையும் பண்பாட்டையும் அறிந்து பெருமிதம் கொள்ளலாம்.

அரசனைக் குறிக்கும் வேறு பெயர்கள் : கோ, மன்னன், வேந்தன்.

### மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) புறநானூறு ______________ நூல்களுள் ஒன்று.

ஆ) நெல்லும் உயிரன்றே என்னும் பாடலைப் பாடியவர் ______________ .

2. உரிய விடையைத் தேர்வு செய்க.

அ) மோசிகீரனார் உடல் சோர்வினால் முரசுக்கட்டிலில் உறங்கியபோது கவரி வீசிய மன்னன்

1. பாண்டியன் நெடுஞ்செழியன்
2. சேரன் பெருஞ்சேரல் இரும்பொறை
3. கோப்பெருஞ்சோழன்

ஆ) பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைக்க.

நெல், உயிர், நீர், வேந்தன்.

இ) குறுவினாக்கள்

1. புறநானூறு – சிறு குறிப்பு எழுதுக.
2. மோசிகீரனாரைப் பற்றிக் குறிப்புத் தருக.
3. உலக உயிர்களைக் காக்கின்றவை எவை ?

ஈ) சிறுவினா

வேந்தனின் கடனாகப் புறநானூறு குறிப்பிடும் செய்தி யாது ?

## முதுமொழிக்காஞ்சி

### சிறந்த பத்து

(சிறந்ததெனக் கூறப்படும் பத்துப் பொருளைத்
தன்னகத்தே கொண்டிருப்பது சிறந்த பத்து.)

1. ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலில் சிறந்தன்(று) ஒழுக்கம் உடைமை.
2. காதலில் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்.
3. மேதையில் சிறந்தன்று கற்றது மறவாமை.
4. வண்மையில் சிறந்தன்று வாய்மை யுடைமை.
5. இளமையில் சிறந்தன்று மெய்பிணி இன்மை.
6. நலனுடை மையின் நாணுச் சிறந்தன்று.
7. குலனுடை மையின் கற்புச் சிறந்தன்று.
8. கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.
9. செற்றாரைச் செறுத்தலில் தற்செய்கை சிறந்தன்று.
10. முன்பெரு கலின்பின் சிறுகாமை சிறந்தன்று.

– மதுரைக் கூடலூர்கிழார்

பொருள் :

1. கடல்சூழ்ந்த இவ்வுலக மக்கள் அனைவர்க்கும் கற்றலைவிட ஒழுக்கமுடைமையே சிறந்தது.
2. பிறர்க்கு அன்புகாட்டுவதிலும் செயல்களால் அவர் போற்றும்படி நடத்தலே மேலானது.
3. அறிவுநுட்பத்தினும் கற்றபொருளை மறவாமை மேன்மையானது.
4. வளமான வாழ்க்கையைக்காட்டிலும் வாய்மை உடையவராக வாழ்வது உயர்ந்தது.
5. இளமையைக் காட்டிலும் நோயற்ற வாழ்வே சிறந்தது.
6. அழகுடையவராக இருப்பதினும் நாணமுடையவராக இருப்பதே மேலானது.
7. குலப்பெருமையைவிட ஒழுக்கமுடைமையே சிறந்தது.
8. சிறந்த நூல்களைக் கற்றலைவிடவும் கற்றறிந்த பெரியாரைப் பின்பற்றி யொழுகுதல் சிறப்பானது.
9. பகைவரைத் தண்டிப்பதைவிட, அவருக்கு நன்மைசெய்தல் சிறந்தது.
10. முற்காலத்துப் பெருகிய செல்வத்தைப் பின்னர்க் குறைவுபடாமல் காத்தலே சிறந்தது.

சொற்பொருள் : ஆர்கலி – நிறைந்த ஓசையுடைய கடல்; காதல் – அன்பு, விருப்பம்; மேதை – அறிவு நுட்பம்; வண்மை – ஈகை, கொடை; பிணி – நோய்; மெய் – உடம்பு; நாணம் – செய்யத் தகாதனவற்றின்கண் உள்ளமொடுங்குதல்; சிறந்தன்று – சிறந்தது; வழிபடுதல் – போற்றி வணங்குதல்; தற்செய்கை – தன்னைச் செல்வம் முதலியவற்றில் மேம்படுத்திக்கொள்ளல்.

ஆசிரியர் குறிப்பு

பெயர் : மதுரைக் கூடலூர்கிழார்

பிறந்த ஊர் : கூடலூர்

சிறப்பு : இவர்தம் பாடல்களை நச்சினார்க்கினியர் முதலிய நல்லுரையாசிரியர்கள் மேற்கோள்களாகக் கையாண்டுள்ளார்கள்.

காலம் : சங்க காலத்திற்குப்பின் வாழ்ந்தவர்.

நூல் குறிப்பு : முதுமொழிக்காஞ்சி என்பது காஞ்சித்திணையின் துறைகளுள் ஒன்று. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான இந்நூல், உலகியல் உண்மைகளைத் தெளிவாக எடுத்து இயம்புகிறது. இந்நூல், அறவுரைக்கோவை எனவும் வழங்கப்படுகிறது. இதில் பத்து அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரத்திலும் பத்துச் செய்யுள்கள் உள்ளன. இந்நூல் நூறு பாடல்களால் ஆனது.

நூல் பயன் : முதுமொழிக்காஞ்சி கற்போரின் குற்றங்களை நீக்கி, அறம் பொருள் இன்பங்களை அடைவதற்கான வழிமுறைகளை அறவுரைகளாகக் கூறி நல்வழிப்படுத்தும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) முதுமொழிக்காஞ்சி என்பது ______________ துறைகளுள் ஒன்று.

ஆ) முதுமொழிக்காஞ்சியின் ஆசிரியர் ______________.

இ) இளமையைக் காட்டிலும் ______________ சிறந்தது.

**2. உரிய விடையைத் தேர்வு செய்க.**

அ) முதுமொழிக்காஞ்சி ______________ என்னும் பொருள்படும்.

1. நன்னெறி  2. அறநூல்  3. அறிவுரைக்கோவை

ஆ) கற்றலைவிடவும் சிறந்தது

1. அறிவுடைமை  2. பொறையுடைமை  3. ஒழுக்கமுடைமை

**3. பிரித்து எழுதுக.**

அ) மக்கட்கெல்லாம்  ஆ) பிணியின்மை  இ) குலனுடைமை

**4. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைக்க.**

உலகம், மக்கள், ஒழுக்கம், வழிபடுதல்.

### ஆ) குறுவினாக்கள்

1. முதுமொழிக்காஞ்சி – சிறுகுறிப்பு எழுதுக.
2. மதுரைக் கூடலூர்கிழார் பற்றிக் குறிப்பு எழுதுக.
3. மேதை, வண்மை இவற்றைக் காட்டிலும் சிறந்தன யாவை?
4. நலனுடைமையின் சிறந்தது எது?

### இ) சிறுவினா

முதுமொழிக்காஞ்சி குறிப்பிடும் சிறந்த பத்துகள் எவை? விளக்குக.



**தமிழ் படித்தால்...**

அறம் பெருகும் தமிழ்படித்தால், அகத்தில் ஒளிபெருகும்
திறம் பெருகும் உரம் பெருகும், தீமைக் கெதிர் நிற்கும்
அறம் பெருகும் ஆண்மை வரும் மருள்விலகிப் போகும்
புறம் பெயரும் பொய்மை யெலாம், புதுமை பெறும் வாழ்வே!

– பெருஞ்சித்திரனார்

# மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்



யார் காப்பார் என்று தமிழன்னை ஏங்கிய போது நான் காப்பேன் என்று எழுந்தார் ஒருவர் அவர்தாம், உ.வே.சாமிநாதர். பின்னாளில் அவரே அனைவராலும் தமிழ்த்தாத்தா என்று அழைக்கப்பட்டார். இத்தகைய மாணவரை உருவாக்கிய பெருமை அவர்தம் ஆசிரியரான மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனாரையே சாரும்.

நல்ல மாணவன் ஒருவன் ஆசிரியரால் சிறப்படைவதுபோலவே ஓராசிரியரும் நல்ல மாணவர்களால் பெருமையடைவார் என்பதற்கு இவ்விருவருமே சான்றாவர்.

மீனாட்சிசுந்தரனார் நயமும் சுவையும் மிக்க பாடல்களை இயற்றிப் புதுப்புது நூல்களைப் படைத்தளித்தார். தமிழ்ப்பாடம் சொல்லிச் சொல்லி மாணவர்களைத் தமிழின்பால் ஈர்த்தார். அதனால், மாணவர்கள் தமிழின்மீது தீராக்காதல்கொண்டு தமிழை ஈடுபாட்டுடன் கற்றார்கள். அம்மாணவர்கள் தேமதுரத் தமிழை உலகெலாம் பரவச் செய்தார்கள்.

## இளமையும் கல்வியும்

மீனாட்சிசுந்தரனார் 1815ஆம் ஆண்டு ஏப்ரல் 6ஆம் நாளன்று திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எண்ணெய்க்கிராமத்தில் பிறந்தார். அவரது பெற்றோர் சிதம்பரம் – அன்னத்தாச்சியார் ஆவர். மீனாட்சிசுந்தரனார் இளமையில் தமது தந்தையாரிடம் தமிழ் கற்றார்; இலக்கிய இலக்கண நூல்களில் நன்கு புலமை பெற்றார். சிறுவயதிலேயே செய்யுள் இயற்றும் ஆற்றல் கைவரப் பெற்றார்.

## கல்வியே வாழ்க்கை

மீனாட்சிசுந்தரனார் திருமணம் செய்துகொண்டு குடும்பத்துடன் திரிசிரபுரத்தில் (திருச்சிராப்பள்ளி) வாழ்ந்தார். அதனால், அவரைத் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரனார் என்றே அழைத்தனர். அவரிடம், ‘கற்கவேண்டும்’ என்ற

வேட்கை தணியாததாக இருந்தது. அதனால், எப்பொழுதும் நூல்களைப் படித்துக்கொண்டே இருப்பார். அவர் தமிழ் இலக்கியத்திலும் சைவ சமய நூல்களிலும் ஆர்வம் கொண்டிருந்தார்.

### தமிழ் கற்பித்தல்

மீனாட்சிசுந்தரனார் தமிழ் கற்கவேண்டுமென்று விரும்பியவர்களுக்கெல்லாம் கற்றுக்கொடுத்து வந்தார்; சாதி, சமயம் பாராது அனைவருக்கும் கல்வி கற்பித்து வந்தார். மீனாட்சிசுந்தரனார் அதிக வசதிபடைத்தவர் இல்லை என்றாலும், மாணவர் சிலருக்கு உண்டியும், உறையுளும் அளித்துக் கற்பித்திருக்கிறார். குலாம்காதர் நாவலர், சவரிராயலு, தியாகராசர், சாமிநாதர் ஆகியோர், அவர்களுள் குறிப்பிடத்தக்க மாணவர்கள். அதன் காரணமாக அவருடைய புகழ் எங்கும் பரவியது.

திருவாவடுதுறையில் ஆதீன வித்துவானாக இருக்கவேண்டுமென்று ஆதீனத் தலைவர், மீனாட்சிசுந்தரனாருக்கு அழைப்பு விடுத்தார். மீனாட்சிசுந்தரனார் அப்பதவியில் சிலகாலம் இருந்து அரும்பணி ஆற்றினார். இவர் திருவாவடுதுறையில் வாழ்ந்த காலத்தில்தான் உ.வே.சாமிநாதருக்கு ஆசிரியராக இருந்தார். அவரைப்போன்ற நன்மாணாக்கர் பலரைப் பெற்றதால் மீனாட்சிசுந்தரனார் பெருமகிழ்ச்சி அடைந்தார்.

மீனாட்சிசுந்தரனார் செய்த தமிழ்த்தொண்டுகள் கணக்கிலடங்கா. இவர், தம்வாழ்வின் பெரும்பகுதியை, மாணவர்களுக்குக் கற்பிப்பதிலேயே செலவழித்தார். கற்பித்ததால் அவருடைய அறிவும் வளர்ந்தது. மாணவர்களுக்குப் பாடம் சொல்லும்பொழுது அவர் ஏடுகளைப் பார்க்கவே மாட்டார். அவற்றிலுள்ள அனைத்தும் அவருக்கு மனப்பாடமாகவே இருந்தன. அவர் பேச்சுத் திறமையில் சிறந்திருந்தார். பிறருக்கு விளக்கும்போது, மிகத் தெளிவாக நல்ல தமிழில் பேசி விளக்கும் திறமை பெற்றிருந்தார். ஆகையால், அவருடைய மாணாக்கர்கள், அவரிடம் கற்பதை மிகவும் விரும்பினார்கள்.

### தமிழ்த்தொண்டு

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார், எண்பதுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். தமிழகத்திலுள்ள பல்வேறு கோவில்களுக்கு நடைப்பயணம் மேற்கொண்டு அக்கோவில்களைப் பற்றிப் பாடித் தலபுராணங்கள் பல இயற்றியுள்ளார். அத்தல புராணங்களில் கோவில் வரலாறு, சிறப்புகள், இறைவனின் பெருமைகள் முதலியன இடம்பெற்றுள்ளன.

## பண்பு நலன்கள்

மீனாட்சிசுந்தரனார் அருங்குணமும் நிறைந்த புலமையும் தளராத நாவன்மையும் படைத்தவர்; பலரால் பாராட்டப்பெற்றுள்ளார். ஆயினும், தம்மைத்தாமே புகழ்ந்து பேசும் தற்பெருமை அவரிடம் இல்லை. மிகுந்த நகைச்சுவை உணர்வுமிக்க இவர், இறுதிவரை நிறைகுடமாகவே வாழ்ந்தார்.

ஒருமுறை அவரது நண்பர் ஆறுமுகம் என்பவர், தம்முடைய குடும்பத் தொடர்பாகக் கும்பகோணத்தில் ஒருவருக்குப் பத்திரம் ஒன்று எழுதிக்கொடுத்தார். அதில், சாட்சிக் கையொப்பமிட வந்த ஒருவருடைய இருப்பிடம் கும்பகோணத்திலுள்ள சுண்ணாம்புக்காரன் தெரு என்பது. அதனை நீற்றுக்காரத் தெரு எனவும் வழங்குவர். இந்த இரண்டில் எதனைப் பெயருக்கு முன்னால் சேர்க்கலாம் என்று அவர் கேட்டபொழுது, மீனாட்சிசுந்தரனார் இரண்டும் வேண்டாம், மூன்றாவது தெரு என்று போட்டுவிடும் என்று சொன்னார். அதிலுள்ள நகைச்சுவை உணர்வை அனைவரும் அறிந்து மகிழ்ந்தனர். மூன்றாவது என்பது சுண்ணாம்பைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். (வெற்றிலை + பாக்கு + சுண்ணாம்பு)

ஒருநாள் அவர், காய்ச்சலுற்றுத் துன்புற்றார். அப்பொழுது மாணவர் ஒருவரை நூல் முழுவதையும் தொடர்ந்து படிக்குமாறு கேட்டார். உடல்நிலை சரியில்லாதபோது சற்று ஓய்வெடுத்தால் நல்லதென்று மற்றவர் கூற, நோய்க்கு மருந்து இலக்கியம் என்றார். இதன்மூலம் அவர் தமிழ்மீது கொண்ட பற்றை அறியலாம். இவர் 01 .02. 1876 அன்று இவ்வுலக வாழ்வை நீத்தார்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் போன்றோருடைய புலமைத் திறத்தை நாமறிந்து மகிழவேண்டுமெனில், அவருடைய நூல்களைப் படிக்கவேண்டும். பழம்புலவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை அறிந்து, அவர்களைப் பேரறிஞர்கள் என்று பாராட்டும் அளவிலேயே நின்றுவிடாமல், அவர்களுடைய நூல்களைப் படித்தலும் படித்தவழி நிற்றலுமே நாம் அவர்களுக்குச் செய்யும் கைம்மாறாகும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. உ.வே. சாமிநாதரின் ஆசிரியர் பெயர் ______________ .
2. தமிழ்த்தாத்தா என்றழைக்கப்படுபவர் ______________ .
3. தலபுராணங்கள் பாடுவதில் வல்லவர் ______________ .

### ஆ) குறுவினாக்கள்

1. மீனாட்சிசுந்தரனார் இளமையில் எவ்வாறு தமிழ் கற்றார்?
2. மீனாட்சிசுந்தரனாரிடம் தமிழ் கற்றோர் யாவர்?
3. மீனாட்சிசுந்தரனாரின் நகைச்சுவையை விளக்குக.

### இ) சிறுவினா

மீனாட்சிசுந்தரனாருக்குத் தமிழ்மீதுள்ள பற்றினை விவரிக்க.

### ஈ) நெடுவினாக்கள்

1. மீனாட்சிசுந்தரனாரின் பண்புநலன்களை விளக்குக.
2. மீனாட்சிசுந்தரனார் தமிழுக்கு ஆற்றிய தொண்டினைக் கூறுக.

# கோவூர்கிழார்

கோவூர்கிழார் உறையூருக்கு அருகிலுள்ள கோவூரில், வேளாளர் மரபில் பிறந்தார்; இளமைப்பருவத்திலேயே கல்வி கேள்வியில் சிறந்து விளங்கினார். இவர் சான்றோர் பலரை அணுகி இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தார்; கவிதைகள் எழுதுவதில் ஆற்றல் பெற்றார்; நற்பண்புகளின் இருப்பிடமாகத் திகழ்ந்தார்; நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, திருவள்ளுவமாலை ஆகியவற்றில் இவரின் பதினெட்டுப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

நலங்கிள்ளி என்ற மன்னன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆண்டு வந்தான். இம்மன்னன், கோவூர்கிழாரின் புலமையைப் பலர் வாயிலாகக் கேட்டு அறிந்தான். தம் அவைக்கு அவரை அழைத்து, அரசு அவைக்களத் தலைவர் ஆக்கினான். அவரிடம் நட்புக்கொண்டு பல சிறப்புகளைச் செய்தான். மகிழ்ந்த புலவர், நலங்கிள்ளியின் புகழ் விளங்கப் பல பாடல்களை இயற்றினார். இவர் அஞ்சா நெஞ்சர்; யார் தவறு செய்தாலும் அத்தவற்றினைச் சுட்டிக்காட்டி, முறையாக ஏற்றுக்கொள்ளும்வகையில் இனிமையாகச் சொல்லித் திருத்துவதில் வல்லவர்; அரசர்களானாலும், பிறரானாலும் கோவூர்கிழார் சொல்லுவதை ஏற்றுச் செயல்பட்டுள்ளனர்.

சோழர் மரபில் தோன்றிய நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் நெடுங்காலம் பகைமை இருந்து வந்தது. ஒருமுறை இருவருக்கும் போர் மூண்டது. உறையூருக்கு அருகில் ஆவூர்க்கோட்டை இருந்தது. நலங்கிள்ளியின் படையினர் அக்கோட்டையை முற்றுகையிட்டனர்; நாள் பல கழிந்தன. கோட்டையினுள் இருந்த மக்கள் துன்புற்றனர்.

கோவூர்கிழார் கோட்டையினுள் சென்றார்; நெடுங்கிள்ளியைக் கண்டார். “நெடுங்கிள்ளியே! கோட்டைக்குள் யானைகள் உணவின்மையால் பிளிறுகின்றன. குழந்தைகள் பாலின்றிக் கதறுகின்றன; மக்கள் குடிக்க நீரின்றித் தவிக்கின்றனர். நீ அறத்தினை உடையவனானால், வெற்றிபெற்ற நலங்கிள்ளியிடம் கோட்டையை ஒப்படைத்துவிட்டு வெளியேறு; அல்லது நீ வீரனானால் எதிர்த்துப் போரிடு. இரண்டில் எதையும் செய்யாமல் கோட்டை மதிலுக்குள் ஒடுங்கியிருப்பது நாணும் தன்மையுடையது” என்றார்.

கோவூர்கிழாரின் அறிவுரையைக் கேட்ட நெடுங்கிள்ளி, ஆவூர்க்கோட்டையைத் திறந்துவிட்டு உறையூர்க்கோட்டைக்குள் புகுந்து கதவடைத்துக் கொண்டான். செய்தியறிந்த நலங்கிள்ளி வெகுண்டெழுந்தான்; உறையூர்க்கோட்டையை முற்றுகை யிட்டான்.



நலங்கிள்ளியோடு இருந்த கோவூர்கிழார் இருவரையும் அமைதிப்படுத்த எண்ணினார்; உறையூர்க்கோட்டைக்குள் புகுந்து நெடுங்கிள்ளியை மீண்டும் கண்டார்.

“நெடுங்கிள்ளியே! உன்னோடு போர் புரிய, கோட்டைக்கு வெளியே முற்றுகையிட்டிருப்பவன் பனம்பூ மாலையணிந்த சேரனும் அல்லன்; வேப்பம்பூ மாலையணிந்த பாண்டியனும் அல்லன்; சோழருக்குரிய ஆத்திமாலையணிந்தவனே. உம் இருவருள் எவர் தோற்பினும் தோற்பது சோழர் குடியே. இருவரும் வெற்றி பெறுவது உலக இயற்கையன்று. ஒருகுடியைச் சேர்ந்த நீவிர் இருவரும் பகைமை கொள்வது பெருமை தரும் செயல் ஆகாது. உங்கள் பகைவர்களுக்கு நும் செயல் மகிழ்ச்சிதரும்.

ஆதலின் போரை ஒழிமின் என்றார். கோவூர்கிழாரின் அறிவுரையைக் கேட்ட நெடுங்கிள்ளி உறையூர்க்கோட்டையை நலங்கிள்ளியிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறினான்.

### மலையமான் பிள்ளைகளைக் காத்தல்

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் புகார் நகரைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆண்டு வந்தான். இவன் சிறந்த கவிஞன் ஆவான். இவன் புலவர் பலரால் பாராட்டப்பட்ட கொடை வள்ளல். புலவர்களுக்குக் கொடையளித்துப் புகழ் பெற்றவன். கோவூர்கிழார் கிள்ளிவளவனைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

கடையேழு வள்ளல்களுள் ஒருவரான மலையமான் திருமுடிக்காரிக்கும், கிள்ளிவளவனுக்கும் பெரும்பகை இருந்தது. மலையமான் சிறந்த வீரன். அவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். மலையமானை அடக்கமுடியாத சோழன் கிள்ளிவளவன், அவன் பிள்ளைகள் இருவரையும் கவர்ந்து சிறை வைத்தான். அவர்களைத் தன் பட்டத்து யானையின் காலால் இடறிக் கொல்ல முடிவு செய்தான். பகைவன் மரபை அழிக்க இதுவே வழியெனக் கருதினான்; அதற்கான நாளையும் குறித்தான். சிறுவர் இருவரும் யானையைக் கண்டு மருண்டனர்; அஞ்சி நடுங்கினர்; வியந்து நோக்கினர்.

கோவூர்கிழார், அவ்விடத்திற்கு விரைந்தார்; தம்மை மறந்தார்; யானையின் அருகில் சென்றார். இருபிள்ளைகளையும் தம் இருகரத்தால் தழுவி அணைத்துக் கொண்டார். அவர் கிள்ளிவளவனின் முகத்தைக் கண்டார்; சினத்தால் அவன் முகம் கடுகடுத்துக் காணப்பட்டது; கண்கள் சிவந்திருந்தன; கோவூர்கிழார் கிள்ளிவளவன் செயலுக்கு வருந்தினார்.

“கிள்ளியே! புறாவுக்கு வந்த துன்பத்தையும் பசுவுக்கு உற்ற துயரத்தையும் நீக்கிய சோழர் மரபில் பிறந்தவன் நீ!. இப்பிள்ளைகளோ வறுமையுற்றோருக்கு வாரி வழங்கும் வள்ளல் மரபில் பிறந்தவர்கள். இப்பொழுது, இவர்கள் களிற்றைக் கண்டு அழும் அழுகையையும் மறந்து குழந்தைகள் கூடியுள்ள மக்களை மருண்டு பார்க்கின்றார்கள். இவர்கள், இதுவரை அறியாத துன்பத்தை அடைந்துள்ளார்கள். மன்னா, நான் சொன்னதைச் செவிமடுத்துக் கேட்டாய். இனி, நீ விரும்பியதைச் செய்வாயாக” என்று கிள்ளிவளவனின் நெஞ்சில் பதியுமாறு கூறினார்.

முன்னோர் பெருமையை நினைவூட்டியது கிள்ளி வளவனைத் தன் தவற்றை உணரச் செய்தது. சிறுவர் இருவரையும் யானையின் முன்னிருந்து விடுவித்த கோவூர்கிழார், பிள்ளைகளை மலையமான் திருமுடிக்காரியிடம் ஒப்புவித்து மகிழ்ந்தார்.

### இளந்தத்தனாரைச் சிறைமீட்ட செம்மல்

சோழன் நெடுங்கிள்ளி உறையூரில் இருந்தான். சோழன் நலங்கிள்ளியைப் பாடிப் பரிசு பெற்ற புலவரான இளந்தத்தனார் நெடுங்கிள்ளியை நாடிச் சென்றார். அவனைப் பாடிப் பரிசுபெற நினைத்தார். நெடுங்கிள்ளியைப் புகழ்ந்து பல பாடல்கள் பாடினார். புலவர், தமக்குப் பரிசு கிடைக்கும் என எதிர்பார்த்தார். நெடுங்கிள்ளியோ மாறாக நினைத்தான்.

தன் பகைவன் நலங்கிள்ளியிடமிருந்து வந்த ஒற்றன் எனப் புலவரை ஐயங்கொண்டான். அரசனின் ஐயத்தைப் போக்க, அப்போது அவன் அருகில் ஒருவருமிலர். ஆகவே, புலவரைச் சிறையிலடைத்துப் பின்பு கொல்லத் துணிவு கொண்டான். கோவூர்கிழார் செய்தியறிந்தார்; விரைந்து சென்றார்; நெடுங்கிள்ளியின் முன் நின்றார். அவர், உண்மையை அஞ்சாமல் உரைத்தார்.

"நெடுங்கிள்ளியே! பழுமரம் இருக்கும் இடத்திற்குப் பறவைகள் நாடிச் செல்வது போலப் புலவர் வள்ளல்களை நாடிச் செல்வர்; நெடுந்தொலைவு நடந்தே செல்வர். தம் ஆற்றலுக்கேற்பப் புகழ்ந்து பாடுவர்; பரிசு பெற்று மகிழ்வர்; தாம் பெற்ற பரிசினை உற்றார்க்கும் உறவினர்க்கும் பிறருக்கும் பகிர்ந்தளித்துத் தாமும் உண்டு மகிழ்வர். தமக்கு அளித்தாரைச் சிறப்பிப்பது பரிசில் பெறும் புலவர் தம் வழக்கம். இத்தகைய புலவர் வாழ்க்கை, பிறருக்குத் தீங்கு செய்ய அறியாது" என்னும் கருத்தமைந்த பாடலைப் பாடினார்.

அது, அவன் தவற்றை உணரச் செய்தது. நெடுங்கிள்ளி திருந்தினான். கோவூர்கிழார் இளந்தத்தனாரைச் சிறை மீட்ட செம்மலானார். கோவூர்கிழார் முறையாக இனிதாகச் சொல்லும் சொல்வன்மையால், சொல்லுவதை நுட்பமாகக் கேட்டு அறியும் மன்னர்கள் செவிமடுத்து ஏற்றுப் பயன்பெற்றார்கள். நெடுங்கிள்ளி, தனது கோட்டையை நலங்கிள்ளியிடம் ஒப்படைத்தான்; யானையின் காலில் அகப்பட்டு இறக்க இருந்த திருமுடிக்காரியின் பிள்ளைகள் காப்பாற்றப்பட்டார்கள்; ஒற்றரெனச் சிறையில் அடைபட்ட இளந்தத்தனார் விடுதலை பெற்று மகிழ்ந்தார். கோவூர்கிழார்போல் சொல்லும் திறனும் அதனைக் கேட்டு ஏற்றுச் செயல்படும் பண்பும் மன்னர்க்கு இருந்ததால் மக்கள் நலமுற்றனர்.

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். – குறள், 648

நன்றி : சே. சுந்தரராசன், குறள்நெறி இலக்கியக் கதைகள்

## மாதிரி வினாக்கள்

### கட்டுரை வினாக்கள்

1. நெடுங்கிள்ளி, நலங்கிள்ளியைக் கோவூர்கிழார் எவ்வாறு அமைதிப்படுத்தினார்?
2. மலையமான் பிள்ளைகளைக் கோவூர்கிழார் எவ்வாறு காப்பாற்றினார்?
3. இளந்தத்தனாரைக் கோவூர்கிழார் எவ்வாறு சிறைமீட்டார்?

### செயல் திட்டம் :

நீ அறிந்த புலவரின் வாழ்க்கை வரலாற்றினை எழுதி வருக.

# உயிர்மெய், ஆய்தம்

மாணவர்கள் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : அனைவருக்கும் வணக்கம். கடந்த வாரம் இலக்கணத்தில் எந்தப் பகுதியைக் கற்றீர்கள்?

வளர்மதி : சார்பெழுத்துகளைக் கற்றோம், ஐயா.

ஆசிரியர் : பொன்னி, சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்?

பொன்னி : பத்து வகைப்படும், ஐயா.

ஆசிரியர் : முருகா, சார்பெழுத்துகள் பத்தையும் கூறு.

முருகன் : உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம், ஐயா.

ஆசிரியர் : நன்று. நன்றாக நினைவில் வைத்திருக்கிறாய்! வளவா! கண், காண், கிளி இவற்றில் முதலிலுள்ள எழுத்துகளைக் கூறு.

வளவன் : க, கா, கி ஐயா.

ஆசிரியர் : அன்பரசி, வளவன் கூறிய எழுத்துகளுக்கான பெயரென்ன?

அன்பரசி : உயிர்மெய் எழுத்துகள், ஐயா.

ஆசிரியர் : எந்தெந்த எழுத்துகள் சேர்ந்தால் உயிர்மெய் எழுத்துத் தோன்றும்?

அன்பரசி : உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் சேர்ந்தால் உயிர்மெய் எழுத்தானது தோன்றும், ஐயா.

ஆசிரியர் : செல்வா, அன்பரசி கூறியதைக் கரும்பலகையில் எழுதிக்காட்டு (க் + அ = க; க் + ஆ = கா; க் + இ = கி) கரும்பலகையில் எழுதியதைப்போல மெய்யெழுத்துகள் பதினெட்டையும் உயிரெழுத்துகள் பன்னிரண்டுடன் சேர்த்து எழுத இரு நூற்றுப் பதினாறு உயிர்மெய்யெழுத்துகள் தோன்றும். உயிர்மெய் எழுத்து உயிரையும் மெய்யையும் சார்ந்திருப்பதால் இதனைச் சார்பெழுத்து என்கிறோம். நந்தா! உயிர், மெய்,

உயிர்மெய் ஆகியவற்றை விடுத்து, வேறு எழுத்து ஏதாவது இருக்கிறதா? அப்படியிருக்குமெனில், அஃது என்ன எழுத்து எனத் தெரியுமா? கூறு.

நந்தன் : தெரியும், ஐயா. அஃது அஃகேனம் எழுத்து, ஐயா.

ஆசிரியர் : அஃகேனத்தைக் கூர்ந்து நோக்குங்கள். ஃ எனும் இவ்வெழுத்து மூன்று புள்ளிகளைப் பெற்றுள்ளது. ஆகவே, இதனை முப்புள்ளி, முப்பாற் புள்ளி எனக் குறிப்பிடுவர். இஃது உயிரோடும் மெய்யோடும் சேராமல் தனித்தே இருப்பதால், தனிநிலை எனவும் கூறுவர். போர் வீரர்கள் பயன்படுத்தும் தற்காப்பு ஆயுதத்தில் (கேடயம்) காணப்படும் மூன்று குமிழ்ப் புள்ளிகள்போன்று இருத்தலால் ஆய்தம் எனவும் கூறுவர். காவேரி..!ஆய்த எழுத்துகள் இடம்பெறும் சொற்கள் இரண்டு கூறு.

காவேரி : எஃகு, அஃதிலார், ஐயா.

ஆசிரியர் : மிக நன்று. ஆய்த எழுத்து ஒரு சொல்லின் இடையில் மட்டுமே வரும். அவ்வெழுத்தின் முன் குறிலும், அதன்பின் வல்லின உயிர்மெய்க் குறிலும் வரும்.

பயிற்சி : கீழுள்ள சொற்களில் சார்பெழுத்துகளை வட்டமிடுக.

அ) அண்ணன் ஆ) எஃகு இ) கொம்பு ஈ) பண்பு உ) செல்வம்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்வு செய்க.

உயிர்மெய் எழுத்துகள் ____________________ வகையில் அடங்கும்.

1. சார்பெழுத்து 2. சுட்டெழுத்து 3. முதல் எழுத்து

2. அன்பு, அடக்கம், எஃகு – இச்சொற்களிலுள்ள சார்பெழுத்துகளை வட்டமிடுக.

3. விடுபட்ட எழுத்தை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. க் + – = கு | 3. ம் + எ = – | 5. – + அ = ச | 7. த் + ஈ = – |
| 2. ப் + ஏ = – | 4. – + ஐ = பை | 6. வ் + – = வெள | 8. – + – = பூ |

### ஆ) குறுவினாக்கள்

1. அஃகேனத்தின் வேறுபெயர்களை எழுதுக.

2. அஃகேனம் சொல்லில் எவ்வாறு இடம் பெறும்?

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் – இத்தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

ஆ) எழுதுதல் திறன்

கீழ்க்காணும் உரைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

பண்டைக்காலத்தில் அரசன் போர் செய்யக் கருதியவுடன், அவனது போர்ப்பறை முழங்கும். அப்பறையின் ஓசை நாற்றிசையையும் அதிரச் செய்யும். அவ்வோசையைக் கேட்ட போர்வீரர்கள் போர்க்கோலம் பூண்டு மிக்க ஆர்வத்தோடு போருக்குப் புறப்படுவார்கள். தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய நால்வகைச் சேனைகளும் திரண்டெழும். அரசன் படைத்தலைவரோடு சென்று அவற்றைப் பார்த்து மகிழ்வான்.

போர் செய்யப் புறப்படுவதற்கு முன்பாக அரசன், தன் அரண்மனையில் வீரர்களுக்குப் பெருவிருந்து அளிப்பான். அதைச் 'பெருஞ்சோறு' அளித்தல் என்பர். சேனை புறப்பட்டுச் செல்லும் வழியில் அரசனும் படைத்தலைவர்களும் தங்குதற்குரிய பாடி வீடுகள் அமைக்கப்பட்டிருக்கும். அங்கு அரசனும் வீரரும் இளைப்பாறுவர். அப்பொழுது ஆடலும் பாடலும் நடைபெறும்.

வினாக்கள்

1. நாற்றிசை, நால்வகைச் சேனை – இத்தொகைச்சொற்களை விரித்தெழுதுக.
2. உம் சேர்ந்திருக்கும் பெயர்ச்சொற்களை எடுத்தெழுதுக.
3. முழங்கும், செய்யும், திரண்டெழும் என்பன எவ்வகைச்சொற்கள்?

## மொழித்திறன் பயிற்சி

### வல்லினம் மிகும் இடங்கள்

1. ஓட, பாட, காண, செய்ய, எழுத, பேச, விளையாட முதலிய அகர ஈற்று வினையெச்சங்களுக்கு முன் க், ச், த், ப் மெய்யெழுத்துகளின் வருக்க எழுத்துச் சொற்கள் (வினைச்சொற்கள்) வருமாயின், உரிய வல்லெழுத்துகள் தோன்றும்.

| | | | |
|---|---|---|---|
| (எ–டு) | ஓட + காத்திருக்கிறான் | = | ஓடக் காத்திருக்கிறான். |
| | பாட + கேட்டேன் | = | பாடக் கேட்டேன். |
| | காண + கொடுத்தான் | = | காணக் கொடுத்தான். |
| | செய்ய + சொன்னான் | = | செய்யச் சொன்னான். |
| | எழுத + தொடங்கினார் | = | எழுதத் தொடங்கினார். |
| | பேச + செய்தார் | = | பேசச் செய்தார். |
| | விளையாட + பார்த்தான் | = | விளையாடப் பார்த்தான். |

2. நாடி, பேசி, தேடி, செதுக்கி, ஊன்றி, தழுவி, கொட்டி முதலிய 'இ'கர ஈற்று வினையெச்சச் சொற்களின்பின், வல்லின உயிர்மெய் எழுத்துச் சொற்கள் (வினைச்சொற்கள்) வந்தால் வல்லொற்று மிகும்.

| | | | |
|---|---|---|---|
| (எ–டு) | நாடி + சென்றான் | = | நாடிச் சென்றான். |
| | பேசி + பழகினான் | = | பேசிப் பழகினான். |
| | தேடி + திரிந்தான் | = | தேடித் திரிந்தான். |
| | செதுக்கி + கொடுத்தான் | = | செதுக்கிக் கொடுத்தான். |
| | ஊன்றி + படித்தான் | = | ஊன்றிப் படித்தான். |
| | தழுவி + கொண்டான் | = | தழுவிக் கொண்டான். |
| | கொட்டி + கிடக்கிறது | = | கொட்டிக் கிடக்கிறது. |

**பயிற்சி :**

**1. அகர ஈற்றுச் சொற்கள் ஐந்து எழுதுக.**

அ) காண    ஆ) ______    இ) ______

ஈ) ______    உ) ______    ஊ) ______

**2. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

அ) கூடி + கொண்டன = ______

ஆ) பதுங்கி + சென்றான் = ______

இ) சொல்லி + பார்த்தான் = ______

ஈ) புலம்பி + தீர்த்தான் = ______

உ) அள்ளி + கொடுத்தான் = ______

**3. விடுபட்ட தமிழ் எண்ணுருக்களை எழுதுக.**

க, –, –, ச, ரு    2. கூ, –, அ, –, – .

**4. அகரவரிசையில் அமைத்தல்**

மெய்யெழுத்துகள், உயிரெழுத்துகளோடு சேர்ந்து உயிர்மெய் எழுத்தாகிறது எனப் பார்த்தோம். சொற்களில், உயிர்மெய்யெழுத்துகளாக வரும் சொற்களை அகரவரிசையில் அமைப்போம்.

**அகரவரிசை :**

(எ–டு) கண், காண், கிளி, கீரி, குடுவை, கூகை, கெண்டை, கேள்வி, கை, கொல், கோடு, கௌவை.

**5. கீழுள்ள சொற்களை அகரவரிசையில் அமைக்க.**

கிண்ணம், கூட்டம், கீற்று, காட்சி, கடமை, குடம், கெஞ்சு, கேளிர், கைக்குட்டை, கொக்கு, கௌசிகன், குமரன், கொடி, கீரி.

**6. செயல்திட்டம் :** நும் பாடப்பகுதியில் ஏதேனும் ஒரு பத்தியை எடுத்துக்கொண்டு உயிர்மெய் எழுத்தில், ககர வருக்க எழுத்துகளைத் தொகுக்க.

**7. கடிதம் எழுதுதல் :** சுற்றுலா செல்ல அனுமதி வேண்டித் தந்தைக்குக் கடிதம்

## வாழ்க்கைத்திறன்

### முடிவெடுத்தல் திறன்

ஒரு செயலில் நாம் எடுக்கும் முடிவு ஆக்கத்திற்கானதா, அழிவிற்கானதா எனச் சிந்தித்து முடிவு எடுக்கவேண்டும். ஏனெனில், விளைவுகளைப்பற்றிச் சிந்திக்காமல் நாம் எடுக்கும் சில முடிவுகள் நம்முடைய நடத்தையையும், உடல் நலத்தையும் சீரழிக்கும்.

முருகன், வீட்டில் தன் தாய்க்கு உறுதுணையாகச் சில வேலைகளைச் செய்துவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டான். அவன் பள்ளி, வீட்டிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் இருந்தது. விரைவாக நடந்தால் மணி அடிப்பதற்கு முன்னதாகப் பள்ளிக்குச் சென்றுவிடலாம். தாயிடம் விடைபெற்றுப் புத்தகப்பையைச் சுமந்தவாறு விரைவாக நடந்தான். முக்கால்பங்குத் தொலைவு கடந்தாயிற்று.

அப்பொழுது வழியில் கூன்விழுந்த பெரியவர் ஒருவர் ஊன்றுகோலைப் பிடித்தபடி நடக்கமுடியாமல் தள்ளாடியபடி சென்று கொண்டிருப்பதைப் பார்த்தான். பாவம்! இந்த வயதிலும் அவர் எங்குப் போய்க் கொண்டிருக்கிறார்? என எண்ணியபடி அவரைக் கடந்து சென்றான் முருகன். பள்ளியின் மணியோசை கேட்டு ஓடத் தொடங்கினான்.

அந்த நேரத்தில் 'தடால்' என்ற சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். பெரியவரின் ஊன்றுகோல் சற்றே தள்ளிக் கிடக்க, அவர் தரையில் விழுந்து கிடந்தார்.

இந்த நிலையில் முருகன் இடத்தில் நீயிருந்தால் என்ன செய்வாய்?

பள்ளிக்குச் செல்வாயா? பெரியவர்க்கு உதவுவாயா?

## மதிப்புக்கல்வி

### மனக்கட்டுப்பாடு

பெண்மணி ஒருத்தி, தன்னுடைய மகனை அழைத்துக்கொண்டு பெரியவர் ஒருவரைக் காணச் சென்றாள். அவரிடம், தன் மகன் அதிகமாக இனிப்புகளை விரும்பி உண்பதாகவும், அந்தப் பழக்கத்தை விடுவதற்கு அறிவுரை சொல்லுமாறும் கேட்டாள்.

அந்தப் பெரியவர், நாற்பது நாள் கழித்து வந்து தம்மைப் பார்க்குமாறு கூறினார். மீண்டும் அப்பெண்மணி மகனுடன் அவரைச் சந்தித்தாள். பெரியவர் அச்சிறுவனிடம், "தம்பி, இனிப்புகளை அதிகமாக உண்ணாதே; உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும்" என்று கூறினார்.

அதைக் கேட்ட அப்பெண்மணி, 'இதை நீங்கள் அப்பொழுதே கூறியிருக்கலாமே, ஏன் நாற்பது நாள் கழித்துச் சொல்கிறீர்கள்' என்று கேட்டாள்.

அந்தப் பெரியவரோ, 'அம்மா, எனக்கே இனிப்பு அதிகமாக உண்ணும் பழக்கம் இருந்தது. நான் முதலில் என்னைத் திருத்திக் கொண்ட பின்னர்தானே பிறருக்கு அறிவுரை கூற முடியும். நாற்பது நாளுக்குப் பிறகு இப்போதுதான் இனிப்பு உண்பதை நான் குறைத்திருக்கிறேன். அதனால்தான் உன் மகனுக்கு அறிவுரை கூறினேன்' என்றார் அப்பெரியவர்.

நம்மை நாமே கட்டுப்படுத்திக்கொண்டு வாழவேண்டும்; இல்லையென்றால், பலவற்றுக்கும் நாம் அடிமையாகிவிடுவோம். புலனடக்கம் என்றும் புகழ் சேர்க்கும்; அடக்கம் அமரருள் உய்க்கும்.

# திரிகடுகம்

– நல்லாதனார்

தூயவர் செயல்கள்

1. உண்பொழுது நீராடி உண்டலும் என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும் – தோல்வற்றிச்
சாயினும் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும்
தூஉயம் என்பார் தொழில்.

பொருள் : நீராடிய பின் உண்ணுதல், பெரும்பயன் கிடைத்தாலும் பொய்ச்சாட்சி சொல்லாமல் இருத்தல், உடல்வாடித் தளர்ந்தபோதும் அறிவு ஒழுக்கங்களில் குன்றாது இருத்தல் ஆகிய இம்மூன்றும் மனம், மொழி, மெய்களால் தூய்மை உடையவரின் செய்கைகளாம்.

சொற்பொருள் :உண்பொழுது – உண்ணும்பொழுது; பெறினும் – பெற்றாலும்; பால்பற்றி – ஒருபக்கச் சார்பு (நடுவுநிலைமையில் இருந்து மாறுதல்); தோல்வற்றி – தோல்சுருங்கி; சாயினும் – அழியினும்; சான்றாண்மை – அறிவு ஒழுக்கங்களில் நிலைத்து நிற்றல்; குன்றாமை – குறையாது இருத்தல்; தூஉயம் – தூய்மை உடையோர்).

அறவுணர்வு உடையாரிடத்து உள்ளவை

2. இல்லார்க்கொன் றீயும் உடைமையும், இவ்வுலகில்
நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும் – எவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும்
நன்றறியும் மாந்தர்க் குள. *

பொருள் : வறியவர்க்குப் பொருளை அளித்தல், இவ்வுலகத்துப் பொருள்களின் நிலையாமையை அறிந்து நல்வழி நிற்றல், எவ்வுயிரையும் துன்புறுத்தாத நிலையில் வாழ்தல் என்னும் இம்மூன்றும் அறவழியில் நடக்கும் மக்களுக்கே என்றும் உண்டு.

சொற்பொருள் : ஈயும் – அளிக்கும்; நில்லாமை – நிலையாமை; நெறி – வழி; தூய்மை – தூய தன்மை; மாந்தர் – மக்கள்.

புதரில் விதைத்த விதை

3. முறைசெய்யான் பெற்ற தலைமையும் நெஞ்சில்
நிறையிலான் கொண்ட தவமும் – நிறைஒழுக்கம்
தேற்றாதான் பெற்ற வனப்பும் இவைமூன்றும்
தூற்றின்கண் தூவிய வித்து.

பொருள் : அறம் தவறாது செயல்படும் ஆற்றல் இல்லாதவன் பெற்ற தலைமை, ஒழுக்கம் இல்லாதவன் மேற்கொண்ட தவம், மேலான ஒழுக்கத்தைக் கடைப் பிடிக்காதவன் பெற்ற அழகு ஆகிய இம்மூன்றும் புதரில் விதைத்த விதைபோன்று பயனற்றவையே.

சொற்பொருள்: நிறை ஒழுக்கம் – மேலான ஒழுக்கம்; தேற்றாதான்– கடைப்பிடிக்காதவன்; வனப்பு – அழகு; தூறு – புதர்; வித்து – விதை.

ஆசிரியர் குறிப்பு : திரிகடுகத்தின் ஆசிரியர் நல்லாதனார், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திருத்து என்னும் ஊரினர் என்பர். இவரைச், செருஅடுதோள் நல்லாதன் எனப் பாயிரம் குறிப்பிடு வதால், இவர் போர்வீரராய் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

நூல் குறிப்பு : திரிகடுகம், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல் நூறு வெண்பாக்களை உடையது. சுக்கு, மிளகு, திப்பிலியால் ஆன மருந்துக்குப் பெயர் திரிகடுகம். இம்மருந்தை உண்ட மனிதர்களின் உடல்நோய் நீங்கும். இதைப்போன்றே ஒவ்வொரு திரிகடுகப் பாடலிலும் இடம்பெற்றுள்ள மூன்று கருத்துகளும் மக்களின் மனமயக்கத்தைப் போக்கித் தெளிவை அளிக்கும்.

நூல் பயன் : திரிகடுகம் பாடல்களிலுள்ள மூன்று அறக்கருத்துகள் கற்பாரின் மனத்திலுள்ள அறியாமையாகிய நோயைப் போக்கி, அவரைக் குன்றின்மேலிட்ட விளக்காகச் சமுதாயத்தில் திகழச் செய்யும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

உரிய விடையைத் தேர்வு செய்க.

அ) பால்பற்றிச் சொல்லா விடுதலும் – இவ்வடியில் பால்பற்றி என்பதன் பொருள்.

1. பகுப்புப்பற்றி  2. இனம்பற்றி  3. ஒருபக்கச் சார்பு பற்றி

ஆ) 'நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும்' இவ்வடியில் வழி என்னும் பொருள்தரும் சொல்.

1. நில்லாமை  2. நெறி  3. உள்

இ) வனப்பு என்னும் சொல்லின் பொருள்

1. அழகு  2. அறிவு  3. வளமை

### ஆ) குறுவினாக்கள்

1. திரிகடுகம் – பெயர்க்காரணம் கூறுக.
2. நல்லாதனார் – ஆசிரியர் குறிப்புத் தருக.
3. தூற்றின்கண் தூவிய வித்து – எனத் திரிகடுகம் உணர்த்துவது என்ன?
4. மனம், மொழி, மெய்களால் தூய்மையடைந்தவரின் செயல்கள் யாவை?

### இ) சிறுவினாக்கள்

1. தூய்மை உடையவரின் செயல்கள் யாவை?
2. நன்றறியும் மாந்தர் செயல்கள் யாவை?
3. புதரில் விதைத்த விதைகளாவன எவை?

தான் வழங்கும் நாட்டின்கண் உள்ள பல மொழிகட்கும் தலைமையாக உள்ள தகுதியும், அவற்றிலும் மிக்க மேன்மை உடையதுமான மொழியே உயர்தனிச் செம்மொழி. இவ்விலக்கண அடிப்படையை ஆராயுமிடத்துத் தமிழ்மொழியானது தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலியவற்றிற்கெல்லாம் தலைமையும் அவற்றினும் மிக்க மேன்மையும் உடையதாகையால் உயர்மொழியாகத் திகழ்கிறது. தான் வழங்கும் நாட்டில் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல மொழியே தனிமொழி எனப்படும். திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும், பொருந்திய தூய்மொழி, புகல் செம்மொழியாம் என்பது இலக்கணம்.

– பரிதிமாற் கலைஞர்

# கணிதமேதை இராமானுஜம்

தாத்தா! தாத்தா! உங்களால் இன்று நான் பள்ளியில் ஆசிரியரின் கேள்விக்கு ஆளாக நேர்ந்துவிட்டது.

ஏனப்பா, என்னவாயிற்று?

நேற்று நீங்கள் சொல்லித் தந்த வீட்டுக்கணக்குக்கான வழிமுறைகள் எல்லாம் தவறென்று ஆசிரியர் கூறிவிட்டார், தாத்தா. பிறகு, அவர் வேறுவிதமாகக் கற்றுக் கொடுத்தார்.

அப்படியா? சரி பொறுத்துக் கொள்ளப்பா! நான் என்ன எல்லா வழிமுறைகளையும் அறிந்திருக்க கணிதமேதை இராமானுஜமா?

கணிதமேதை இராமானுஜமா? அவர் யார் தாத்தா?



கணிதமேதை இராமானுஜம்

என்ன குழந்தைகளே! உங்களுக்கு இராமானுஜரைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமா? மேலே படியுங்கள்.

கணிதமேதை எனப் போற்றப்படும் இராமானுஜம் ஈரோட்டில் வாழ்ந்துவந்த சீனிவாசன்– கோமளம் இணையருக்கு 22.12.1887 இல் பிறந்தார். இவர் மூன்றாண்டுவரை பேசும் திறனற்றவராக இருந்தார். பள்ளியில் சேர்ந்து பிற மாணவர்களுடன் பேசிப் பழகினால் பேச்சு வந்துவிடும் என்று பெற்றோர் நம்பினர். எனவே, இராமானுஜத்தின் தாயார், தம் தந்தையார் வாழ்ந்து வந்த காஞ்சிபுரத்தில் இருந்த திண்ணைப் பள்ளி யொன்றில் சேர்த்தார். அவர்களின் நம்பிக்கை மெய்யாயிற்று; இராமானுஜம் நன்கு பேசத் தொடங்கினார்.

கோமளத்தின் தந்தையார், பணி யின் காரணமாகக் கும்பகோணத்திற்குக் குடும்பத்துடன் குடியேறினார். எனவே, இராமானுஜத்தின் கல்வி கும்பகோணத்

திலும் தொடர்ந்தது. இராமானுஜம் சிறுவயது முதலே கணிதப் பாடத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். வாய்ப்பு நேரும்போதெல்லாம் தன் கணிதத் திறமையை வெளிக்காட்டவும் செய்தார். கணிதப்பாடம் குறித்த கருத்துகளையும் ஐயங்களையும் உடனுக்குடன் வெளிப்படுத்த அவர் தயங்கியதே இல்லை.

ஒருநாள், கணித வகுப்பில் ஆசிரியர் வகுத்தல் கணக்குக்கான விளக்கம் கூறும்பொழுது, மாம்பழங்கள் நான்கனை, நான்குபேருக்குக் கொடுத்தால் ஆளுக்கொரு பழம் கிடைக்கும்; இதன் மூலம், ஓர் எண்ணை அதே எண்ணால் வகுத்தால் ஈவு ஒன்று என விளக்கினார். அதற்கு இராமானுஜம் சுழியம் (0) பழங்களைச் சுழியம் (0) பேருக்குக் கொடுத்தால் ஈவு ஒன்று வருமா, ஐயா? என்று கேட்டார்.

ஆசிரியர், 'சுழியத்திற்கு மதிப்பில்லை' எனச் சொன்னார். மதிப்பிருக்கு ஐயா! நான் சொல்லட்டுமா? என்று பணிவுடன் கேட்டார். ஆசிரியர் ஒப்புதல் கொடுத்ததும், ஐயா! சுழியத்தின் இடப்பக்கம் ஒன்று (1) என எழுதினால் சுழியத்துடன் சேர்த்துப் பத்து ஆகிறது அல்லவா? ஆகவே, சுழியத்திற்கு மதிப் பில்லை என்று சொல்வதற்கில்லை என்று விளக்க மளித்தார்.

ஆசிரியருக்கு இராமானுஜம் கூறியது சரி யெனவே தோன்றியது. அவரது அறிவுத் திறமையை எண்ணி வியந்தார். எப்போதும் கணிதத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த இராமானுஜம், தனது கணித அறிவை வளர்த்துக்கொள்ள கணித நூல்கள் பலவற்றைப் பயின்றார்.

1880ஆம் ஆண்டில் இலண்டனிலிருந்த கார் என்பவர் பதினைந்தாம் வயதிலேயே கணிதத்தில் சிறந்து விளங்கியதைப்போல இராமானுஜமும் சிறந்து விளங்கினார். உயர்நிலைப் பள்ளியில் பயிலும்போதே கல்லூரி மாணவர்களுக்குக் கணிதத் தொடர்பான ஐயங்களைப் போக்கினார்

"ஆய்லராக இல்லாவிட்டாலும் இராமானுசன் குறைந்தபட்சம் ஒரு ஜாகோபி"

– லிட்டில்வுட்

**ஆய்லர்**

சுவிட்சர்லாந்தைச்சேர்ந்த 18ஆம் நூற்றாண்டின் இணையற்ற கணிதமேதை

**ஜாகோபி**

19ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியில் வாழ்ந்த கணிதமேதை.

கணிதத் திறமையால்
விஞ்ஞான உலகினைப்
பிரமிக்கச் செய்து
வரலாற்றில்
குறிப்பிடத்தக்க
ஓர் இடத்தைப் பெற்ற
பிறவிக் கணிதமேதை.

– இந்திராகாந்தி

பட்டப்படிப்பிலும் கணிதத்தில் முழுமையான மதிப்பெண் பெற்றபோதிலும் பிற பாடங்களில் கவனம் குறைந்ததால், இராமானுஜத்தால் தேர்ச்சியடைய முடியவில்லை. தந்தை சீனிவாசனின் முயற்சியால் சென்னைத் துறைமுகத்தில் எழுத்தர் பணியில் சேர்ந்தார்; எனினும், தனது கணித ஆராய்ச்சியை அவர் விடவில்லை.

தான் கண்டுபிடித்த தேற்றங்களையும், எடுகோள்களையும் கேள்விகளாகத் தொகுத்து இந்தியக் கணிதக் கழகப் பத்திரிகைக்குச் சென்னைத் துறைமுகத்தின் தலைமைப் பொறியாளர் ஃபிரான்சிஸ் ஸ்பிரிங் என்பார் மூலம் அனுப்பினார். பெர்னௌலிஸ் எண்கள் எனும் தலைப்பில் வெளியான அவரது கட்டுரை, கணித வல்லுநர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

அதனைத்தொடர்ந்து ஊதியமில்லா விடுப்பு எடுத்துக்கொண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்தார். தமது கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் ஆகியவற்றை விவரமாக எழுதி, இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹார்டி என்பாருக்குக் கடிதமாக அனுப்பினார். முதலில், அக்கடிதத்தைப் பொருட்படுத்தாத ஹார்டி, பின்னர் இராமானுஜத்தை இங்கிலாந்திற்கு வரவழைக்க ஏற்பாடு செய்தார். இதனைச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்குச் சொற்பொழிவாற்ற வந்த இலண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள திரினிட்டி கல்லூரியின் பேராசிரியர் ஈ.எச்.நெவில் வாயிலாகஅறிந்து, இங்கிலாந்து செல்ல முடிவு செய்தார்.

இராமானுஜம், 1914ஆம் ஆண்டு மார்ச் 17ஆம் நாள் இங்கிலாந்துக்குக் கப்பலில் புறப்பட்டார். இலண்டனில் அவரை வரவேற்கக் காத்திருந்த மேதைகளின் கூட்டத்தைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

'திரினிட்டி கல்லூரியில்' ஆராய்ச்சி மாணவராக 18.04.1914இல் சேர்ந்தார். அவரது கணிதத் திறமையைக் கண்டு, அவருக்கு ஆண்டொன்றுக்கு அறுபது பவுண்டு உதவித்தொகை வழங்கப்பட்டது. ஹார்டி, லிட்டில்வுட் இருவரும் கணிதத்தில் இரட்டை மாமேதைகளாக விளங்கினர். கல்லூரிப்படிப்புடன் இராமானுஜம் தனது ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டார்.

கல்லூரியில் தனது கணிதத்திறமையை வெளிப்படுத்திப் பாராட்டுதல்களைப் பெற்றார். ஒருநாள் கிங்ஸ் கல்லூரிக் கணிதப் பேராசிரியர் ஆர்தர்பெர்சி, கேம்பிரிட்ஜ் மாணவர்களுக்குச் சிறப்புக் கணிதம் நடத்திக் கொண்டிருந்தார். திடீரென, இராமானுஜம் எழுந்து, 'ஐயா, நீங்கள் கணக்கிட்ட வழிமுறைகள் முறையாக இல்லையென எனக்குத் தோன்றுகிறது' என்றார். அவற்றுள், எந்த வழிமுறை தவறு எனச் சுட்டிக் காட்டுமாறு ஆர்தர் கேட்டதும், இராமானுஜம் கரும்பலகையில் ஆசிரியர் கணக்கிட்ட வழிமுறைகளில் சில திருத்தங்களைச் செய்தார். பின்பு, அக்கணக்கினைச் சுருக்கமாக எழுதி விடை வரவழைத்தார்; பேராசிரியர் வியந்து அவரைப் பாராட்டினார்.

ஹார்டி, ரோசர்ஸ் இராமானுஜன் கண்டுபிடிப்புகள் என்னும் தலைப்பில் இராமானுஜத்தின் வழிமுறைகளை நூலாக வெளியிட்டு அவருக்குப் பெருமை சேர்த்தார். இராமானுஜத்தின் திறமையை அறிந்த இங்கிலாந்துப் பல்கலைக்கழகம் 1918 பிப்ரவரியில் தங்கள் கழகத்தில் உறுப்பினராக்கி எஃப்.ஆர்.எஸ். பட்டம் வழங்கியது. இப்பட்டம், ஒருவரது திறமைகள் பிறர் வியக்கத்தக்கவகையில் இருந்தால் மட்டுமே வழங்கப்படுவதாகும்.

எஃப்.ஆர்.எஸ். பட்டம் பெற்ற இராமானுஜத்தைத் திரினிட்டி கல்லூரி பாராட்டிச் சிறப்பித்தது. கல்விக்குழுவின் சிறப்பு உறுப்பினராகவும் தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் 250 பவுண்டுத் தொகையை ஆறு ஆண்டுகளுக்கு வழங்கவும் ஏற்பாடு செய்தது. கார்டியின் பரிந்துரையின்பேரில் சென்னைப் பல்கலைக்கழகமும் 250 பவுண்டுத் தொகையை ஐந்து ஆண்டுக்குக் கொடுக்க முன்வந்தது. ஆனால், இராமானுஜம் 50 பவுண்டைத் தம் பெற்றோருக்கும் 200 பவுண்டை ஏழை எளிய மாணவர்களுக்கும் வழங்கி வருமாறு கடிதம் எழுதினார்.

ஆராய்ச்சியையே எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருந்த இராமானுஜம் தன் உடல்நிலையைக் கருத்திற் கொள்ளவில்லை. அவருக்குக் காசநோய் ஏற்பட்டது. அவரைக் காணவந்த ஹார்டி, நான் 1729 என்ற எண் கொண்ட வாடகை மகிழுந்தில் வந்தேன் எனக் கூற, படுக்கையிலிருந்து சட்டென எழுந்து, ஹார்டி அவர்களே! என்ன இப்படி இயல்பாகக் கூறுகிறீர்களே 1729 என்ற எண் இருவகைகளிலே இரு கணங்களின் கூட்டுத்தொகையாக வரும் எண்களில் மிகச்சிறிய எண் அல்லவா? எனக் கேட்டார்.

எங்கே அதனை விளக்குங்கள் என கார்டி கேட்க, $1^3 + 12^3$ என்றோ $10^3 + 9^3$ என்றோ $7 \times 13 \times 19$ என்றோ பிரிக்கலாமே என உடனடியாகப் பதில் கூறினார். ஹார்டி, மிகவும் மகிழ்ந்து அவரது கணிதத் திறனை வெகுவாகப் பாராட்டினார்.

பாராட்டுதல்கள் ஒருபுறமிருக்க, நோய்முற்றியதால் நாளுக்குநாள் உடல்நலம் குறைந்தது. இங்கிலாந்தில் நல்ல சிகிச்சை இருப் பினும் உடனிருந்து அவரைப் பார்த்துக்கொள்ள உறவினர் எவரும் இல்லாததால் இந்தியாவிற்குத் திரும்ப முடிவுசெய்து, 1919 மார்ச் 27 ஆம் நாள் மும்பைக்குக் கப்பலில் வந்து இறங்கினார்; ஏப்ரலில் சென்னை வந்து சேர்ந்தார்.

1920 ஏப்ரல் 26ஆம் நாள் மூன்று ஆண்டாகத் தீராத நோயுடன் போராடிய இராமானுஜத்தின் உயிர் பிரிந்தது. அப்போது அவருக்கு வயது முப்பத்து மூன்று.

நோயினால் துன்பப்பட்டபோதும், ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதிய வண்ணம் இருந்தார்.

இராமானுஜன்
சாதாரண மனிதரல்லர்.
அவர்
இறைவன் தந்த பரிசு.

– பேரா.ஈ.டி.பெல்

இராமானுஜன் முதல்தரமான
கணித மேதை

– இலண்டன் ஆளுநர்
லார்ட்மெண்ட் லண்ட்.

இராமானுஜன்தான்
இந்த 20 ஆம் நூற்றாண்டின்
மிகப்பெரிய கணிதமேதை

– பேராசிரியர் ஜூலியன் கக்ஸ்லி




## தெரிந்துகொள்வோம்

- 1962 திசம்பர் 22ஆம் நாளன்று அவரது 75ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நடுவணரசு பதினைந்து காசு அஞ்சல்தலை இருபத்தைந்து இலட்சம் வெளியிட்டது. வெளியிட்ட அன்றே அத்தனை அஞ்சல்தலைகளும் விற்றுத் தீர்ந்துவிட்டன.

- 1971ஆம் ஆண்டு, பேராசிரியர் இராமானுஜம் அனைத்துலக நினைவுக்குழு சென்னையில் அமைக்கப்பட்டது.

- 1972ஆம் ஆண்டு அக்டோபர் 3ஆம் நாள் முதலமைச்சர் மு.கருணாநிதி அவர்களால் இராமானுஜம் உயர் ஆராய்ச்சி நிறுவனம் திறந்து வைக்கப்பட்டது.



- அவர் பணியாற்றிய சென்னைத் துறைமுகம் சார்பில் புதிதாக வாங்கிய குடிநீர்க்கப்பலுக்கு **சீனிவாச இராமானுஜம்** எனப் பெயர் சூட்டப்பட்டது.
- அமெரிக்காவின் விசுகன்சீன் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் **ரிச்சர்ட்டும் ஆஸ்கேயும்** இணைந்து 1984இல் அவரது மார்பளவு வெண்கலச் சிலையை இந்தியாவிற்கு கொண்டு வந்து வழங்கினர்.
- கணிதக் குறிப்புகள் அடங்கிய 3 குறிப்பேடுகளையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் விட்டுச் சென்றுள்ளார். அவரது குறிப்பேடுகளில் 3000முதல் 4000 தேற்றங்களை 1957ஆம் ஆண்டு 'டாடா' அடிப்படை ஆராய்ச்சி நிலையம், அப்படியே ஒளிப்படம் எடுத்து நூலாக வெளியிட்டுள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்ந்து எழுதுக.**

அ) இராமானுஜம் திண்ணைப்பள்ளியில் படித்த ஊர்________________.

1. கும்பகோணம் 2. காஞ்சிபுரம் 3. ஈரோடு

ஆ) இராமானுஜம் ஆசிரியரிடம் ____________ மதிப்புடையது என வாதிட்டார்.

1. ஒன்று 2. நூறு 3. சுழியம்

இ) இராமானுஜம் ____________ இல் எழுத்தர் பணிபுரிந்தார்.

1. கல்லூரி 2. துறைமுகம் 3. பள்ளி

**2. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) உயர்கல்விபெற இராமானுஜம் ____________ சென்றார்.

ஆ) சென்னைத் துறைமுகம் சார்பில் குடிநீர்க்கப்பலுக்கு ____________ எனப் பெயரிடப்பட்டது.

இ) இராமானுஜம் கணித அறிவியல் நிறுவனம் நிறுவப்பட்டுள்ள இடம் ____________ .

### ஆ) குறுவினாக்கள்

1. கணிதமேதை இராமானுஜம் எங்கு, எப்போது பிறந்தார் ? அவர் பெற்றோர் யாவர் ?
2. இராமானுஜம், இலண்டன் பயணம் மேற்கொண்டதன் நோக்கம் என்ன ?
3. இங்கிலாந்துப் பல்கலைக்கழகம் இராமானுஜத்திற்கு வழங்கிய பட்டம் யாது ?

### இ) சிறுவினாக்கள்

1. சுழியத்திற்கு மதிப்பு உண்டு என்பதை இராமானுஜம் எவ்வாறு விளக்கினார் ?
2. இராமானுஜம் திரினிட்டி கல்லூரியில் மேற்கொண்ட ஆய்வுகளை விளக்குக.
3. வண்டி எண் 1729 – இந்த எண்ணைப்பற்றி இராமானுஜம் கூறிய விளக்கம் யாது ?

### ஈ) நெடுவினா

கணிதமேதை இராமானுஜம் மேற்கொண்ட கணித ஆய்வினை விளக்கி எழுதுக.

# நன்றிப்பரிசு

இருநூறு ஆண்டுக்கு முன்பு சிவகங்கைப் பகுதியை மருதுபாண்டி ஆண்டு வந்தார். இல்லை என்று வந்தவர்க்கு, அவர் ஒருபோதும் இல்லை என்று கூறாதவர்; குடிமக்களையும், குல தெய்வத்தையும் ஒரே மாதிரி நேசித்தவர், பூசித்தவர். பிரபந்தங்களும், தனிப்பாடல்களும் இயற்றி அவரைப் போற்றுமளவுக்குப் புலவர்களிடம் பெரும் ஈடுபாடு கொண்டிருந்த விவேகியான மருது பாண்டி, எதிரிகளை விரட்டிச் சிதறடித்து உதிரிகளாக்கும் தீரர், சூரர்; வீரமிக்க அவரிடம் ஈரமும் இருந்தது.

ஒருமுறை திருக்கோட்டியூரில் பெருமாள் கோவிலுக்கு எதிரிலிருந்த மண்டபத்தில் யாருமறியாமல் தங்கியிருந்தார் மருதுபாண்டி. அவரது வலக்கையில் ஒரு பெரிய கட்டி ஏற்பட்டு, அதனால் துன்பப்பட்டார். அச்சமயம் பகைவர் சிலர், அவரைச் சிறைப்பிடிக்க முயற்சி செய்தனர். செய்தியறிந்ததும் அவருடைய கண்கள் சிவந்தன.

படுத்திருந்த அவர், நெஞ்சு துடித்து எழுந்தார். வலக்கை வலியையும் பொருட்படுத்தாமல் குதிரையின் மீதேறி பகைவர்களை முறியடிக்க விரைந்தார். பகைவர், அவரைச் சூழ்ந்து கடுமையாகத் தாக்கத் துணிந்தனர். அவர், காற்றாய்ச் சுழன்று கடிதில் பகைவர்களை எதிர்த்தார்; பகைவர்களை நாற்றிசையிலும் சிதறடித்தார்.

பின்தொடர்ந்து வந்தால் பிடிபடக்கூடாது என்ற எண்ணம் மேலோங்கியவராய்க் காற்றெனத் தன் குதிரையைச் செலுத்தினார். 'டக் டக் டக்' கென்று இரவெல்லாம் ஓடியது குதிரை. மருதுபாண்டியின் விரட்டலுக்குக் குதிரை பணிந்து, வாயோரம் நுரை தள்ளச் சோர்ந்துபோய், ஒரூரின் முன்தெருவில் போய் அது நின்றது. அப்போது புலர்ந்தும் புலராத பொழுது. பசியும் தாகமும் சோர்வும் நிறைந்த மருதுபாண்டி, தெருவாசலில் கோலமிடும் ஒரு கிழவியைக் கையெடுத்துக் கும்பிட்டார்.

எடுப்பான தோற்றம் கொண்ட அவரையும் அவரது குதிரையையும் மாறி மாறிப் பார்த்த கிழவி, "மகனே யார் நீ? உனக்கு என்ன வேண்டும்? '' என்று கனிவுடன் கேட்டாள்.

"அம்மா, பசியும் தாகமும் என்னை மிகவும் வருத்துகின்றன; சாப்பிட ஏதாவது இருந்தால் கொடுங்கள்...'' அவருடைய குரல் கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதுபோல் ஒலித்தது.

"இரவு மிச்சமான, தண்ணீர் ஊற்றிய பழைய சோறுதான் இருக்கிறது. உன்னைப் பார்த்தால் பெரிய இடத்துப் பிள்ளை மாதிரி தெரிகிறாய்... உனக்குப் பழைய சோற்றையா தருவது" என்று தழுதழுத்த குரலில் கேட்டாள் கிழவி.

“அம்மா, அன்போடு தாங்கள் படைக்கும் சோறு தற்சமயம் எனக்குப் பழைய சோறு இல்லை; கிடைத்தற்கரிய அமுதம்’’ என்றார் அவர்.

கை, கால், முகம் கழுவிக்கொண்டு, உயரம் குறைவாய் வாசற்படி வைத்துக் கட்டப்பட்டிருந்த அந்தக் கூரை வீட்டிற்குள் குனிந்து நுழைந்தார் மருது பாண்டி.

சாணத்தால் மெழுகப்பட்டிருந்த தரையில் விரித்த ஈச்சம் ஓலைப்பாயில் உட்கார்ந்தார் அவர்.

சற்றே பெரிய அந்த அறையின் ஒருமூலையில் இரண்டு பிள்ளைகள் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர், அவர்களைக் கவனிப்பதைக் கண்ட கிழவி, “என் பேரன், பேத்தி. என் மகன்கள் இருவரும் தங்கள் மனைவிகளோடு வெளியூருக்குச் சென்றிருக்கிறார்கள்..’’ என்றவள், அப்போதுதான் புறக்கடைப் பக்கமிருந்து அறுத்து வந்த வாழையிலையில் பிழிந்த பழைய சோற்றினை இட்டாள்; தொட்டுக்கொள்ள நெல்லிக்காய் ஊறுகாயும் வைத்தாள்.

பசி ருசியறியாது என்பதை மெய்ப்பிக்கும் வகையில் மருதுபாண்டி பழைய சோற்றினைச் சுவைத்துச் சாப்பிட்டார்; அருமை அருமை என்று பாராட்டினார்.

“அம்மா... ஓர் உதவியைத் தொடர்ந்து, இன்னோர் உதவியையும் உங்களிடம் யாசிக்கின்றேன். இரவெல்லாம் பயணம் செய்ததால் களைப்பு மிகுதியாயுள்ளது. சிறிது உறங்கி ஓய்வெடுக்கவும் குதிரையைக் கட்டவும் மறைவான இடம் தேவை. உதவ முடியுமா?’’ என்று பணிவுடன் கேட்டார், அவர்.

“ப்பூ...! இதெல்லாம் ஓர் உதவியா? தோட்டத்துப் பக்கம் ஒரு கொட்டகை உள்ளது. அதைப் பயன்படுத்திக்கொள் மகனே’’ என்று தோட்டத்துக் கதவைத் திறந்த கிழவி, “ஆங்... மறந்து விட்டேனே, குதிரைக்குக் கொள்ளும் தண்ணீரும் வைக்கிறேன்... வாயில்லா உயிர்...” என்றாள்.

கொட்டகையில் குதிரைச் சேணத்தைத் தலைக்கு வைத்தவாறு மெய்மறந்து சுட்டெரிக்கும் சூரியன் உச்சிக்கு வரும்வரை ஆழ்ந்துஉறங்கினார் மருதுபாண்டி. மருதுபாண்டிக்குக் கூரை வீட்டுப் பழைய சோறும், ஆழ்ந்த உறக்கமும் புதியதொரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. உறைவிடமும் உணவும் அளித்த கிழவிக்கு நன்றியைச் செலுத்த மருதுபாண்டியின் மனம் எண்ணியது.

“அம்மா, எழுத்தாணியும் ஓலையும் தாருங்கள்.’’

“ மகனே... எழுத்தாணியும், ஓலையும் எங்கு வைக்கப்பட்டிருக்கின்றனவோ எனக்குத் தெரியாதேப்பா... ’’

இருக்கையிலிருந்து எழுந்த அவர், தோட்டத்துப் பக்கமிருந்த சுமார் மூன்றடி உயரம் வளர்ந்திருந்த பனையிலிருந்த ஓலையை அறுத்தெடுத்து வேலி முள்ளால் ஓலையில் எதையோ எழுதினார்.

எழுதும் அவரையும், அவரது எழுத்துகளையும் சிந்தித்தவாறு பார்த்தாள், கிழவி. “அம்மா, இதைச் சிவகங்கை அரசாங்க அலுவலர்களிடம் கொடுங்கள். உங்கள்

கவலைகளை விடுங்கள்...'' என்று ஓலையைக் கிழவியின் கையில் திணித்துவிட்டுக் கண்களில் நீர் ததும்ப வாய் நிறைய நன்றி கூறிக் கிழவியின் கால்களில் பணிந்து, குதிரை மீதேறிப் போனார் மருதுபாண்டி.

விடை கொடுத்தாள் கிழவி; ஓரக்கண்களைச் சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டே வெளியூரிலிருந்து திரும்பிய மகன்களிடம் நடந்ததைக் கூறி ஓலையைக் காட்டினாள். படித்த மக்கள் மகிழ்ந்தனர். சிவகங்கை அரசாங்க அலுவலர்களுக்கு ஓலையைக் காட்ட எடுத்துச் செல்வதற்குள், 'மருதுபாண்டி பகைவர்களால் சிறையில் அடைக்கப்பட்டார்' என்ற துயரச் செய்தி கிடைத்தது. ஏற்கனவே உடலால் தளர்ந்திருந்த மருதுபாண்டியிடம் மனிதநேயத்தோடு, "உங்களுடைய இறுதி விருப்பம் யாது ? சொல்லுங்கள்...'' என்று வேண்டினர், பகைவர்.

"நான் அரசோச்சிய காலத்தில் யார் யாருக்கு எந்தெந்த ஊர்களைத் தானமாக வழங்கினேனோ அவற்றை அவரவர்களுக்கே உரிமையாக்க வேண்டும். இதுவே என் இறுதி விருப்பம்...'' என்றார் கணீரென்று.

நற்செய்தி அறிந்த கிழவி, தன்னிடமிருந்த ஓலையைக் கொண்டு சென்றாள்; கொடுத்தாள் மருது பாண்டியரைப் பிடித்திருந்த பகைவர்களிடம். அவள் வசித்த ஊர், அவளுக்குக் கொடையாகக் கிடைத்தது. மருதுபாண்டி அவ்வாறு ஓலையில் எழுதியிருந்தார்.

"பழைய சோற்றுக்கா இவ்வளவு பெரிய பரிசு...'' என்று வியந்தாள் கிழவி.

அந்த ஊர்தான் சிவகங்கைக்கு அருகில், பழஞ்சோற்றுக் குருநாதனேந்தல் என்னும் பெயரில் இன்றும் வழங்கி வருகிறது.

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

என்னும் திருக்குறளுக்கு மிகச் சரியான எடுத்துக்காட்டாய் விளங்கியவர் மருதுபாண்டி. தினையளவு உதவிக்குப் பனையளவு நன்றியை மறவாமல் செலுத்திய நன்றி மறவா நல்லவர் வல்லவர் மருதுபாண்டி. நன்றி நல்லவர்களிடம் நாளும் வாழும். நன்றி மறப்பது நன்றன்று என்கிறது வள்ளுவம். ஆகவே, நன்றி மறவாமையே உயரிய பண்பாகும்.

( நன்றி : நீலவன், முத்துக்கதைகள் என்னும் கதைத் தொகுப்பிலிருந்து எடுத்தாளப்பட்டது.)

## மாதிரி வினா

### கட்டுரை வினா

இச்சிறுகதை வாயிலாக மருதுபாண்டியின் பண்பினை வெளிப்படுத்துக.

# நால்வகைச் சொற்கள்

மாணவர்கள் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம், குழந்தைகளே! தமிழரசி, நேற்று நீ ஏன் பள்ளிக்கு வரவில்லை?

தமிழரசி : நான் மதுரைக்குச் சென்றிருந்தேன், ஐயா.

ஆசிரியர் : ஓ... அப்படியா... யார் யாருடன் சென்றாய்?

தமிழரசி : என் அப்பா, அம்மாவுடன், ஐயா.

ஆசிரியர் : உடன் யார் வந்தது?

தமிழரசி : என் தம்பியும் வந்தான், ஐயா.

(ஆசிரியர் கரும்பலகையில் அம்மா, அப்பாவுடன் மாநகர் மதுரைக்குச் சென்றோம். என் தம்பியும் வந்தான் என எழுதுதல்.)

ஆசிரியர் : செல்வன்! வண்ணமிட்ட சொற்களைப் படி.

செல்வன் : படிக்கிறேன், ஐயா. அப்பா, அம்மா, மாநகர் மதுரை, தம்பி வந்தான்.

ஆசிரியர் : அம்மா, அப்பா, மாநகர் மதுரை என்பன எவ்வகைச் சொற்கள் எனத் தெரியுமா?

கண்ணன் : இம்மூன்றும் பெயர்ச்சொற்கள், ஐயா.

ஆசிரியர் : நன்று. இவை பெயரையும் இடத்தையும் குறித்து வந்ததால் பெயர்ச் சொற்கள் ஆயின. நல்லான்அடுத்த சொல் என்னவென்று கூறு.

நல்லான் : வந்தான், ஐயா.

ஆசிரியர் : ஒரு பொருளின் செயலைக் (இயக்கத்தைக்) குறிப்பதால் இச்சொல் வினைச்சொல் ஆயிற்று. வேந்தா, அடுத்த சொல் என்னவென்று கூறு.

வேந்தன் : 'தம்பியும்'

ஆசிரியர் : தம்பி + உம். இதிலுள்ள 'உம்' என்பது இணைப்புச் சொல்லாக வருகிறது. இதனை இடைச்சொல் என்பர்.

செந்தணல் : இது தனியாக வந்தால் பொருள் தருமா? ஐயா.

ஆசிரியர் : நன்றாகக் கேட்டாய், செந்தணல். இது தனியாக வந்தால் பொருள் தராது; பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களைச் சார்ந்தே வரும்.

மதிவாணன் : வேறு எடுத்துக்காட்டுகள் கூறுங்கள், ஐயா.

ஆசிரியர் : சொல்கிறேனே! கேள். இராமனைப் பார்த்தேன். இராமன் + ஐ. இதில் வரும் வேற்றுமை உருபு ஐ இடைச்சொல்லாகும்.

கற்றதனா லாய பயனென் கொல். இதிலுள்ள கொல் என்னும் அசைச்சொல்லும் இடைச்சொல்லே. இவ்வாறு இடைச்சொற்கள் தனித்தியங்காமல் பெயரையோ வினையையோ சார்ந்தே வரும். அவற்றையெல்லாம் மேல் வகுப்புகளில் கற்கவிருக்கிறீர்கள். அடுத்த சொல் என்ன?

தாமரை : மாநகர், ஐயா.

ஆசிரியர் : மாநகர் என்னும் சொல்லிலுள்ள மா என்பது உரிச்சொல் ஆகும். இதன் பொருள் பெரிய என்பது...

செல்வன் : உரிச்சொல் என்றால் என்ன, ஐயா?

ஆசிரியர் : சொல்கிறேன். பலவகைப்பட்ட பண்புகளைக்கொண்டு பெயர்ச் சொற்கள், வினைச்சொற்களைவிட்டு நீங்காது செய்யுளுக்கே உரிமை பெற்று வருவன உரிச்சொற்கள். இவ்வாறு இலக்கணவகைச் சொற்கள் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும்.

மாணவர் : நன்றி, ஐயா.

பயிற்சி : உனக்குத் தெரிந்த பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களை எழுதுக.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவய வினாக்கள்

1. கண்ணன் உறுபசியால் தவித்தான்.
   இந்த முற்றுச்சொற்றொடரில் உள்ள சொற்களை வகைப்படுத்திக் காட்டுக.
   அ) ________ ஆ) ________ இ) ________ ஈ) ________
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று. – இந்த முற்றுச்சொற்றொடரில் உள்ள சொற்களை வகைப்படுத்திக்காட்டுக.
   அ) ________ ஆ) ________ இ) ________ ஈ) ________
3. பொருத்துக.
   அ) பெயர்ச்சொல் – வந்தான்
   ஆ) வினைச்சொல் – ஐந்தும் ஆறும்
   இ) இடைச்சொல் – தவமுனிவன்
   ஈ) உரிச்சொல் – வேலன்

### ஆ) குறுவினாக்கள்

1. சொல் எத்தனை வகைப்படும்?
2. இடைச்சொல் என்றால் என்ன? சான்றுதந்து விளக்குக.
3. உரிச்சொல் என்றால் என்ன? சான்றுதந்து விளக்குக.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

1. வாழ்க்கையில் வெற்றிபெறுவதற்கான வழிகள் என்னும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.
2. நன்றிப்பரிசுக் கதையை நாடகமாக நடித்துக் காட்டுக.

### ஆ) படித்தல் திறன்

பொருளுக்கேற்றவாறு குரல் ஏற்ற இறக்கத்துடன் படித்துக் காட்டுக.

ஆகாயத்தாமரையைப் பறித்துக் கொடுத்திடும் அற்புதம் அவர் காட்டினாரில்லை; ஆனால், ஊமைகளாய் இருந்து வந்த மக்களைப் பேச வைத்தார்; உரிமை முழக்கமிடச் செய்தார்; படைபல வந்திடினும் தடைபல நேரிடினும் அஞ்சாதீர் என்றுரைத்தார்; அச்சத்தைத் துடைத்தார்; ஆயுதம் தாங்கியவர் எதிரில் உயிர் துறக்க அஞ்சாதாரின் ஓர் அணிவகுப்பை நிறுத்திக் காட்டினார்; சிட்டுக்குருவிகளுக்கு வல்லூற்றை எதிர்த்திடும் ஆற்றல் ஏற்படச் செய்தார்.

### இ) எழுதுதல் திறன் : குறிப்புகளைக்கொண்டு கதை எழுதுதல் (மாதிரி)

உப்பு வணிகன் – கழுதையின்மேல் உப்புமூட்டை ஏற்றல் – நாள்தோறும் கடைக்குச் சென்று விற்றல் – வழியில் ஆற்றைக் கடத்தல் – கழுதை தவறி ஆற்றுநீரில் விழுதல் – மூட்டையின் எடை குறைதல் – மறுநாளும் விழுதல் – உப்பு வணிகனுக்கு வருவாய் குறைதல் – கழுதையின் மனநிலையை அறிதல் – மூட்டையில் பொருளை மாற்றுதல் – அறியாத கழுதை மீண்டும் ஆற்றுநீரில் விழுதல் – எடை அதிகரித்தல் – உண்மை உணர்தல்.

### கழுதையின் சூழ்ச்சி

ஓர் ஊரில் உப்பு விற்கும் வணிகன் ஒருவன் இருந்தான். அவன் நாள்தோறும் உப்புமூட்டை களைக் கழுதையின் மேலேற்றி ஆற்றைக் கடந்துசென்று விற்று வருவான்.

நாள்தோறும் அதிக எடையுள்ள உப்புமூட்டையைச் சுமந்து செல்வது கழுதைக்குப் பிடிக்க வில்லை. அது துன்பப்பட்டுக்கொண்டே வேலை செய்து வந்தது. ஒருநாள் உப்பு வணிகன் முன்னால் செல்ல, கழுதை மெதுவாக அவன் பின்னே சென்று கொண்டிருந்தது. அப்போது அது, எதிர்பாராமல் ஆற்றுநீரில் தவறி விழுந்தது; எழுந்தபோது தன்மீதுள்ள மூட்டையின் எடை குறைந்ததைக் கண்டுகொண்டது.

மறுநாளும் வேண்டுமென்றே நீரில் தவறி விழுந்தது. மூட்டையின் எடை குறைந்தது. கழுதையின் இச்செயல் நாளும் தொடர்ந்தது. படிப்படியாக வருமானம் குறைந்துகொண்டே வருவதைத் கண்ட வணிகன், உண்மையை அறிந்துகொண்டான். தீயஎண்ணம் கொண்ட கழுதைக்குப் பாடம் புகட்ட விரும்பினான்.

மறுநாளும் கழுதை கால் தடுமாறி விழுவதுபோல, நீரில் விழுந்தது. ஆனால், அஃது எழுந்த போது, முன்பைவிட எடை கூடியுள்ளதைக் கண்டது. அன்று, சுமக்க முடியாமல் சுமந்து சென்றது. நாளும் கழுதை தவறி விழ, எடையும்கூட, மெதுவாக உண்மையை உணரத் தொடங்கியது. நாம் வணிகனை ஏமாற்ற நினைத்தோம். ஆனால், வணிகன் நம்முடைய எண்ணத்தைப் புரிந்துகொண்டு, உப்பு மூட்டைக்குப் பதிலாகப் பஞ்சு மூட்டையை வைத்துவிட்டான் போலும்.

தீமை செய்ய நினைத்த எனக்கு நன்றாகப் புரிய வைத்துவிட்டான். இந்தத் தவற்றை இனிச் செய்யக் கூடாது என்று அக்கழுதை முடிவெடுத்தது.

பயிற்சி

கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்திக் கதையை விரித்து எழுதுக.

சிறுவன் – ஆடுகளை மேய்த்தல் – பிறரை ஏமாற்ற நினைக்கும் குணம் – புலி வருகிறது என எப்போதும் கூறல் – மற்றவர்கள் ஏமாறுதல் – உண்மையாகவே புலி வந்துவிடுதல் – சிறுவன் அழைத்தல் – மற்றவர்கள் இவன் எப்போதும் இப்படித்தான் என நினைத்தல் – பார்க்காமல் இருத்தல் – புலி ஆடுகளை அடித்துச்சென்றுவிடுதல் – சிறுவன் வருந்துதல்.

ஈ) செயல்திட்டம் : கணித மேதைகள் இருவரைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றைத் தொகுக்க.

## மொழித்திறன் பயிற்சி

### அ) வல்லினம் மிகும் இடங்கள்

1. எட்டு, பத்து ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் மட்டும் வல்லின வருக்கச் சொற்கள் வந்தால் வல்லொற்று மிகும்.

(எ–டு) எட்டு + கால் = எட்டுக்கால்
பத்து + பேர் = பத்துப்பேர்
எட்டு + தொகை = எட்டுத்தொகை
பத்து + பாட்டு = பத்துப்பாட்டு

**நானே செய்வேன்**
பத்து + சட்டை =
பத்து + தோப்பு =
எட்டு + கூடை =
எட்டு + தேர் =

2. பாடாத, கேளாத, ஆடாத, செய்யாத, சொல்லாத என்பன எதிர்மறைப்பொருளில் வரும் பெயரெச்சங்கள் ஆகும். இச்சொற்களிலுள்ள ஈற்றெழுத்தானது கெட்டுப் பாடா, கேளா, ஆடா, செய்யா, சொல்லா என வருவதும் உண்டு. அவ்வாறு வருவதை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பர். இவற்றின்முன் வல்லின வருக்க எழுத்துகள் வந்தால் வல்லொற்று மிகும்.

(எ–டு) பாடா + குயில் = பாடாக்குயில்
கேளா + செவி = கேளாச்செவி
ஆடா + தோழி = ஆடாத்தோழி
செய்யா + செயல் = செய்யாச்செயல்
சொல்லா + சொல் = சொல்லாச்சொல்

### வல்லினம் மிகா இடங்கள்

வந்த, உடைந்த, செய்த, கிழிந்த, காய்ந்த என்பன முற்றுப்பெறாத வினைச்சொற்கள். இத்தகைய சொற்கள் பெயரைக்கொண்டுதான் முற்றுப்பெறும். இச்சொற்களைப் பெயரெச்சம் என்பர்.

(எ–டு) வந்த + குழந்தை = வந்த குழந்தை

உடைந்த + பலகை = உடைந்த பலகை

செய்த + பணி = செய்த பணி

கிழிந்த + துணி = கிழிந்த துணி

காய்ந்த + கட்டை = காய்ந்த கட்டை

**நானே செய்வேன்**

செய்த + தச்சன் =

பாடிய + கவிதை =

காத்த + சிறுமி =

வெடித்த + பஞ்சு =

இவ்வாறான பெயரெச்சச் சொற்கள்முன் வல்லொற்று மிகாது.

**ஆ) தமிழ் எண்ணுப்பெயருக்குரிய எண்ணுருக்களைப் பொருத்துக.**

| எண்ணுப்பெயர் | – | எண்ணுரு |
|---|---|---|
| 1. ஐந்து | – | அ |
| 2. ஏழு | – | ௩ |
| 3. எட்டு | – | எ |
| 4. மூன்று | – | கo |
| 5. பத்து | – | ரு |

**இ) கட்டுரை எழுதுதல் :** அன்றாட வாழ்வில் அறிவியல்

## வாழ்க்கைத்திறன்

### பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்

சோமு, வீட்டிற்கு ஒரே பிள்ளை. அவன் கேட்பது எல்லாம் உடனுக்குடன் கிடைத்துவிடும். அடம்பிடித்துத் தான் விரும்புவதையெல்லாம் வாங்கிவிடுவான். பெற்றோர் வசதியாக இருந்தமையால், மறுப்பு எழுவதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது.

சோமு ஒருநாள், தன் தந்தையுடன் துணிக்கடைக்குச் சென்றான். அங்கு இருந்த வண்ணமயமான ஆடை அவன் மனத்தைக் கவர்ந்தது. அந்த ஆடைதான் தனக்கு வேண்டும் என்று வழக்கம்போல் அடம்பிடித்தான், சோமு. அவனுடைய தந்தை ஆடையை வாங்கிப் பார்த்தார். விலை ரூபாய் எழுநூறு என்று இருந்தது. ‘அப்பா விலையை ஏன் பார்க்கிறீர்கள் ? எனக்கு இதுதான் வேண்டும். வேறு எதுவும் எனக்கு வேண்டாம்’ என்று திட்டவட்டமாகக் கூறினான் சோமு. அப்போது அங்கு ஒரு சிறுவன், அவன் பெற்றோருடன் அதே ஆடையைப் பார்த்துக்கொண்டு நின்றான். அச்சிறுவனின் பெற்றோரும் அவ்வாடையின் விலையைப் பார்த்தனர். உடனே அச்சிறுவனின் தந்தை, ‘கண்ணா, இந்தத் துணி நன்றாக இல்லை, வா நாம் அடுத்த கடைக்குப் போகலாம்’ என்று அழைத்துச் சென்றார். அச்சிறுவனோ அந்தத் துணியைப் பார்த்துக்கொண்டே சென்றான். அவன் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. அதைக் கவனித்த சோமு, அவர்களின் ஏழைமை நிலையினை எண்ணிப் பார்த்தான். ஒருவேளை, தான் அந்தச் சிறுவனாக இருந்து, அப்பா வாங்கித் தராமல் இருந்திருந்தால் என்ன செய்திருப்போம் ? என்று நினைத்துப் பார்த்தான்.

பிறர்நிலையில் தன்னை வைத்துப் பார்க்கும் மனநிலையைப் பெற்றவர்கள் காரண காரியங்களை அறியும் திறன் பெறுவார்கள். இதனால், சிந்தனைத்திறன் வளர்வதோடு உதவும் மனப்பான்மை, இரக்கக்குணம் ஏற்படும். பிறரை எள்ளி நகையாடுவதோ குற்றங் காண்பதோ தீங்கிழைப்பதோ அவர்தம் மனத்தில் ஏற்படாது.

யார், எது செய்தாலும் அவர்நிலையில் நின்று ஒருநொடி சிந்தித்துப் பாருங்கள். அந்த இடத்தில், அந்தச் சூழலில் நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம்; எப்படி நடந்துகொண்டிருப்போம்? உங்களுக்குள் உள்ள கற்பனைக் குதிரையைத் தட்டிவிட்டுப் பாருங்கள்.

## மதிப்புக்கல்வி

### கடமை

பிரேம் சந்த், இந்திமொழியில் புகழ்பெற்ற ஓர் எழுத்தாளர். அவருடைய கதைகள் பெரும் புகழ்பெற்றவை. பிரேம் சந்த் ஒருமுறை உடல் நலமில்லாமல் இருந்தார். ஆனால், அந்த நிலையிலும் எழுத்துப் பணியினை விடாமல் செய்து கொண்டிருந்தார். அதனைக் கண்ட அவர் மனைவி, 'ஏன் இப்படி உங்களை வருத்திக் கொள்கிறீர்கள்? சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும். உங்கள் உடல் நலம் நன்றாக இருந்தால்தானே எழுத முடியும்; எழுதுவதை நிறுத்தி உங்கள் உடல்நலத்தில் அக்கறை செலுத்துங்கள்' என்று வற்புறுத்திக் கூறினார்.

அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த பிரேம் சந்த், 'ஒரு விளக்கை ஏற்றி வைத்தால் ஒளி கொடுக்க வேண்டியது, அதன் கடமை. அதை விட்டுவிட்டு, நம்முடைய ஒளியினால் பிறருக்கு நன்மையா தீமையா என்று ஆராய்வது அதன் வேலையன்று. எண்ணெயும் திரியும் உள்ளளவும் தானாகவே எரிந்து, பின்னர் அணைந்து விடும்' என்றார்.

உடல் நலம் பாதித்தபோதும் எடுத்த வேலையை முடிக்காது, அவ்விடத்தைவிட்டுச் செல்ல விரும்பாமல் கடமையே பெரிது என வாழ்ந்தார் பிரேம் சந்த்.

கடமைக்கு முதலிடம் தருவோர் வாழ்க்கையில் வெற்றிபெறுவர். நீங்களும் அன்றாடப் பணிகளை அன்றன்றைக்கே முடிக்கும் பழக்கத்தை மேற்கொள்ளுங்கள். உங்களை வெல்ல யாராலும் இயலாது.

மாணவர்களே! நீங்கள் எப்படி? கடமையுணர்ச்சி கொண்டவர்களா?

உங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துங்கள்.

உனக்குத் தெரிந்த இடைச்சொற்களையும் உரிச்சொற்களையும் பட்டியலிடுக.

# தனிப்பாடல்

## இரட்டுறமொழிதல்

ஓடும் சுழிசுத்தம் உண்டாகும் துன்னலரைச்
சாடும் பரிவாய்த் தலைசாய்க்கும் – நாடறியத்
தேடு புகழான் திருமலைரா யன்வரையில்
ஆடுபரி காவிரியா மே.

– காளமேகப் புலவர்

பொருள் : புகழ்பெற்ற மன்னன் திருமலைராயன் நாட்டில்,

விரைந்து ஓடுவதால், தெளிந்த (சுத்தமான) சுழி உடையதால், பகைவரைத் தாக்குவதால், அன்போடு தலை சாய்ப்பதால் குதிரையும், வெள்ளத்தால் ஆறு விரைந்து ஓடுவதால், ஓடுகிறபொழுது நீரில் சுழிகள் உடையதால், மலர்களை அலைத்துச் செல்வதால், பயிர்களுக்கு வளம் சேர்ப்பதால் காவிரியும் ஒன்றாகும்.

சொற்பொருள் : சுழி – உடல்மீது உள்ள சுழி, நீர்ச்சுழி; துன்னலர் – பகைவர், அழகிய மலர்; பரிவாய் – அன்பாய்; சாடும் – தாக்கும், இழுக்கும்; ஆடுபரி – ஆடுகின்ற குதிரை.

ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | காளமேகப்புலவர் |
| பிறந்த ஊர் | : | கும்பகோணத்திற்கு அருகில் உள்ள நந்திக்கிராமம் எனவும், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள எண்ணாயிரம் எனவும் கூறுவர். |
| இயற்பெயர் | : | வரதன் |
| பணி | : | திருவரங்கக் கோவில் மடைப்பள்ளியில் பணிபுரிந்தார். வைணவ சமயத்தில் இருந்து சைவசமயத்திற்கு மாறினார். கார்மேகம் போல் கவிதை பொழியும் ஆற்றல் பெற்றதால், இவர் காளமேகப்புலவர் என அழைக்கப் பெற்றார். இவர், இருபொருள் அமைய நகைச்சுவையுடன் பாடுவதில் வல்லவர். |

நூல் குறிப்பு : புலவர் பலர், பல்வேறு சூழ்நிலைக்கு ஏற்ப அவ்வப்போது பாடிய பாடல்களின் தொகுப்பே தனிப்பாடல் திரட்டு. இதனை, இராமநாதபுரம் மன்னர் பொன்னுசாமி வேண்டுதலுக்கிணங்க, சந்திரசேகர கவிராசப் பண்டிதர் தமிழகம் முழுவதும் சென்று தேடித் தொகுத்தார்.

நூல் பயன் : தனிப்பாடல்களைக் கற்பதனால், தமிழ்மொழியின் பெருமையையும் புலவர்களின் புலமையையும் சொல்லின்பம் பொருளின்பம் கற்பனைஇன்பம் முதலியவற்றையும் பெறலாம்.

## மாதிரி வினாக்கள்

அ) குறுவினாக்கள்

1. இரட்டுறமொழிதல் என்பதன் பொருள் யாது ?
2. காளமேகப் புலவர் – குறிப்பு எழுதுக.
3. காவிரியின் தன்மைகளாகப் பாடல் உணர்த்தும் கருத்துகள் யாவை ?

ஆ) சிறுவினாக்கள்

ஆடுபரியும் காவிரியும் ஒன்று என்பதைக் காளமேகப் புலவர் எவ்வாறு குறிப்பிடுகிறார் ?

## கல்விக்கு எல்லை இல்லை

கற்றதுகைம் மண்ணளவு கல்லா(து) உலகளவென்(று)
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள் – மெத்த
வெறும்பந் தயம்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையால்எண் சாண். *

– ஔவையார்

பொருள் : புலவர்களே! இதுவரை நாம் படித்தது கைம்மண்ணளவே. இன்னும் படிக்க வேண்டியவை உலகளவு என நினைத்தே கலைமகள் இன்றளவும் படித்துக்கொண்டே இருக்கிறாள். ஆதலால், மிகுதியாகப் படித்துவிட்டோம் என்ற செருக்குடன் வீண் வல்லமை பேசவேண்டாம். சிறு எறும்பும் அதன் கையினால் எண் சாண் உடையதே.

சொற்பொருள் : கைம்மண்ணளவு – ஒரு சாண் எனவும் பொருள் கொள்வர்; மெத்த – மிகுதியாக; பந்தயம் – போட்டி; புலவீர் – புலவர்களே; கலைமடந்தை – கலைமகள்.

ஆசிரியர் குறிப்பு : இங்குக் குறிக்கப்படும் ஔவையார், சங்க கால ஔவையாருக்கு மிகவும் பிற்பட்டவர். கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப்புலவர் முதலிய புலவர்கள் இவர் காலத்தில் வாழ்ந்ததாகக் கூறுவர்.

நூல் குறிப்பு : புலவர் பலர் பாடிய தனித்தனிப் பாடல்கள் தொகுக்கப் பெற்றுத் தனிப்பாடல் திரட்டு எனப் பெயரிடப்பட்டுள்ளது. அத்தொகுப்பில் இருந்து ஒருபாடல் இங்கு இடம் பெற்றுள்ளது.

நூல் பயன் : புலவர் பலரின் பாடல்களின் தொகுப்பாகிய இந்நூலைக் கற்பார், அவர்தம் நற்கருத்துகளைக் கடைப்பிடித்து மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்.

## மாதிரி வினாக்கள்

அ) குறுவினாக்கள்

1. ஔவையார் – குறிப்பு எழுதுக.
2. கலைமகள் என்ன செய்துகொண்டிருக்கிறாள் ?

ஆ) சிறுவினா

கற்றார் செருக்குக் கொள்ளக்கூடாது என ஔவையார் கூறுவது ஏன் ?

# காந்தியடிகள் கடிதம்

குஜராத்,
02.10.1917

அனைவருக்கும் என் இனிய வணக்கம். குழந்தைகள் அனைவரும் நலந்தானே? குஜராத் மாநிலத்தில் நான் ஆற்றிய உரையை, உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என விரும்பினேன். என் பிறந்தநாளில் அந்தக் கருத்துகளை உங்களுக்குத் தெரிவிப்பதில் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

பயிற்றுமொழியைப்பற்றி நிறைவான ஒரு முடிவுக்கு வருவதுதான், கல்வி கற்பித்தலில் நாம் செய்யவேண்டிய முதல்செயல், அதைப்பற்றி அனைவரும் தெளிவாகப் புரிந்து கொள்வதே.

பயிற்றுமொழியைக் குறித்துச் சிந்திக்காமல் கல்வி கற்பிப்பது, அடித்தளம் இல்லாமல் கட்டடத்தை எழுப்புவதைப் போன்றது.

இச்செய்தியைப்பற்றிக் கல்வியாளர்களிடையே இருவேறுபட்ட கருத்துகள் நிலவி வருகின்றன. தாய்மொழியின்மூலம் கல்வி கற்பிக்கப்படவேண்டும் எனச் சிலர் கருதுகின்றனர். ஆங்கிலத்தின்வாயிலாகக் கற்பிக்கப்படவேண்டும் எனச் சிலர்



விவாதிக்கின்றனர். இந்த இரு கருத்திலும் உள்ள நன்மை, தீமைகளை ஆராய்ந்து இந்த விவாதத்திற்கு முடிவான ஒரு தீர்வு காணவேண்டும்.

கவி இரவீந்திரநாத தாகூரின் ஈர்ப்பான இலக்கிய நடையின் உயர்வுக்குக் காரணம், ஆங்கிலத்தில் அவருக்கு உள்ள அறிவு மட்டுமன்று, தம்முடைய தாய்மொழியில் அவருக்கு இருந்த பற்றுதலும்தான்.

முன்சிராம் பேசும்போது குழந்தைகள், ஆண்கள், பெண்கள் அனைவரும் மிகுந்த ஈடுபாட்டுடன் கேட்கிறார்கள். இதற்குக் காரணம் அவர்தம் தாய்மொழி அறிவே. உயர்ந்த மனம்படைத்த மதன்மோகன் மாளவியாவின் ஆங்கிலப்பேச்சு வெள்ளியைப்போல ஒளிவிட்டாலும், அவரது தாய்மொழிப் பேச்சு, தங்கத்தைப் போன்று ஒளி வீசுகின்றது.

தாய்மொழியை வளமுறச் செய்வதற்குத் தேவையானவை, தங்கள் தாய்மொழியில் உள்ள அன்பும் மதிப்பும்தானே தவிர, ஆங்கில அறிவு இல்லை என்பதை மேலே காட்டிய சான்றுகள் ஐயமின்றி விளக்குகின்றன.

ஒரு மொழியைப் பயன்படுத்துகின்றவர்களின் எண்ணங்கள், அம்மொழியில் இடம் பெற்றிருக்க வேண்டும். மொழியின் தன்மை, மக்களின் தன்மையைச் சார்ந்திருப்பது இயற்கையே. மக்கள் அறிவுள்ளவர்களாக இருந்தால், அவர்தம் மொழியும் அவ்வாறே அமையும். வேலை தெரியாத தொழிலாளி தன் கருவியின்மீது சீற்றம் கொண்டானாம் என ஓர் ஆங்கிலப் பழமொழி உண்டு. மொழி நிறைவு பெற்றதாக இல்லை எனக் குறை சொல்பவர்கள் இந்தத் தொழிலாளியைப் போன்றவர்களே. குறைபாடு, மொழியைப் பயன்படுத்துபவர்களிடம்தான் இருக்கிறதே அன்றி, மொழியில் இல்லை.

ஜெகதீஷ் சந்திரபோஸ், பி.சி. இராய் முதலியோரின் சாதனைகளைக் கண்டு, நாம் மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால், தாய்மொழிமூலம் நமக்குக் கல்வி அளிக்கப் பட்டிருந்தால் நம்மிடையே பல போஸ்களும் இராய்களும் தோன்றியிருப்பார்கள்.

பள்ளிக்கூடம் வீட்டைப் போன்று இருக்கவேண்டும். குழந்தைக்கு வீட்டில் தோன்றும் எண்ணங்களுக்கும் பள்ளியில் ஏற்படும் எண்ணங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டும். சிறந்த பயன் ஏற்பட வேண்டுமாயின், அத்தகைய தொடர்பு இன்றியமையாதது. தெரிந்தறியாத ஒருமொழியின்மூலம் கல்வி கற்பிப்பது, இந்த இணக்கத்தைக் குலைத்துவிடும்.

தாய்மொழியைக் கற்பித்தல்மொழியாக வைத்துக்கொண்டால், ஆங்கிலத்தில் அறிவைப் பெறுவது பாதிக்கப்படுமா, இல்லையா என்பதைப்பற்றிச் சிந்தனை செய்ய வேண்டிய தேவையில்லை என்றே நினைக்கிறேன். படித்த இந்தியர் அனைவரும் அயல் மொழியில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்பதில்லை. இந்த அயல் மொழியிடம்

ஒரு பற்றுதலைத் தோற்றுவிப்பதோ ஊக்கம் அளிப்பதோ தேவையில்லை எனவும் நான் கருதுகிறேன்.

நீங்கள் உங்கள் தாய்மொழியில் அறிவுபெற வாழ்த்தும் ஆசியும்.

மோ. க. காந்தி

மோகன் தாஸ் காந்தி

( 1917ஆம் ஆண்டு புரோச் நகரில் நடைபெற்ற இரண்டாவது கல்வி மாநாட்டில் காந்தியடிகள் நிகழ்த்திய தலைமை உரை, மாணவர்களுக்கு ஏற்றவண்ணம் கடித வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.)

## மாதிரி வினாக்கள்

### அ) புறவய வினாக்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. காந்தியடிகள் __________ மாநிலத்தில் ஆற்றிய உரையைக் குழந்தைகளுக்குக் கூறினார்.
2. ஒருமொழியின் தன்மை __________ தன்மையைப் பொருத்தே அமையும்.
3. வேலை தெரியாத தொழிலாளி, தன் கருவியின்மீது __________ கொண்டானாம்.

### ஆ) குறுவினாக்கள்

1. கவி இரவீந்திரநாத தாகூரின் ஈர்ப்பான இலக்கிய நடைக்குக் காரணம் என்ன ?
2. மதன்மோகன் மாளவியாவின் பேச்சுக்குக் காந்தியடிகள் கூறும் உவமைகள் யாவை ?
3. யார் யாரைச் சாதனையாளர்களாகக் காந்தியடிகள் கண்டு மகிழ்ச்சியடைகின்றார் ?

### இ) சிறுவினாக்கள்

1. பயிற்றுமொழி குறித்துக் காந்தியடிகள் உரைப்பன யாவை ?
2. மொழியைக் குறை கூறுபவர்பற்றிக் காந்தியடிகள் உரைப்பன யாவை ?
3. பள்ளி எவ்வாறு அமைய வேண்டுமென்று காந்தியடிகள் உரைக்கின்றார் ?
4. அயல்மொழி குறித்துக் காந்தியடிகள் கூறும் கருத்துகள் யாவை ?

### ஈ) நெடுவினா

தாய்மொழிவழிக் கல்வியின் தேவைகுறித்துக் காந்தியடிகள் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

# உரியது

முற்றும் துறந்த முனிவர் ஒருவர் கோவில்களுக்குப் பயணம் மேற்கொண்டார். பற்றற்ற துறவியாகிய அவர், இன்றிருக்கும் ஊரில் நாளை இருக்கமாட்டார்; ஒருவேளையே உப்பில்லாத உணவை உண்பார்.

அவர் பொய்யை அதிகமாக வெறுப்பவர். அவருடைய வாய் மறந்தும் பொய் சொல்லாது. அன்றியும், பொய் சொல்வார் மனையில் உணவு உண்ணவும்மாட்டார். இதனை மிகவும் சிறந்த குறிக்கோளாகவே கொண்டு ஒழுகினார்.

ஒருநாள், ஓர் ஊருக்குச் சென்றார்.

"இந்த ஊரில் உண்மை பேசுபவர் யாவர்?"

'அதோ தெரிகின்ற மாடிவீட்டில் வாழ்கின்ற பெரியவர் உண்மை பேசுபவர்; அடியார் பக்தியுடையவர்; ஓர் இலட்சம் செல்வமும் நான்கு புதல்வரும் உடையவர்' என்று பலரும் கூறினார்கள்.

பின்னர்ப் பெரியவருடைய வீட்டை அம் முனிவர் அடைந்தார்.

இருக்கையில் உட்கார்ந்திருந்த பெரியவர், உடனே எழுந்து, ஓடிவந்து ஞானியின் கால்களில் விழுந்து வணங்கினார். அவரை இருக்கையில் உட்காரச் செய்து, "பெருமானே! உணவு உண்ண வரவேண்டும்" என்று வேண்டினார்.

அவருடைய அன்பு, அடக்கம், பணிவு முதலிய நற்குணங்களைக் கண்டு முனிவர் முகம் மலர்ந்து, உண்மையாளர்தானா என்று சோதித்தறிந்த பின்னரே உணவு உண்ணவேண்டும் என்று எண்ணினார்.

"ஐயா! உமக்குச் செல்வம் எவ்வளவு உண்டு?"

"சாமி! இருபத்து இரண்டாயிரம் ரூபாய் உண்டு."

"குழந்தைகள் எத்தனை பேர்?"

"சாமி, ஒரே மகன்"

"உமக்கு என்ன வயது?"

"சாமி! எனக்கு வயது மூன்று ஆண்டு ஐந்துமாதம் ஏழுநாள் பதினாறரை மணி."

முனிவருக்குப் பெருஞ்சினம் மூண்டது.

"ஐயா! நீர் சுத்தப் புளுகராக இருக்கின்றீர். நீர் பேசுவதெல்லாம் பெரும்புரட்டு. உம் வீட்டு அன்னம் என் தவத்தை அழிக்கும். நான் பொய்யர் வீட்டில் உண்ணேன்" என்று கூறி வெகுண்டெழுந்தார்.

பெரியவர், அவர் காலில் விழுந்து, "அருள் நிறைந்த அண்ணலே! அடியேன் ஒருபோதும் பொய் சொல்லமாட்டேன்; உண்மையே சொல்வேன்; சற்று சிந்தனை செய்து, ஆய்ந்து பார்த்து உண்மை உணர்வீராக" என்று கூறித், தமது வரவு–செலவுப் புத்தகத்தை நீட்டினார்.

அதில் இருப்புத்தொகை ஓர் இலட்சரூபாய் என்றிருந்தது.

"அடேய்! இதோ, உனக்குச் சொத்து ஓர் இலட்சமென்று இருக்கிறதே, நீ, இருபத்து இரண்டாயிரம் என்று பொய் சொன்னாயே!" என்று கடிந்தார் முனிவர்.

"சாமி! ஓர் இலட்ச ரூபாய் பெட்டியில் உள்ளது. ஆனால், பெட்டியில் உள்ள பணம் எனக்குச் சொந்தமாகுமா? இதோ பாருங்கள். தருமக் கணக்கில் இதுகாறும் இருபத்து இரண்டாயிரமே செலவழிந்துள்ளது. தருமம் புரிந்த பணந்தானே என்னுடையது. இப்போது நான் மாண்டால், இந்தப் பெட்டியில் உள்ள பணம் என்னுடன் வாராதே! உடன் வருவது தருமம் ஒன்றுதானே! ஆகவே, எனக்கு உரியது, தருமம் புரிந்த இருபத்திரண்டு ஆயிரந்தான்" என்று கூறினார் பெரியவர்.

முனிவர் இதைக்கேட்டு வியப்புற்றார்.

"சாமி! எனக்குப் பிறந்த பிள்ளைகள் நால்வர்; ஆனால், என் பிள்ளை ஒருவன்தான்."

"அப்பா! நீ சொல்வதன் கருத்து எனக்கு விளங்கவில்லையே!"

"சாமி! விளங்க வைக்கிறேன்."

"மகனே! நடராஜா" என்றழைத்தார் பெரியவர்.

"சீட்டு விளையாடுகிறேன்; வரமுடியாது" என்று பதில் வந்தது.

"மகனே! வேல்சாமி!"

"ஏன் இப்படிக் கதறுகின்றாய்? வாயை மூடிக்கொண்டிரு."

"மகனே சிவசாமி!"

"உனக்கு அறிவிருக்கிறதா! உன்னோடு பேச என்னாலாகாது. பூமிக்குச் சுமையாக இன்னும் ஏன் இருக்கின்றாய்?"

"மகனே! கந்தசாமி"

கந்தசாமி ஓடிவந்து தந்தையையும் முனிவரையும் தொழுது, "சாமி! பால்கொண்டு வரட்டுமா? பழம்கொண்டு வரட்டுமா?" என்று கேட்டு விருந்தளித்து, விசிறி எடுத்து வீசிக்கொண்டு பணிவுடன் நின்றான்.

பெரியவர், "சாமி! அந்த மூவரும் என் மகன்களா? என் கருத்துக்கு முரணானவர்கள் பிள்ளைகளா? முற்பிறப்புக் கடன்காரர்கள். இவன் ஒருவன்தான் என் பிள்ளை" என்றார்.

"அப்பா! உன் கருத்து உவகையைத் தருகின்றது. வயது குறித்து நீ கூறியதன் உட்பொருள் யாது?"

"சாமி! அடியேன் நாள் ஒன்றுக்கு ஒன்றரை மணிநேரந்தான் வழிபாடு செய்கின்றேன். மிகுதி நேரமெல்லாம் வயிற்றுக்காகவும் குடும்பத்துக்காகவும் உழைக்கின்றேன். பேசாத நாள் எல்லாம் பிறவா நாள்தானே? இறைவனைப் பூசிக்கும் நேரந்தான் எனக்கு உரியது. அடியேனுக்கு இந்த உடம்பு பிறந்து அறுபது ஆண்டுகள் ஆயின. ஐந்து வயதிலிருந்து பூசிக்கின்றேன். நாள் ஒன்றுக்கு ஒன்றரை மணிநேரம்தான் பூசை செய்கின்றேன். அந்த வகையாகப் பார்த்தால், முப்பதாயிரத்து நூற்றுப் பன்னிரண்டரை மணிநேரம் ஆகின்றது. ஆகவே, அடியேன் பிறந்து அறுபது ஆண்டுகளானாலும் எனக்கு உரிய வயது திட்டமாக மூன்று ஆண்டு ஐந்துமாதம் ஏழுநாள் பதினாறரை மணிதான்.

- தருமம் செய்த பணம் எனக்கு உரியது.
- என் கருத்தை ஏற்று நடக்கின்றவனே எனக்கு உரிய மகன்.
- இறைத்தொண்டு செய்த நேரமே எனக்கு உரியது.

இதனைக் கேட்ட முனிவர் பெரிதும் மகிழ்ந்தார். அவர் வீட்டில் உணவு உண்டு வாழ்த்திச் சென்றார்.

நன்றி: திருமுருக கிருபானந்தவாரியார், சிந்தனைச் செல்வம்

## மாதிரி வினா

### கட்டுரை வினா

முனிவரிடம், பெரியவர் தனக்கு உரியவை எவையெவை எனக் கூறினார்?

"தொன்மைமிக்க உலக மொழிகள் அனைத்திலும் தமிழே தொன்மை, முன்மை, எளிமை, ஒளிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை என்னும் பல்வகைச் சிறப்புகள் அனைத்தையும் ஒருங்கே பெற்றிருக்கிறது."

– தேவநேயப் பாவாணர்

# இடுகுறிப்பெயரும் காரணப்பெயரும்

மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : வணக்கம், உட்காருங்கள். முன் வகுப்பில் நடத்திய பாடங்கள் நினைவிருக்கிறதா?

மாணவர் : நன்றாக நினைவிருக்கிறதம்மா. நால்வகைச் சொற்களைப்பற்றிக் கற்றுக் கொண்டோம்.

ஆசிரியர் : மெத்த மகிழ்ச்சி. (ஆசிரியர் நாற்காலியில் உட்காரச் செல்லுதல்)

ஆசிரியர் : பொற்கொடி, இந்த நாற்காலி எதனால் செய்யப்பட்டுள்ளது?

பொற்கொடி : மரத்தினால் அம்மா...

ஆசிரியர் : சரி. தமிழரசி, மரத்திற்கு 'மரம்' என எப்படிப் பெயர் வந்தது ?

தமிழரசி : தெரியவில்லை, அம்மா. எப்படிப் பெயர் வந்ததென்று கூறுங்கள்,அம்மா.

ஆசிரியர் : 'மரம்' எனப் பெயர் வைத்ததற்கு எந்தக் காரணமும் இல்லை. நம் முன்னோர்கள் எந்தக் காரணமும் கருதாமல் ஒரு பொருளுக்குக் குறியீடாக இட்ட பெயரே இடுகுறிப்பெயர். காரணமறியவியலாப் பெயர்களெல்லாம் இடுகுறிப்பெயர்களே.

மணவழகன் : எல்லாப் பெயர்களுமே இடுகுறிப்பெயர்களா, அம்மா?

ஆசிரியர் : இல்லை இல்லை. மண், நாய், கோழி என்பன இடுகுறிப்பெயர்களே. இதோ, இந்த 'நாற்காலி'க்கு எப்படிப் பெயர் வந்தது தெரியுமா?

நிறைமதி : நான்கு கால்கள் இருப்பதால் 'நாற்காலி' என வந்திருக்கலாம்.

ஆசிரியர் : நன்றாகச் சொன்னாய். இப்படிக் காரணம் கருதி இடப்பட்ட பெயர்கள் காரணப்பெயர்கள் எனப்படும்.

தமிழரசி : காரணம் கருதி வந்த சில பெயர்களைக் கூறுங்கள், அம்மா.

ஆசிரியர் : தமிழில் காரணப்பெயர்களே மிகுதியாக உள்ளன. பிறமொழிகளில் இடுகுறிப்பெயர்களே மிகுதியாக உள்ளன. பறவை (பறப்பதால்), வளையல், செங்கல், முக்காலி, கரும்பலகை எனப் பலவற்றைக் கூறலாம்.

முத்து : மலை, காடு, மாடு இவையெல்லாம் இடுகுறிப் பெயர்கள்தாமே.

ஆசிரியர் : ஆம். மலை என்பது அனைத்து மலைகளுக்கும் பொதுப் பெயர்.

காடு என்பது அனைத்துவகைக் காடுகளுக்கும் பொதுப் பெயர். மாடு என்பது பல்வகை மாடுகளுக்கும் பொதுப் பெயர். இவ்வாறு அனைத்துக்கும் பொதுவாக வரும் இடுகுறிப்பெயர்களை இடுகுறிப் பொதுப்பெயர் எனக் கூறுவர்.

கனிமொழி : அம்மா, இடுகுறிப் பொதுப்பெயர் உண்டென்றால், இடுகுறிச் சிறப்புப் பெயருண்டா ?

ஆசிரியர் : உண்டு. மரம் என்னும் சொல் மா, பலா, வாழை, தென்னை முதலான மரவகை அனைத்திற்கும் இடுகுறிப்பெயராய்ப் பொதுவாக வரும். 'தென்னை' என்னும் சொல் ஒரு காரணமும் இன்றி, இடுகுறிப்பெயராய் நின்று, ஒரு பொருளுக்கே (தென்னை மரம்) சிறப்பாய் வருவதால் இடுகுறிச் சிறப்புப் பெயராயிற்று.

முகிலன் : அம்மா...! காரணப் பெயரிலும் பொதுப்பெயர், சிறப்புப்பெயர் உண்டா ?

ஆசிரியர் : உண்டு. பறவை என்னும் சொல்லை எடுத்துக்கொள்வோம். பறப்பதால் பறவை எனக் காரணம் கருதி வழங்கும் பெயராயிற்று. காகம், குயில்,புறா, கிளி ஆகிய அனைத்தையும் 'பறவை' என்னும் பொதுச்சொல்லால் அழைக்கிறோம். அதனால், இதனைக் காரணப் பொதுப்பெயர் என்கிறோம். கோகிலா...! அங்கே என்ன முணுமுணுப்பு ? உற்றுக்கேள்.

கோகிலம் : அம்மா, என் வளையல் உடைந்துவிட்டது.

ஆசிரியர் : கோகிலா, வளையல் என எப்படிப் பெயர் வந்தது ?

கோகிலம் : வளைந்து, வட்டமாக இருப்பதால்....

ஆசிரியர் : நன்றாகச் சொன்னாய். வளையல்போலவே சிலபொருள் வளைந்து வட்டமாக இருக்கும். இருப்பினும் அவையெல்லாம் வளையல் என அழைக்கப்படுவது இல்லை. இருப்பினும் இச்சொல், கையில் அணியும் வளையலை மட்டுமே குறிப்பதால், காரணச் சிறப்புப் பெயர் ஆயிற்று.

கோகிலம் : நன்றி, அம்மா!

## பயிற்சி

கீழுள்ள சொற்களுள் வினைச்சொற்களை வட்டமிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1. காற்று | 2. பறவை | 3. முக்காலி | 4. அரிவாள் |
| 5. மரம் | 6. வளையல் | 7. கடல் | 8. மழை |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்வு செய்து எழுதுக.

அ) பெட்டி என்பது ______________ ஆகும்.

1. இடுகுறிப்பெயர் 2. காரணப்பெயர் 3. சுட்டுப்பெயர்

ஆ) சித்திரை மாதத்தில் பிறந்ததால் ______________ என அழைக்கப்பட்டான்.

1. சித்திரையான் 2. கார்த்திகேயன் 3. அமாவாசை

இ) காரணப் பொதுப்பெயர் ______________ ஆகும்.

1. விலங்கு 2. மண் 3. நண்டு

2. பொருத்துக.

இடுகுறிப் பொதுப்பெயர் – மரங்கொத்தி

இடுகுறிச் சிறப்புப்பெயர் – பறவை

காரணப்பொதுப்பெயர் – காடு

காரணச் சிறப்புப்பெயர் – பனை

### ஆ) குறுவினாக்கள்

1. காரணப்பெயர் என்றால் என்ன? சான்று தருக.
2. இடுகுறிப்பெயர் என்றால் என்ன? சான்று தருக.
3. இடுகுறிப்பெயரின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.
4. காரணப்பெயரின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

தாய்மொழிவழிக் கல்வி கற்பதன் தேவை – இத்தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) எழுதுதல் திறன் : உரைப்பகுதியைப் படித்து மையக் கருத்தறிதல்

(எ–டு)

நாம் வாழும் உலகம் நிலம், நீர், காற்று, தீ, வானம் ஆகிய ஐம்பெரும்பூதங்களின் கூட்டுச் சேர்க்கையால் ஆனது. அவற்றின் இயக்கங்களால் உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

அவற்றுள்ளும் நீரின்றி உலகில் எந்த உயிரும் இயங்க இயலாது; அதனால்தான், திருவள்ளுவர் “நீரின்றமையாது உலகு” என்று கூறிப்போந்தார்.

அந்நீரைத் தருகின்ற மழையின் சிறப்பை, இன்றியமையாமையை உணர்ந்து, திருக்குறளில் வான்சிறப்பு என்னும் ஓர் அதிகாரம் படைத்துப் புகழ்ந்து உரைக்கின்றார்.

சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள் மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் என மழையைப் போற்றி வணங்கித் தம் காப்பியத்தைத் தொடங்கினார். மழையின்றேல் மாநிலத்தார்க்கு வளம் இல்லை.

மாரியல்லது காரியம் இல்லை என்பன போன்ற முதுமொழிகளும் மழையின் சிறப்புகளை நமக்கு உணர்த்துகின்றன.

### வினாக்கள்

1. பத்தியின் மையக் கருத்து யாது?
2. ஐம்பூதங்கள் யாவை?
3. மழை குறித்து வள்ளுவரும் இளங்கோவடிகளும் யாது கூறுகின்றனர்?
4. மழை தொடர்பான சொற்றொடர்கள் யாவை?
5. பத்தியில் இடம்பெற்றுள்ள அருஞ்சொற்களை எடுத்தெழுதுக.

## மொழித்திறன் பயிற்சி

### அ) வழக்குச் சொற்களும் திருத்தமான சொற்களும்

ஆசிரியர் : மணி, நேற்று ஏன் பள்ளிக்கு வரவில்லை?

மணி : நேற்று வவுத்து வலி, ஐயா.

ஆசிரியர் : தமிழரசி, அவன் சொன்னது சரியா?

தமிழரசி : தவறு, நேற்று வயிற்று வலி, ஐயா.

ஆசிரியர் : சிறப்பாகச் சொன்னாய். இப்படித்தான் நாம் சொற்களைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் பழகவேண்டும்.

பயிற்சி : வழக்குச் சொற்களை நீக்கித் திருத்தமான சொற்களை எழுதுக.

1. பள்ளிக்கு அருகாமையில் என் வீடு இருக்கிறது.
2. என் வீட்லே யாருமே இல்லே.
3. எம் ஊர் ஆத்துல தண்ணியே இல்லே.
4. என் அப்பா அதிகமா சிலவு செய்கிறார்.

### ஆ) சொற்றொடர்ப் பொருத்தம்

சொற்கள் சேர்ந்தமைவது சொற்றொடராகும். ஒரு சொற்றொடரிலுள்ள எழுவாய், அதன் பயனிலையோடு திணை, பால், எண், இடங்களில் பொருத்தமாக அமையவேண்டும். இவையே வழுவற்ற சொற்றொடர்களாம்.

(எ–டு) திணைப்பொருத்தம் : கோலமயில் ஒயிலாக ஆடியது.
( கோலமயில் – அஃறிணை எழுவாய்; ஆடியது – அஃறிணைப் பயனிலை )

பால் பொருத்தம் : வண்டுகள் தேன் குடித்தன.
( வண்டுகள் – பலவின்பால் எழுவாய்; குடித்தன – பலவின்பால் பயனிலை )

எண் பொருத்தம் : விண்கலங்கள் விண்ணில் பறந்தன.
( விண்கலங்கள் – எழுவாய்ப் பன்மை; பறந்தன – பன்மைப் பயனிலை )

இடப்பொருத்தம் : அவன் பாடம் படித்தான்.
( அவன் – படர்க்கை எழுவாய்; படித்தான் – படர்க்கைப் பயனிலை )

சிறப்புப் பொருத்தம் : பாவேந்தர், பாரதியைப் புகழ்ந்து பாடினார். பாவேந்தர் என்னும் பெயர் பாரதிதாசனையே குறிக்கும் என்பதனால், அது சிறப்புப் பெயராயிற்று. சிறப்புப் பொருத்தம் உயர்வுமட்டுமல்லாது இழிவுகருதியும் வரும்.

(எ–டு) முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா.

பயிற்சி

கீழ்க்காணும் முற்றுச்சொற்றொடரில் அமைந்துள்ள வழுக்களைத் திருத்தி எழுதுக.

1. அரசர் பலர் வந்தார்கள்.
2. மயில்கள் ஆடியது.
3. கனிமொழி பாடம் படித்தாய்.
4. ஔவையார் அதியமானிடம் சென்றாள்.
5. வயலில் மாடுகள் மேய்ந்தது.

இ) உரிய தமிழ் எண்களைத் தேர்வு செய்க.

1. மூன்று என்பதன் தமிழெண்

   அ) ௩ ஆ) ௮ இ) ௧

2. ஏழு என்பதன் தமிழெண்

   அ) ௮ ஆ) ௭ இ) ௨

3. ஆறு என்பதன் தமிழெண்

   அ) ௬ ஆ) ௯ இ) ௪

ஈ) கட்டுரை எழுதுதல்: நான் ஆசிரியரானால்...

## வாழ்க்கைத்திறன்

### கூர்சிந்தனைத்திறன்

நாம் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளை நடுநிலையோடு ஆராய்ந்து பார்த்தலே கூர்சிந்தனைத் திறனாகும்.

வளவன் தேர்வுக்காகப் படித்துக்கொண்டு இருக்கிறான். தேர்வில் அனைத்துப் பாடங்களிலும் முதல் மதிப்பெண் பெறுவதாகப் பெற்றோரிடம் உறுதி அளித்துள்ளான். இந்நிலையில் அவனுடைய நண்பர்கள் விளையாட வருமாறு அழைக்கின்றனர்.

1. வளவன், நண்பர்களோடு செல்வானா? படிப்பில் அக்கறை செலுத்துவானா?
2. உங்கள் கருத்தென்ன ? உங்களை வளவனாக நினைத்துக்கொண்டு கூறுங்கள்.

## மதிப்புக்கல்வி

### தன்னடக்கம்

பட்டினத்தடிகள் அரசருக்கு ஈடாகப் பெருஞ்செல்வம் படைத்தவராய் விளங்கினார். ஒரு நாள் எல்லாவற்றையும் துறந்துவிட்டுத் துறவியாகிவிட்டார். அவரைக் காண அரசன் சுற்றம் சூழ ஆரவாரத்துடன் வந்தான். அங்கு அரையாடை மட்டும் அணிந்த நிலையில் துறவுக்கோலத்தில் உட்கார்ந்திருந்தார் பட்டினத்தடிகள். அவரை வணங்கிய அரசன், "எமக்கு இணையாகச் செல்வம் படைத்திருந்த நீங்கள் இன்று கண்ட பயன் என்ன?" என்று கேட்டார்.

அதற்குப் பட்டினத்தடிகள். "நீர் நிற்க, நான் இருக்க, இந்தச் சிறப்பு ஒன்று போதாதா?" என்று பதில் அளித்தார். செல்வம் இருக்கும்போதும், இழந்தபோதும் நாம் தன்னடக்கத்துடன் இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

# திருவாரூர் நான்மணிமாலை

## (இறைவன் மண் சுமந்ததற்கு இரங்கல்)

என்பணிந்த தென்கமலை ஈசனார் பூங்கோயில்
முன்பணிந்த தெய்வ முனிவோர்கள் – அன்புஎன்னாம்
புண்சுமந்தோம் நந்தி புடைத்தென்னார் புண்ணியனார்
மண்சுமந்தார் என்றுருகு வார்.

– குமரகுருபரர்

**பொருள் :** எலும்பை மாலையாக அணிந்தவரும் திருவாரூரில் எழுந்தருளி உள்ளவருமான சிவபெருமானைத் தெய்வத்தன்மையுள்ள முனிவர்கள் வணங்கியபோது, நந்தியால் அடிபட்டதற்கு அவர்கள் வருந்தவில்லை. வந்தி என்னும் பெயருடைய கிழவிக்காக மண் சுமந்து பாண்டியனிடம் இறைவன் அடிபட்டார் என்பதை நினைத்து அவர்கள் மனம் உருகினார்கள். அவர்களின் அன்பு மிக உயர்ந்தது.

**சொற்பொருள் :** என்பணிந்த (என்பு + அணிந்த) – எலும்பை மாலையாக அணிந்த; தென்கமலை – தெற்கில் உள்ள திருவாரூர்; பூங்கோயில் – திருவாரூர்க்கோயிலின் பெயர்; புண்ணியனார் – இறைவர்; மண் சுமந்தார் – வந்திக்காக இறைவன் மண் சுமந்தார்; உருகுவார் – வருந்துவார்.

### ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | குமரகுருபரர் |
| பெற்றோர் | : | சண்முகசிகாமணிக் கவிராயர்– சிவகாமசுந்தரி அம்மையார் |
| ஊர் | : | திருவைகுண்டம் |
| இயற்றிய நூல்கள் | : | நீதிநெறி விளக்கம், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், கந்தர்கலி வெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம். |
| காலம் | : | கி.பி. பதினாறாம் நூற்றாண்டு. |

**நூல் குறிப்பு :** திருவாரூர் + நான்கு + மணிமாலை = திருவாரூர் நான்மணிமாலை. இது, திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகராசர்மீது பாடப்பெற்ற நான்மணிமாலை எனப் பொருள்படும். நான்மணிமாலை என்பது தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறு சிற்றிலக்கியங்களுள் ஒன்று. முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் என்னும் நால்வகையான மணிகளால் ஆன மாலையைப் போன்று நால்வகையான பாடல்களால் (வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா) ஆன நாற்பது செய்யுள்களைக் கொண்டது.

**நூல் பயன் :** இந்நூலைக் கற்பதனால் திருவாரூர் தியாகராசப் பெருமானைப் பற்றிய பெருமைகளை அறிந்து இன்புறலாம்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) என்பணிந்த தென்கமலை – இவ்வடியில் தென்கமலை உணர்த்தும் பொருள் __________ .

ஆ) குமரகுருபரர் பிறந்த ஊர் __________ .

2. உரிய விடையைத் தேர்வு செய்க.

அ) நான்மணிமாலை என்பது __________ .

1. பதினெண்கீழ்க்கணக்கு 2. காப்பியம் 3. சிற்றிலக்கியம்

ஆ) மண்சுமந்தார் எனக் குறிப்பிடப்படுபவர் __________ .

1. திருமால் 2. சிவபெருமான் 3. நான்முகன்

3. பிரித்து எழுதுக.

அ) பூங்கோயில் ஆ) புடைத்தென்னார் இ) என்றுருகுவார்

4. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

பணிவு, கோவில், அன்பு, மண்

### ஆ) குறுவினாக்கள்

1. திருவாரூர் நான்மணிமாலை – பெயர்க்காரணம் கூறுக.
2. குமரகுருபரர் – குறிப்பு எழுதுக.
3. என்பணிந்த தென்கமலை ஈசனார் யார் ?
4. இறைவன் யாருக்காக மண் சுமந்தார் ?

### இ) சிறுவினாக்கள்

1. இறைவன் மண் சுமந்த வரலாற்றை எழுதுக.
2. இறைவன் மண் சுமந்ததற்குக் குமரகுருபரர் எவ்வாறு வருந்தினார் ?

## மெய்ப்பொருள் கல்வி

தலைசீவிப் பள்ளிக்கே ஓடு – நல்
தங்கப் பதுமையாம் தோழர்க ளோடு !
விலையில்லா மெய்ப்பொருள் கல்வி ! – அதை
விரும்பிப் படித்தால் அறிவுண்டாம் செல்வி !

அழுக்கில்லா ஆடையே மேன்மை ! அதை
அணிவதா லல்லவோ உடற்குண்டாம் தூய்மை
ஒழுங்கோடு நூல்களைத் தூக்கி – நில்லாது
ஓடி ஓடி பள்ளியை நோக்கி !

சின்னஞ் சிறுகுயில் போல – இசை
சிந்திச் சிரித்துச் செவ்விதழ் காட்டு
பொன்னொத்த தோழர்களோடு – பள்ளி
போகும் வழியிலும் ஒற்றுமை காட்டு!

* கற்பிப்போர் கண்கொடுப் போரே! – அந்தக்
கணக்காயர் உரையினில் இருசெவி சேரே!
நற்பெயர் எடுத்திட வேண்டும்! – நாளும்
நன்றாகப் படித்துநீ முன்னேற வேண்டும்! *

– வாணிதாசன்

**பொருள் :** மகளே! குளித்துத் தலைசீவி, நல்ல துணிகளை அணிந்து, பாட நூல்களை ஏந்தி, அழகுமிகு தோழிகளோடு பள்ளிக்கு விரைந்து செல்வாயாக! பள்ளி செல்லும்பொழுது உன் நண்பர்களோடு ஒற்றுமையாகச் சிரித்துப் பழகி மகிழ்வாயாக! உன் வாழ்க்கைக்குக் கல்வி தரும் ஆசிரியர்தம் சொற்கேட்டு நடப்பாயாக! உற்றதுணையாக உறுதுணையாக விளங்குவதே கல்வி. அதுவே என்றும் உன்னோடு நிலைத்திருக்கும். அத்தகு கல்வியைக் கற்று வாழ்வில் முன்னேறிப் புகழ்பெறுவாயாக!

**சொற்பொருள் :** பதுமை – உருவம்; மெய்ப்பொருள் - நிலையான பொருள்; கணக்காயர் – ஆசிரியர்.



**ஆசிரியர் குறிப்பு**

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | எத்திராசலு ( எ ) அரங்கசாமி |
| பெயர் | : | வாணிதாசன் |
| பிறந்த இடம் | : | புதுவையை அடுத்த வில்லியனூர் |
| பெற்றோர் | : | அரங்க திருக்காமு– துளசியம்மாள் |
| சிறப்பு: | : | கவிஞரேறு, பாவலர்மணி என்னும் பட்டங்கள் பெற்றுள்ளார். தமிழகத்தின் வேர்ட்ஸ் வொர்த் என இவரைத் தமிழுலகம் புகழ்கிறது. உருசியம், ஆங்கிலம் முதலிய மொழிகளில் இவர் பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. |
| காலம் | : | 22.07.1915 – 07.08.1974 |

**நூல் குறிப்பு :** கவிஞர் வாணிதாசன் தமிழ் உலகிற்குப் புனைந்து அளித்துள்ள குழந்தை இலக்கியம் என்னும் பாடல் தொகுப்பிலிருந்து மெய்ப்பொருள் கல்வி என்னும் தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ள பாடல், பாடப்பகுதியாக அமைக்கப்பட்டுள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்வு செய்க.

அ) தங்கப் பதுமையாம் தோழர்களோடு – இவ்வடியில் பதுமை என்னும் சொல் உணர்த்தும் பொருள்

1. புதுமை  2. பத்து  3. உருவம்

ஆ) தமிழகத்தின் வேர்ட்ஸ் வொர்த் எனப் புகழப்படுபவர்

1. வாணிதாசன்  2. பாரதிதாசன்  3. கம்பதாசன்

2. பிரித்து எழுதுக.

அழுக்கில்லா ________  அறிவுண்டாம் ________

அணிவதாலல்லவோ ________  உடற்குண்டாம் ________

செவ்விதழ் ________

3. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

பள்ளி, பதுமை, தோழர், கல்வி.

### ஆ) குறுவினாக்கள்

1. வாணிதாசன் – குறிப்பு எழுதுக.
2. பள்ளிக்குச் செல்லும் ஒழுங்குபற்றி வாணிதாசன் குறிப்பிடுவன யாவை?
3. கல்வி கற்பிப்போர் எத்தகையவர்?

### இ) சிறுவினாக்கள்

1. பள்ளிக்கு எவ்வாறு செல்லவேண்டுமென வாணிதாசன் குறிப்பிடுகிறார்?
2. மெய்ப்பொருள் கல்வியின் சிறப்புகள் யாவை?
3. பள்ளிக்குச் செல்லும் பெண்ணிடம் வாணிதாசன் வேண்டுவன யாவை?

**நினைவு கூர்க.**

கடந்த ஆண்டு என் பள்ளியில் நடைபெற்ற
இலக்கிய மன்றச் செயல்பாட்டில் என்னைக் கவர்ந்த நிகழ்வு

# தூங்கா நகர்

நள்ளிரவு மணி பன்னிரண்டு. எங்கும் சாலைகள் சந்தடியற்றுக் கிடக்கும்; தெருக்களில் மக்கள் நடமாட்டமே இருக்காது; எல்லாரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பர். இஃது உலக இயற்கை.

ஆனால், இவ்வாறு உலகமே உறங்கிக்கொண்டிருக்கும் வேளையிலும் விழித் திருக்கும் 'தூங்காநகர்' ஒன்று தமிழகத்திலுள்ளது. அந்நகர் எதுவென உங்களுக்குத் தெரியுமா? ஆண்டின் எல்லா நாளிலும் விழாக்கள் கொண்டாடியபடி இருப்பதால், திருவிழா நகர் என்னும் பெருமை பெற்ற நகரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நாற்றிசையிலும் கலையழகு பொருந்திய மாபெருங் கோபுரங்களோடு எட்டுச்சிறிய கோபுரங்களையும் கொண்டு எழில்மிகு சிற்பக்கலைக் கூடமாக விளங்கும் கோவில் மாநகர் எதுவென்று உங்களுக்குத் தெரியுமா? பழம்பெரும் தமிழர்தம் நாகரிகத் தொட்டிலாகத் திகழ்ந்த தென்னிந்தியாவின் ஏதென்ஸ் எனப் புகழப்பெற்ற நகருக்கு நீங்கள் சென்றது உண்டா? சங்கம் வைத்துச் செந்தமிழ் வளர்த்த நகரம், முன்பு பாண்டியர்தம் தலைநகராக விளங்கிய நகரம், இன்றைய தமிழகத்தின் இரண்டாவது பெருநகரமாகத் திகழும் நகரம் எதுவெனத் தெரியுமா? இத்துணைச் சிறப்புக்கும் உரிய நகரம் மதுரை என்னும் மாநகரம்.

### மதுரை – பெயர்க்காரணம்

பாண்டிய நாட்டின் பழைமையான தலைநகரமாக விளங்கிய மதுரை, இன்றைய தமிழகத்தின் முதன்மை நகரங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. மதுரை என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். தமிழும் மதுரையும் இனிமையின் இயல்பால்

> மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
> பூவோடு புரையுஞ் சீரூர் பூவில்
> இதழகத் தனைய தெருவம் இதழகத்து
> அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்
>
> என்னும் பரிபாடல் அடிகள் கூறுவதுபோலவே
> இன்றும் கோவிலும் தெருக்களும் அவ்வாறே காணப்படுகின்றன.

அமைந்தவை. தமிழ் என்றால் மதுரை; மதுரை என்றால் தமிழ். இங்ஙனம், இவை இரண்டும் பிரிக்க இயலாதவை. அதனாலேயே மதுரையைப் போற்றப் புகுந்த புலவர் எல்லாரும் தமிழோடு சேர்த்தே போற்றிப் புகழ்ந்தனர். தமிழ்கெழு கூடல் எனப் புறநானூறு போற்றியது.

நல்லூர் நத்தத்தனார் என்னும் புலவர், தாம் பாடிய சிறுபாணாற்றுப்படையில், "தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை" என்று குறித்தார். இளங்கோவடிகள், தமது நெஞ்சையள்ளும் சிலப்பதி காரத்தில், 'ஓங்குசீர் மதுரை', 'மதுரை மூதூர் மாநகர்', 'தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை', 'மாண்புடை மரபின் மதுரை', 'வானவர் உறையும் மதுரை', 'பதியெழுவறியாப் பண்பு மேம்பட்ட மதுரை மூதூர்' எனப் பற்பல அடைமொழிகளால் மதுரைக்குப் புகழ்மாலை சூட்டி மகிழ்ந்தார். 'சேரநாடு வேழமுடைத்து, சோழநாடு சோறுடைத்து, பாண்டியநாடு முத்துடைத்து, தொண்டைநாடு சான்றோர் உடைத்து' என்பன தமிழகத்தின் சிறப்பை உணர்த்தும்.

### நான்மாடக்கூடல்

மதுரைக்குக் கூடல் எனவும், ஆலவாய் எனவும் வேறு பெயர்கள் வழங்குகின்றன. நான்மாடக்கூடல் என்னும் பெயரே கூடல் என மருவியுள்ளது. திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர் ஆகிய நான்கு திருக்கோவில்கள் சேர்ந்தமைந்ததால், நான்மாடக்கூடல் என்னும் பெயர் வழங்கலாயிற்று என்பர். 'கன்னிகோவில்', 'கரியமால் கோவில்', 'காளிகோவில்', 'ஆலவாய்க் கோவில்' ஆகிய நான்கு திருக்கோவில்களும் மதுரைக்குக் காவலாக அமைந்ததால், நான்மாடக்கூடல் என்னும் பெயரமைந்தது என்பாரும் உளர்.

வருணன், மதுரையை அழிக்க ஏழு மேகங்களை அனுப்பினான். அதைப்பற்றி இறைவனிடம் பாண்டியன் முறையிட, இறைவன் நான்கு மேகங்களை மதுரையைக் காக்க அனுப்பினார். அந்நான்கும் நான்கு மாடங்களாகக் கூடி மதுரையைக் காத்தமையால் நான்மாடக்கூடல் என்னும் பெயர் ஏற்பட்டதாகப் பரஞ்சோதியார் கூறியுள்ளார். எந்நாட்டவரும் எவ்வூரினரும் வந்துகூடும் வளமான நகர் என்பதால், கூடல் என்னும் பெயர் பெற்றது என்பர். சங்கம் வைத்துச் செந்தமிழை வளர்க்க, புலவர் எல்லாரும் கூடியதால், கூடல் என்னும் பெயர் ஏற்பட்டதாகவும் அறிஞர் கூறுவர்.

### ஆலவாய்

மதுரையை விரிவுபடுத்த எண்ணி, இறைவனிடம் அதன் எல்லையை வரையறுத்துத் தருமாறு வேண்டினான் பாண்டியன். இறைவன், தன் கையணியாகிய பாம்பிடம் எல்லையை வரையறுக்க ஆணையிட்டார். பாம்பு வாலை நீட்டி வலமாகத் தன் உடலை வளைத்தது. அவ்வாலைத் தனது வாயில் சேர்த்து மதுரையின் எல்லையை வகுத்துக் காட்டியது. அன்றுமுதல், மதுரைக்கு ஆலவாய் என்னும் பெயர் அமைந்ததாகத் திருவிளையாடற் புராணம் கூறுகிறது. ஆலவாய் என்பது ஆலத்தை (விடத்தை) உடைய பாம்பினைக் குறிக்கும். மதுரையில் எழுந்தருளிய ஈசன், ஆலமர நிழலில் வீற்றிருந்ததால் ஆலவாய் என்னும் பெயர் ஏற்பட்டதாகவும் கூறுவர்.

தென்மதுரையகத்தே சிறந்து நின்ற முதற்சங்கம் கடற்கோளால் அழிந்துபட, கபாடபுரத்தின்கண் இடைச்சங்கம் அமைந்தது. பின்னர், மற்றுமொரு கடற்கோளால் அந்நகரும் விழுங்கப்பட, கடைச்சங்கம் நிறுவப்பட்ட நிலப்பகுதியே இன்றைய மதுரை என்பர்.

மருத மரங்கள் அடர்ந்த பகுதியாக இருந்தமையால் மருதை என வழங்கிய இடம், காலப்போக்கில் மதுரை என்றாகியதாம். கல்வெட்டில் மதிரை என்ற பெயர் காணப்படுகிறது.

சங்ககால மதுரை, பூம்புனல் ஆறாகிய வையை ஆற்றங்கரையில் அமைந்திருந்தது. அம்மதுரையில் யானைமீது போர்வீரன் ஒருவன் உட்கார்ந்து, தன் கையில் மிக உயர்ந்த வெற்றிக்கொடியை ஏந்திச் செல்லும் அளவுக்குக் குன்றைக் குடைந்தாற் போன்ற வாயிலும், பாம்பென நெளிந்து செல்லும் பொறிகளையுடைய பெருமதிலும், அதனைச் சுற்றி ஆழ்ந்து அகன்ற அகழியும் இருந்துள்ளன.

யானைக் கூட்டங்கள் அகழிக்குப் போவதற்கு ஏற்ற சுருங்கை (சுரங்க) வழியும் அமைந்திருந்தது.

மதுரைநகரின் நடுவில் அண்ணல் கோவிலும் அதனைச் சுற்றி முறையாக ஒழுங்குற அமைந்த தெருக்களும் காண்பதற்குத் தாமரைப் பொகுட்டையும் அடுக்கடுக்கான இதழ்களையும் போன்று காட்சியளித்தன. இஃது அன்றைய தமிழர் நகரமைப்புக் கலையின் நுணுக்கத்தை உலகிற்குப் பறைசாற்றும் அடையாளமாகத் திகழ்கின்றது.

சிவன், திருமால், பலராமன், செவ்வேள், ஐயை, கொற்றவை, சிந்தாதேவி எனக் கடவுளர் பலருக்கும் கோவில்கள் இருந்துள்ளன. அரண்மனை, பல்வேறு தெருக்கள், அறங்கூறு அவையம், அம்பலங்கள், மன்றங்கள், அறக்கூழ்ச்சாலைகள், நாளங்காடி, அல்லங்காடி முதலியன மதுரையில் இருந்துள்ளன.

சங்கப்புலவர்களுள் கணக்காயனார் மகனார் நக்கீரனார், குமரனார், நல்லந்துவனார், மருதனிளநாகனார், இளந்திருமாறன், சீத்தலைச் சாத்தனார், பெருங்கொல்லனார், கண்ணகனார், கதங்கண்ணாகனார், சேந்தம்பூதனார் முதலியோர் அன்றைய மதுரையில் வாழ்ந்தோராவர்.


| | | |
|---|---|---|
| மதுரை வீதிகளின் பெயர் | அறுவை வீதி | – ஆடைகள் விற்கும் கடைப்பகுதி |
| | கூலவீதி | – தானியக்கடை |
| | பொன்வீதி | – பொற்கடைகள் |
| | மன்னவர்வீதி | – மன்னர் வாழும் பகுதி |
| | மறையவர்வீதி | – அந்தணர்வீதி |

## மதுரையின் மாண்பு

சிவபெருமான் சுந்தரபாண்டியனாகவும் செவ்வேள் உக்கிரகுமாரப்பாண்டியனாக வும் உமையம்மை மலையத்துவசனுக்கு மகளாகத் தோன்றித் தடாதகைப் பிராட்டியாராகவும் மதுரையை ஆண்டனர். அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராக மாணிக்கவாசகர் திகழ்ந்தார். திருஞானசம்பந்தர் கூன்பாண்டியன் காலத்தில் மதுரையில் மங்கையர்க்கரசி, குலச் சிறையார் உதவியுடன் சைவத்தைக் காத்தார். பாண்டிய நாட்டை ஆண்ட மன்னருள் பலர், சிறந்த புலவர்களாகவும் விளங்கினார்கள்.



திருமலை நாயக்கர்



மீனாட்சியம்மன்
கோவில் வரைப்படம்



பொற்றாமரைக்குளம்

அவர்களுள் ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன், வரகுண பாண்டியன், அதிவீரராம பாண்டியன் முதலியோர் நற்காவலர்களாகவும் சிறந்த பாவலர்களாக வும் திகழ்ந்தார்கள்.

இத்திருக்கோவிலில் மீனாட்சியம்மையும் சொக்க நாதரும் அழகுற வீற்றிருந்து அருளுகின்றனர். கோவிலின் உள்ளே பொற்றாமரைக் குளம் அமைந்து உள்ளது. இக்கோவிலில் உள்ள நூற்றுக்கால் மண்டபம் சிற்ப வேலைப்பாடுகள் மிக்கது.

### திருமலை நாயக்கரின் திருப்பணிகள்

திருமலை நாயக்கர் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார். மீனாட்சிக் கோவிலுக்குத் திருப் பணிகள் பல செய்தார்; கலைநயமிக்க நகரமாக மதுரையைக் கவினுற அமைத்தார்; சிற்பங்கள் மிக்க புது மண்டபத்தைக் கட்டினார்; கோடை விடுதியான தமுக்கமும், குளிர்பூந்தடாகமாகிய பெரிய தெப்பக் குளமும், கலை நயத்தில் ‘தாஜ்மகாலை’ யொத்த **திருமலை நாயக்கர் மகாலை**யும் அமைத்து மதுரையை அழகுபடுத்தினார். அதில், மிகச் சிறந்த ஓவியங்களை அமைத்தார். பெருவிழாக்கள் பலவும் திருக்கோவிலில் நடைபெறுமாறு செய்தார். சித்திரைத் திருவிழாவைச் செந்தமிழ்நாட்டு மக்களேயன்றிப் பன்னாட்டினரும் வந்து பார்த்து மகிழுமாறு சிறப்புற நடைபெறச் செய்தார்; மதுரையை **விழா மல்கு நகரமாக** விளக்கமுறச் செய்தார்; கலைமலிந்த கலைநகரமாக்கிக் கண்டு களித்தார். அவர் கண்ட அணி மதுரைத்திருநகரை நாம் இன்றும் கண்டு இன்புறலாம். இராணி மங்கம்மாள் அமைத்த சத்திரங்களும் சாலைகளும் மதுரைக்குப் பெருமை சேர்ப்பனவாக இன்றும் திகழ்கின்றன.

### நிகழ்வுகள்

பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணம் தருமிக்கு இறைவன் தண்டமிழ்ப் பாடல் தந்தமை பற்றிக் கூறுகிறது. மதுரையைச் சுற்றியுள்ள மலைகளில் வாழ்ந்த சமண முனிவர்களால் நாலடியார் இயற்றப் பெற்றது.

குமரகுருபரருக்கு மீனாட்சியம்மையே சிறுமியாக வந்து முத்துமணி மாலையைப் பரிசளித்தது முதலியன மதுரையில் நடைபெற்ற நிகழ்வுகளாகும்.

### கல்வி வளர்க்கும் மதுரை

வள்ளல் பாண்டித்துரை தேவர், மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவித் தமிழ் வளர்த்தார். மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை மருத்துவக் கல்லூரி இவற்றோடு கலைக் கல்லூரிகள் இன்று கல்விப்பணி ஆற்றிவருகின்றன. ஆயிரங்கால் மண்டபம், அட்டசத்தி மண்டபம், புதுமண்டபம், நகரா மண்டபம் என்பன இந்நகருக்கு அணி சேர்ப்பன. சிலப்பதிகாரக் காப்பியத் தலைவன் கோவலன் கொலைக்களப்பட்ட இடம் கோவலன் பொட்டல் என்னும் பெயருடன் இன்றும் அப்பகுதி மக்களிடம் வழங்கப்படுகிறது.

பழங்கால மதிலின் எஞ்சிய ஒரு சிறுபகுதி மேலவெளி வீதியில் மாநகராட்சித் தென்மண்டல அலுவலகமாக இயங்கி வருகிறது. கீழவாசல், மேலவாசல், தெற்குவாசல், வடக்குவாசல் என வழங்கப்படும் இடங்கள் கோட்டையின் மதில் வாயில்கள் இருந்த இடங்களாக அறியப்படுகின்றன. கையிற் சிலம்புடன் உட்கார்ந்திருக்கும் உருவச்சிலை அமைந்த கோவில், செல்லத்தம்மன் கோவிலாக இன்றும் மக்களால் வழிபடப்படுகிறது.

விழிகளை மூடினாலும் தூங்காநகரின் வியத்தகு தொன்மைக் காட்சிகள் நம்முள் நிழலாடுகின்றன.




மீனாட்சியம்மன் கோவிலின் நான்கு கோபுரங்களுள் பழைமையானது கிழக்குக் கோபுரம்; உயரமானது தெற்குக் கோபுரம். இது 160.9 அடி உயரமும் 1511 சுதை உருவங்களும் உடையது.

கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் எழுந்த சிலப்பதிகாரமே மதுரை மூதூர் எனக் குறிப்பிடுவதால் மதுரையின் பழைமை பெறப்படும்.



மரம் பயன்படுத்தாமல் கட்டப்பட்டது நாயக்கர் மகால். இதன் ஒவ்வொரு தூணும் 82 அடி உயரமும் 19 அடி சுற்றளவும் கொண்டது.



மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள ஆயிரங்கால் மண்டபம்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்வு செய்க.**

அ) தென்னிந்தியாவின் ஏதென்ஸ் என அழைக்கப்படுவது.

1. திருநெல்வேலி 2. தஞ்சை 3. மதுரை

ஆ) மதுரை என்னும் சொல்லுக்கான பொருள்

1. பொறுமை 2. இனிமை 3. பழைமை

இ) பாண்டிய நாடு இதற்குப் பெயர் பெற்றது.

1. முத்து 2. சோறு 3. தந்தம்

ஈ) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழை இயற்றியவர்

1. மீனாட்சி 2. குமரகுருபரர் 3. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்

உ) நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தவர்

1. மருதுபாண்டியர் 2.பாண்டித்துரையார் 3. முத்துராமலிங்கனார்

### ஆ) குறுவினாக்கள்

1. கோவலன் பொட்டல் என வழங்கப்படுவதன் காரணம் என்ன?
2. திருமலை நாயக்கர் செய்த கோவில் பணிகள் யாவை?
3. திருமலை நாயக்கர் மகாலின் சிறப்பை எழுதுக.

### இ) சிறுவினாக்கள்

1. மதுரையின் மாண்புகளை எழுதுக.
2. மதுரையில் நடைபெற்ற புராண நிகழ்வுகளை எழுதுக.

### ஈ) நெடுவினாக்கள்

1. மதுரையின் பெயர்க்காரணத்தை விவரிக்க.
2. மதுரையின் சிறப்புகளைக் கட்டுரையாக எழுதுக.

# அறிவு நுட்பம்

பாலையூரில் காளியப்பன் என்ற முரடன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் பொது அறிவு என்பதே கிடையாது. அவனுக்குத் தெரிந்ததெல்லாம் எல்லாரிடமும் வம்புச் சண்டைக்குச் செல்வது, அடிப்பது, உதைப்பது. இதுதான் அவனது வழக்கமாக இருந்தது.

அவனைத் திருத்த அவ்வூர்ப் பெரியவர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் முடியவில்லை. அதனால், அவ்வூர் மக்கள் அனைவரும் அவனை வெறுத்தனர். அவன் ஊரில் இருக்கும்வரை நம்மால் நிம்மதியாக வாழ முடியாது என்பதை உணர்ந்து கொண்டனர்.

ஊர் மக்கள் காளியப்பனுக்குத் தெரியாமல் ஒன்றுகூடி அவனைப்பற்றி அரசு அலுவலர்களிடம் புகார் செய்வதென முடிவு செய்தனர். காளியப்பனுக்கு எதிராகச் சாட்சி சொல்பவர் யாரும் இல்லாததால், அவனுக்குத் தண்டனையும் வாங்கித்தர முடியாதெனக் கை விரித்துவிட்டனர்.

ஊரில் அறிவாளியாக இருந்த பெரியவர் ஒருவர் காளியப்பன் கொட்டத்தை அடக்க ஒரு வழியைச் சொன்னார். “இந்த முரடனை நம் உடல் வலிமையால் வெல்லமுடியாது; ஒரு சூழ்ச்சியைக் கையாண்டுதான் இவனை ஒழிக்கவேண்டும்; நான் சொல்கிறபடி செய்யுங்கள். இந்தப் போக்கிரியின் பிரச்சினை ஒழிந்துவிடும்” என்றார்.

எப்படியோ காளியப்பனின் தொல்லை தீர்ந்தால் சரியென இருந்த மக்கள் பெரியவரின் எண்ணத்தைச் செயல்படுத்துவதாக வாக்களித்தனர். அதன்படி திட்டம் தீட்டிச் செயல்படுத்தப்பட்டது.

ஒருநாள், காளியப்பன் வெளியூருக்குச் சென்றுவிட்டு ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். அப்போது, அவனுக்கு எதிரே வந்த சிறுவன் ஒருவன், “என்ன அண்ணே, உடம்புக்கு ஒன்னும் முடியலையா, முகமெல்லாம் ஒரு மாதிரியா இருக்கே” என்று வருத்தத்துடன் கேட்டான்.

காளியப்பனுக்குச் சிரிப்பு வந்தது. “என்னடா, என் உடம்பைப்பற்றி உனக்குத் தெரியாதா ? உனக்குக் கண் சரியாகத் தெரியவில்லையென நினைக்கிறேன்” என்று கூறினான். காளியப்பன் சற்றுத்தொலைவு சென்றிருப்பான்; வேறொரு மனிதன் அவனைப் பார்த்து, “என்னப்பா கண்ணுக்குக் கீழே ஒரே கருவளையமாக இருக்கிறது; உடம்பு வேறு இளைத்திருக்கிறது; உனக்கு ஏதோ நோய் வந்திருக்கு என்று நினைக்கிறேன்” என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

காளியப்பன் குழப்பத்தில் ஆழ்ந்தான். “இவர்களுக்கெல்லாம் என்னவாயிற்று ? முதலில் ஒரு சிறுவன் நம் உடம்பைப்பற்றி விசாரித்தான். இவனும் ஏதோ சொல்கிறானே. எனக்கு

எதுவும் நோய் வந்ததுபோல் தெரியவில்லையே'' என்று சிந்தனை செய்தபடி சென்றான். இன்னும் சற்றுத்தொலைவு சென்றதும் எதிரே வந்த முதியவர் ஒருவர், காளியப்பனைத் தடுத்து நிறுத்தி உற்றுப் பார்த்தார். 'ஏம்பா, உன்னைப் பார்த்தால் ஏதோ பெரிய நோய் வந்ததுபோல் தெரிகிறதே; உன் கையைக் கொடு தொட்டுப் பார்க்கிறேன்'' என்று அவன் கையைப் பிடித்தார். திடுக்கிட்ட அவர், "என்ன தம்பி, உன் உடம்பு கொதியாய்க் கொதிக்கிறதே; இப்படிக் கடுமையான காய்ச்சல் அடிக்கும்போது வெளியே சுற்றலாமா? உடனே போய் வைத்தியரைப் பார்; நன்றாக ஓய்வெடுத்துக் கொள்'' என்றார்.

பெரியவர் தம் வழியே சென்றார். காளியப்பன் இப்பொழுது முற்றிலும் குழம்பிப் போனான். தன்னைத்தானே தொட்டுப்பார்த்துக் கொண்டான். அவன் உடல் சுடுவதுபோல் அவனுக்குத் தெரிந்தது. அவனுக்குப் படபடப்பாக இருந்தது. அவன் தட்டுத்தடுமாறிக் கொண்டு வீட்டை அடைந்தான்.

காளியப்பன் வீடு சென்றதும் அவனுக்கு உண்மையிலேயே காய்ச்சல் வந்துவிட்டது; கட்டிலில் அப்படியே சாய்ந்துவிட்டான்.



ஊர்க்காரர்களெல்லாம் அவனைச் சூழ்ந்துகொண்டார்கள். "எப்படி இருந்தவன் இப்படி ஆகிவிட்டானே, இவனுக்கு ஏதோ கொடிய நோய் வந்திருக்கும் போலிருக்கிறதே. மருத்துவம் பார்க்காவிட்டால் இவன் உயிர் பிழைக்கமாட்டான்'' என்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

ஊர்மக்கள் பேசியதைக் கேட்ட காளியப்பனுக்குப் பயம் வந்துவிட்டது. சுற்றியிருந்த மக்களைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டுத் "தயவுசெய்து நல்ல மருத்துவர் ஒருவரை அழைத்து வந்து, என் உயிரைக் காப்பாற்றுங்கள்'' என்று கதறினான்.

ஊர்மக்கள் தங்களுக்குள் சிரித்துக்கொண்டு, அவர்கள் முன்பே சொல்லி வைத்திருந்த மருத்துவரைக் காளியப்பன் வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். மருத்துவரும் காளியப்பனைச் சோதனை செய்து பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கினார். "தம்பி, உனக்கு வந்திருப்பது எவராலும் தீர்க்க முடியாத நோய்; இந்த நோய்க்கு மருந்தே இன்னும் கண்டுபிடிக்கவில்லை; நீ கொஞ்ச நாளில் இறந்துவிடுவாய். அதனால், நீ விரும்புவதையெல்லாம் சாப்பிட்டுவிட்டு இறைவனை வேண்டிக்கொண்டிரு; இதைத்தவிர வேறு வழியில்லை" என்றார்.

காளியப்பனுக்கு வருத்தமாக இருந்தது. அவன் கண்களில் கண்ணீர் தாரைதாரையாகக் கொட்டியது. எந்தவிதக் காரணமும் இல்லாமல் தனக்கு ஏன் இப்படிப்பட்ட நோய் வரவேண்டும் எனச் சிந்தித்தான். ஊர் மக்களைக் கொடுமைப்படுத்தியதன் காரணமாகத்தான், அவர்களின் தீயசொற்களால்தான் தனக்கு இந்த நோய் வந்திருக்க வேண்டுமென நினைத்தான்.

அவன் உள்ளம் கடவுளை வேண்டியது. "ஒருவேளை நான் உயிர் பிழைத்து எழுந்து விட்டால், யாருக்கும் தொல்லை தரமாட்டேன்" என்று முடிவுசெய்து கொண்டான்; என்றாலும், தன் உயிரைக் காக்க மருந்தே இல்லை என்று மருத்துவர் கூறியதைக் கேட்டு அழத் தொடங்கிவிட்டான்.

நான்கு நாளுக்குள் மூச்சுப்பேச்சு இல்லாமல் காளியப்பன் படுக்கையில் கிடந்தான். ஊர்மக்கள் கூடிக்கூடிப் பேசிக் கொண்டிருந்தனர். "எப்படியோ ஒரு படுபாவி ஒழிந்தான். இனிமேல் நம் ஊருக்கு நல்ல காலம்தான்" என மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

காளியப்பனுக்கு ஊர்மக்கள் பேசிக்கொள்வது மயக்கநிலையிலும் கேட்கவே செய்தது. அவன், தட்டுத்தடுமாறிப் படுக்கையைவிட்டு எழுந்தான். அவர்களைப் பார்த்து, "ஐயா, நீங்கள் பேசியதையெல்லாம் கேட்டேன். நான் உங்களுக்கு எவ்வளவு தொல்லை கொடுத்து இருக்கிறேன் என்பது இப்பொழுதுதான் புரிகிறது. நான் மனந்திருந்திவிட்டேன். இனிமேல் யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யமாட்டேன். என்னை எல்லாரும் மன்னித்துவிடுங்கள்" என்றான்.

ஊர் மக்கள் பெரியவரின் அறிவுநுட்பம் கைகூடியதை எண்ணி மகிழ்ச்சி அடைந்தனர். எப்படியோ ஒரு போக்கிரியின் தொல்லையிலிருந்து தங்கள் ஊர் விடுபட்டதை, முரடன் மனந்திருந்தியதை எண்ணி, மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

நன்றி : ஓவியர் ராம்கி, கிராமியக் கதைகள் என்னும்
நூலிலிருந்து எடுத்தாளப்பட்டது.

## மாதிரி வினா

### கட்டுரை வினா

காளியப்பனின் மனமாற்றத்திற்கான காரணங்களைக் கட்டுரையாக எழுதுக.

# அறுவகைப் பெயர்ச்சொற்கள்

மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : வணக்கம். உட்காருங்கள். சென்ற பாடவேளையில் படித்த இடுகுறிப்பெயர், காரணப்பெயர் ஆகியவற்றில் ஐயமிருக்கிறதா ?

மாணவர் : இல்லை, அம்மா.

ஆசிரியர் : மகிழ்ச்சி. பூங்கொடி, கரும்பலகையில் எழுதியுள்ளதை அனைவருக்கும் கேட்கும்படி தெளிவாகப் படி.

பூங்கொடி : கண்ணன் பூண்டியில் படிக்கிறான். அவன் நாள்தோறும் நடந்தே வருகிறான். அவன் நண்பகல் உணவு கொண்டு வருகிறான். ஆடல், பாடல் ஆகிய இரண்டிலும் அவன் வல்லவன். அவன் முகம் வட்டவடிவில் அழகாக இருக்கும்.

ஆசிரியர் : இப்பத்தியிலுள்ள பெயர்ச்சொற்களைக் கூறுங்கள்.

எழிலி : பூண்டி, நண்பகல், உணவு...

ஆசிரியர் : இவை மட்டுந்தானா ?

செழியன் : கண்ணன், அவன், முகம்...

ஆசிரியர் : இன்னும் என்னென்ன பெயர்ச்சொற்கள் உள்ளன ? வேறு யாராவது கூற முடியுமா ?

வளவன் : இதற்குமேல் இருப்பதாகத் தெரியவில்லை அம்மா.

ஆசிரியர் : இன்னும் உண்டு. ஆடல், பாடல், வட்டம், அழகு ஆகியனவும் பெயர்ச்சொற்களே. பெயர்ச்சொற்களை இலக்கண நூலார் அறுவகைப்படுத்துவர்.

யாழினி : அம்மா, அவை என்னென்ன என்று கூறுங்களேன்.

ஆசிரியர் : பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என்பனவாம்.

எழிலி: : அம்மா, பொருட்பெயர் என்றால்....

ஆசிரியர் : பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர். இந்தப் பொருட்பெயர் இருவகைப்படும். அவை : உயிருள்ள பொருள், உயிரற்ற பொருள். உயிருள்ள பொருள்கள் : குமரன், மலர்க்கொடி, தென்னை, செம்பருத்தி, வெள்ளாடு, ஓணான்... முதலியன; உயிரற்ற பொருள்கள்: நாற்காலி, அடுப்பு, தட்டு, எண்ணெய், மண், நீர், காற்று... முதலியன. எழிலி, இப்போது விளங்கிற்றா ?

எழிலன் : தெளிவாகப் புரிந்துகொண்டேன், அம்மா. இடத்தைக் குறிப்பது இடப்பெயராகுமா அம்மா ?

ஆசிரியர் : அருமையாகக் கேட்டாய்! ஓரிடத்தைக் குறிப்பது இடப்பெயர்தான். வீடு, தெரு, பள்ளி, கோவில், மக்கள் வாழிடம், தோட்டம், காடு, மலை என இடங்களைக் குறிப்பனவெல்லாம் இடப்பெயர்தான். பூங்கொடி இவற்றிற்குரிய பெயர்களைச் சொல்.

பூங்கொடி : அன்பகம், பெரியார் தெரு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, திருநின்றவூர் என்னைப்பெற்ற தாயார் கோவில், திருமழிசை, வாழைத் தோட்டம், ஆர்க்காடு, கொல்லிமலை.

ஆசிரியர் : எல்லாவற்றிற்கும் கூறிவிட்டாயே. பூங்கொடியைப் பாராட்டிக் கையைத் தட்டுவோம். நீங்களும் இப்படிப் பல எடுத்துக்காட்டுகளை ஒருவருக்கொருவர் கூறிக் கொள்ளவேண்டும்.

வளவன் : அம்மா, அறுவகைப் பெயரில் காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயரா, அம்மா ?

ஆசிரியர் : ஆம். அதிலென்ன ஐயம் வளவா! கண் இமைக்கும் நொடிப்பொழுது முதல் ஊழிக்காலம்வரை எல்லாமே காலத்தைக் குறிக்கும் பெயர்கள்தாமே. சான்றாக நொடி, விநாடி, மணி, பொழுது, கிழமை, வாரம், திங்கள், ஆண்டு, பருவகாலம் என எல்லாமே காலப்பெயர்களே. வளவா! இக்காலங்களுக்கு எடுத்துக்காட்டுகள் சொல்.

வளவன் : ஐந்துநொடி, முப்பது விநாடி, பன்னிரண்டு மணி, விடியற்பொழுது, திங்கள்கிழமை, ஒருவாரம், தைத்திங்கள், ஆண்டு, மழைக்காலம்.

ஆசிரியர் : அருமை அருமை. அனைத்துக்கும் சொல்லிவிட்டாயே.

குழலி : சினைப்பெயர் என்றால் என்ன, அம்மா ?

ஆசிரியர் : இது மிகவும் எளிது. சினை என்பது ஒன்றன் உறுப்பைக் குறிப்பது. மனித உறுப்புகள், விலங்கு உறுப்புகள், தாவரப் பகுதிகள், பொருள் களின் பகுதிகள் என முழுமையான ஒன்றின் பகுதிகளைக் குறிக்கும் பெயர்கள் சினைப்பெயர்களாம்.

எழிலா! மனித உறுப்புகளின் பெயர்களையும், தாவரப் பகுதிகளின் பெயர்களையும் சொல்.

எழிலன் : தலை, கண், மூக்கு, செவி, நாக்கு, பல், வயிறு, கை, கால், விரல், நகம் முதலியனவும், வேர், தண்டு, கிளை, இலை, பூ, காய், கனி, விதை முதலியன சினைப்பெயர்கள், அம்மா!

ஆசிரியர் : அதிலென்ன ஐயம். நீ கூறிய அத்தனையும் சினைப்பெயர்கள்தாம். நன்றாகச் சொன்னாய். குமரா, குணப்பெயர் என்றால் என்னவென்று சொல்.

| | | |
|---|---|---|
| குமரன் | : | கோபம், அம்மா. |
| ஆசிரியர் | : | நன்றாகச் சொன்னாய்! அதைத் தமிழிலே சொல்லியிருக்கலாமே, தமிழில் சொல் இருக்கும்பொழுது, வேறு சொற்களைப் பயன் படுத்துவது நம்மொழிக்கு நாமே செய்யும் தீங்கல்லவா? குமரா, கோபத்திற்குத் தமிழ்ச்சொல் கூறு. |
| குமரன் | : | அம்மா, பேச்சுவழக்கில் சொல்லிப் பழகிவிட்டதால் கூறிவிட்டேன். இனிமேல் இத்தகைய பிழையைச் செய்யமாட்டேன். கோபத் திற்கான தமிழ்ச்சொல் சினம்தானே அம்மா! |
| ஆசிரியர் | : | அதிலென்ன ஐயம்? நீ சொன்னது செந்தமிழ்ச்சொல்தான். குணப் பெயரைப் பண்புப்பெயர் எனவும் கூறுவர். குணப்பெயர்கள் நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப்படும்.. வேலா, நிறப்பெயர்களையும் சுவைப் பெயர்களையும் சொல். |
| வேலன் | : | ஏழு நிறங்கள், அறுசுவைகள் அம்மா. |
| ஆசிரியர் | : | குணா, அளவு, வடிவப் பெயர்களைச் சொல். |
| குணா | : | பத்து மீட்டர் துணி, ஐந்துபடி எண்ணெய், பத்துக்கிலோ அரிசி; வட்டப் பலகை, சதுரவீடு, செவ்வகப் புத்தகம், முக்கோணக் கூம்பு அம்மா. |
| ஆசிரியர் | : | தெள்ளத்தெளிவாகச் சொன்னாய், குணா, அறுவகைப் பெயர்களில் இறுதியாக நான் கூறிய பெயர்வகை என்னவென்று சொல், அகிலன். |
| அகிலன் | : | தொழிற்பெயர், அம்மா. |
| ஆசிரியர் | : | நன்றாக நினைவில் வைத்திருக்கிறாய். தொழிற்பெயர் என்றால் என்ன? யாருக்குத் தெரியும்? சொல்லுங்கள். |
| கீரன் | : | ஆசிரியர் அம்மா. |
| ஆசிரியர் | : | கீரன், நீ கூறியது தொழில் செய்பவரைப்பற்றி, ஆனால், நான் கேட்டது அவர் செய்யும் தொழில்பற்றி... விளங்குகிறதா? |
| கீரன் | : | ஆம், அம்மா. படித்தல், கற்பித்தல் இவை தொழில் பெயர்கள்தாமே. |
| ஆசிரியர் | : | ஆமாம். செய்யும் தொழிலைக் குறிக்கும் பெயர்களெல்லாம் தொழிற் பெயர்களே. பூங்கொடி கரும்பலகையில் படித்த பெயர்ச்சொற்களை எழுதி அவற்றை, அறுவகைப் பெயர்களாக வகைப்படுத்துங்கள். |
| மாணவர் | : | வகைப்படுத்துகிறோம் அம்மா. |

| பெயர் வகை | பெயர் |
|---|---|
| பொருட்பெயர் | கண்ணன், நாற்காலி |
| இடப்பெயர் | வேலூர், நாமக்கல் |

| | |
|---|---|
| காலப்பெயர் | தைத்திங்கள், நண்பகல் |
| சினைப்பெயர் | முகம், கை |
| குணப்பெயர் | வட்டம், அழகு |
| தொழிற்பெயர் | ஆடல், பாடல் |

ஆசிரியர் : பிழையில்லாமல் எழுதியிருக்கிறீர்கள். மகிழ்ச்சி.

பயிற்சி : கீழுள்ள சொற்றொடரில் அமைந்துள்ள அறுவகைப் பெயர்களை வகைப்படுத்துக.

எழிலன் காலையில் தோட்டத்திற்குள் சென்றான். மரக்கிளையில் பச்சைக்கிளி உட்கார்ந்திருப்பதைக் கண்டான். குயிலின் பாடல்கேட்டு மகிழ்ந்தான்.

1. 3. 5.

2. 4. 6.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்வு செய்க.

1. மதுரை என்பது ____________ பெயர்.
   அ) காலப்பெயர் ஆ) குணப்பெயர் இ) இடப்பெயர்
2. பூங்கொடி பூப் பறிக்கிறாள். இத்தொடரிலுள்ள 'பூ' என்பது ____________ பெயர்.
   அ) பொருட்பெயர் ஆ) சினைப்பெயர் இ) தொழிற்பெயர்
3. சதுரம் – இது ____________ பெயர்.
   அ) பொருட்பெயர் ஆ) காலப்பெயர் இ) குணப்பெயர்

2. கோடிட்ட இடங்களில் ஏற்ற பெயர்ச்சொற்களை எழுதுக.

அ) ____________ அசைகிறது.
ஆ) ____________ பூசை நடக்கிறது.
இ) ____________ பள்ளிக்கு விடுமுறை.
ஈ) ____________ உடைந்து விட்டது.
உ) ____________ மூன்று கோணங்களை உடையது.
எ) ____________ வல்லவன் இராமன்.

### ஆ) குறுவினாக்கள்

1. அறுவகைப்பெயர்கள் யாவை?
2. காலப்பெயர்கள் நான்கனை எழுதுக.
3. சினைப்பெயர்கள் நான்கனை எழுதுக.
4. இடப்பெயர்கள் நான்கனை எழுதுக.

### இ) சிறுவினாக்கள்

1. அறுவகைப்பெயர்ச்சொற்களை எழுதுக.
2. நும் பாடப்பகுதியில் உள்ள பெயர்ச்சொற்களைத் தொகுத்து வகைப்படுத்துக.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

'காளியப்பன்' போன்றோர் வளரக் காரணம்' – கலந்துரையாடுக.

### ஆ) எழுதுதல் திறன்

#### பொருளுணர்ந்து முறைப்படுத்திப் பத்தியமைத்து எழுதுதல் (மாதிரி)

(எ–டு)

1. கவியரசு கண்ணதாசன் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களைப் இயற்றியுள்ளார்.
2. சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் 1927ஆம் ஆண்டு கண்ணதாசன் பிறந்தார்.
3. தமிழக அரசின் அரசவைக் கவிஞராக விளங்கினார்.
4. இவரின் இயற்பெயர் முத்தையா.
5. இவர் 1981ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.
6. இவருக்குக் காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கியநாதன், கமகப்பிரியா எனப் புனைபெயர்கள் பல உண்டு.

#### முறைப்படுத்தப்பட்ட பத்தி

சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் 1927ஆம் ஆண்டு கண்ணதாசன் பிறந்தார். இவரின் இயற்பெயர் முத்தையா. இவருக்குக் காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கிய நாதன், கமகப்பிரியா எனப் பல புனைபெயர்கள் உண்டு. கவியரசு கண்ணதாசன் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களைப் இயற்றியுள்ளார். தமிழக அரசின் அரசவைக் கவிஞராக விளங்கினார். இவர் 1981 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

#### பயிற்சி

#### பொருளுணர்ந்து முறைப்படுத்திப் பத்தியமைத்து எழுதுதல்

1. நீ அழுகையை நிறுத்தாவிட்டால் ஓநாயிடம் தூக்கிப் போட்டுவிடுவேன் என்று குழந்தையிடம் கூறினாள் அவள்.
2. குடிசையின் உள்ளே சிறு பையன் அழுதுகொண்டிருந்தான்.
3. இதைக்கேட்ட ஓநாய், குடிசைக்கு வெளியே நெடுநேரம் காத்துக்கொண்டிருந்தது.
4. பசியோடு உணவுதேடி அலைந்துகொண்டிருந்த ஓநாய், ஒரு குடிசைவீட்டின் அருகே வந்தது.
5. இங்கு மக்கள் பேசுவது ஒன்று; செய்வது வேறு ஒன்றாக இருக்கிறது என்று எண்ணிக் கொண்டே ஓநாய் சென்றது.
6. திடீரென்று 'என் கண்ணே, அழாதே. உன்னை ஓநாயிடம் போடமாட்டேன். ஓநாய் இந்தப் பக்கம் வரட்டும். அதை அடித்துக் கொன்றுவிடுவோம்' என்றாள்.

**இ) செயல் திட்டம் :** உங்களூர்த் திருவிழாவில் தொடக்கம்முதல் இறுதிவரை நடைபெறும் செயல்பாடுகளைத் தொகுத்தெழுதுக.

## மொழித்திறன் பயிற்சி

### அ) நேர் இணைச்சொற்கள் - எதிர் இணைச்சொற்கள்

நாம் செய்திகளையும் கருத்துகளையும் பிறரிடம் கூறும்பொழுது சுவைபடக் கூறுவதற்காக ஒரே பொருள்தரும் இருசொற்களைப் பயன்படுத்துவது உண்டு. அவை நேர் இணைச்சொற்கள் எனப்படும்.

(எ–டு) 1. காவேரி கண்ணுங்கருத்துமாகப் படிப்பாள்.
2. வளவனின் தந்தை பேரும்புகழும் மிக்கவர்.

இத்தொடர்களில் உள்ள கண்ணுங்கருத்தும், பேரும்புகழும் ஆகியன நேர் இணைச்சொற்கள். எதிரான கருத்தைக் கூறும்பொழுது எதிர்ப்பொருள் தரும் சொற்களைப் பயன்படுத்துதல் எதிர் இணைச்சொற்கள்.

(எ–டு) 1. கோபாலன் உயர்வுதாழ்வின்றி அனைவரிடமும் பழகும் பண்பாளர்.
2. மலர்க்கொடியின் தந்தை அல்லும் பகலும் அயராது உழைத்தவர்.

இத்தொடர்களில் உயர்வுதாழ்வின்றி, அல்லும்பகலும் என்பன எதிர் இணைச்சொற்கள்.

பயிற்சி

1. கீழ்க்காணும் நேர் இணைச்சொற்களையும், எதிர் இணைச்சொற்களையும் தொடர்களில் அமைக்க.

1. ஈடுஇணையற்ற 2. குற்றங்குறை 3. தங்குதடையின்றி
4. அல்லும்பகலும் 5. ஓங்கி உயர்ந்த 6. கீரியும் பாம்பும்

2. உரிய இணைச்சொற்களை எடுத்துக் கோடிட்ட இடங்களில் நிரப்புக.

(இரவுபகல், ஏற்றத்தாழ்வு, கற்றோரும் மற்றோரும், அடித்துப்பிடித்து, பத்திப்பத்தியாக)

1. அண்ணல் அம்பேத்கர் சமுதாயத்தில் காணப்படும் ______________ களையப் பாடுபட்டார்.
2. கட்டுரை எழுதும்போது ______________ எழுதவேண்டும்.
3. உலகம், சூரியனைச் சுற்றுவதால் ______________ தோன்றுகிறது.
4. பேருந்தில் இடம்பிடிக்க ______________ ஏறினேன்.
5. நேருவின் அறிவாற்றலைக் ______________ போற்றிப் புகழ்ந்தனர்.

### ஆ) அரபு எண்ணுக்குரிய தமிழெண்ணைப் பொருத்துக.

| | அரபு | | தமிழ் | | அரபு | | தமிழ் |
|---|---|---|---|---|---|---|---|
| அ) | 7 | – | உ | ஈ) | 2 | – | ு |
| ஆ) | 5 | – | கூ | உ) | 9 | – | கO |
| இ) | 10 | – | எ | | | | |

### இ) கடிதம் எழுதுதல் : ஊர்த்திருவிழாவிற்கு நண்பனை வருமாறு அழைத்துக் கடிதம் எழுதுதல்.

### ஈ) அகரவரிசையில் அமைத்தல்

மெய்யெழுத்து வரிசையறிதல்: க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டு மெய்யெழுத்துகளும் உயிர் எழுத்தையோ உயிர்மெய்யெழுத்தையோ தொடர்ந்து மெய்யெழுத்து வரிசையாக வரும்.

பயிற்சி

கீழுள்ள சொற்களில் இரண்டாம் எழுத்து, மெய்யெழுத்து வரிசையில் அமையும்படி சொற்களை அமைக்க.

அம்மா, அப்பம், அங்கை, அஞ்சு, அக்கா, அத்தை, அச்சம், அன்பு, அந்தி, அண்ணி, அட்டை, அய்யா, அர்ப்பணி, அவ்வை, அல்லல், அள்ளல், அற்றம்.

## பண்பு

### கேட்டுப்பெறுதல்

தாமரை ஏழாம் வகுப்பில் படிக்கிறாள். அவளைப் பற்றி அறிந்தால் உங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்ல விரும்பமாட்டீர்கள். ஏனென்றால் அவளுக்குப் பிடித்த பொருளாக இருந்தால், யாரையும் கேட்காமல் உரிமையோடு எடுத்துக்கொள்வாள். பலரும் பலமுறை அறிவுறுத்தியும் அவளால் அந்தப் பழக்கத்தை விடவே முடியவில்லை. ஒருவருக்கு உரிமையான பொருளை, அவர் அனுமதியின்றி எடுத்துக்கொள்வது தவறில்லையா?

கூடிப் பேசுவோம்

1. தாமரை போன்றோரை உங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்வீர்களா?
2. நீங்கள் எப்போதாவது தாமரையைப் போன்று நடந்து கொண்டதுண்டா?
3. தாமரையின் செயலைத் திருத்தாமல் வளரவிட்டால் என்ன ஆகும்?
4. தாமரையின் பழக்கத்தை மாற்றுவது எப்படி?

## வாழ்க்கைத்திறன்

### சிக்கலுக்குத் தீர்வு காணல்

நம் வாழ்வில் எதிர்கொள்ளும் சிக்கலுக்கு ஆக்கப்பூர்வமான வழியைத் தேர்ந்தெடுக்கவும் அவற்றிற்கு எளிதாகத் தீர்வு காணவும் சிக்கலுக்குத் தீர்வு காணும் திறன் உதவுகிறது. குமரனுக்குக் கால்பந்து விளையாடுவதென்றால் மிகவும் பிடிக்கும். படிக்கும் நேரம் தவிர, மற்ற நேரங்களிலெல்லாம் கால்பந்தாட்டம் ஆடிக்கொண்டிருப்பான். ஆனால், அவனுடைய தந்தைக்கோ அவனைச் சிறந்த நீச்சல் வீரனாக்கிப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. குமரனுக்கு ஏற்பட்ட சிக்கலுக்குத் தீர்வு என்ன?

நீங்களாக இருந்தால் என்ன செய்வீர்கள் ?

## மதிப்புக்கல்வி

### நாட்டுப்பற்று

ஜெர்மனி நாட்டின் கொடுங்கோலராகக் கருதப்பட்டவர் ஹிட்லர். 'இந்தியாவுக்கு விடுதலை கிடைத்தால், நாட்டைத் திறமையாக ஆட்சிபுரியும் தகுதி இந்தியருக்கு இருக்கிறதா என்பது ஐயமே' என்று இந்தியர்களைக் குறைத்து மதிப்பிட்டு, ஒருமுறை அவர் கருத்துக் கூறினார். இதைக்கேட்ட செண்பகராமன் கொதித்தெழுந்தார். ஹிட்லருக்கு எதிராகத் திறமையாக வாதாடி, எழுத்து மூலம் ஹிட்லரை மன்னிப்புக் கேட்கச் செய்தார். உலகையே நடுங்கச்செய்த கொடுங்கோலராக இருந்தாலும் அவரையே மன்னிப்புக் கேட்கச்செய்த மாவீரன் செண்பகராமனின் நாட்டுப்பற்று போற்றுதற்குரியதாகும்.

பெற்ற தாயையும் பிறந்த நாட்டையும் மதிக்கக் கற்றுக்கொள்ளாதவன் கற்றும் பதராகவே கருதப்படுவான். ஆகவே, ஒவ்வொருவரும் பெற்ற தாய்க்கும் நாட்டுக்கும் பேரும்புகழும் சேர்க்க வேண்டும்.